ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: :: ஜூன் 1954 [இதழ் 6

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

இந்தியாவில் அந்நியக் கிறிஸ்தவ மிஷனரிகள் சிலர் முறை தவறி நடப்பதுபற்றியும் அதற்கு என்ன பரிகாரம் என்பது பற்றியும், ஒரு வருஷத்துக்கு முன் ஸ்வீடன் நாட்டு ப்ரிமேட், அதாவது ஆர்ச்பிஷப்புக்குப் பண்டித நேரு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் சில நாளைக்கு முன்பு வெளியாயிருக்கிறது. இந்தியப் பண்பாடுகளையும் இந்தியாவையும் அந்நிய மிஷனரிகள் சிலர் தூஷிப்பது தவறு. இந்திய சர்க்காருக்கு விரோதமாக வட கிழக்கு எல்லையில் மலை ஜாதியினரைச் சில மிஷனரிகள் தூண்டிவிட்டார்களாம். இது பெரிய விஷமத்தனமாகும். இவைகளை விட்டு, தங்கள் மத தத்துவங்களை அவர்கள் பிரசாரம் செய்வதில் யாருக்கும் ஆட்சேபமில்லை. தவிர, ஆதியிலிருந்து பல மிஷனரிகள் இந்திய பாஷைகளையும் இலக்கியங்களையும் வளர்க்க உதவியிருக்கிறார்கள்; பரோபகாரச் செயல்கள் புரிந்திருக்கிறார்கள்; கல்வியைப் பரப்பியிருக்கிறார்கள். அவைகளைப் பாராட்டாதவர் இல்லை. ஆனால் சில மிஷனரிகள் அறிந்தோ அறியாமலோ இந்தியாவுக்குத் தீங்கான காரியங்களில் இறங்கும்போதுதான், நாம் கண்டிக்க வேண்டியிருக்கிறது.

நேருவின் கடிதத்தில் இன்னொன்று கூறியிருக்கிறார். அந்நிய நாட்டுச் சர்ச்சு, அதாவது திருச்சபைகளைச் சேர்ந்த மிஷனரிகள் இங்கே வந்தால், அவர்களுக்கு இந்த நாட்டு நாகரிகமும் பண்பாடும் பெரும்பாலும் புரிவதில்லை. அதனால்தான் இந்த விபரீதத்துக்கு இடமாகிறது. இந்தியாவில் சுமார் 2,000 வருஷ காலமாக - கிறிஸ்து நாதர் காலத்திலேயே தோன்றி இன்று வரையில் - இருந்து வருகிறது ஸிரியன் கிறிஸ்தவ சர்ச்சு. கத்தோலிக் சர்ச்சு முந்நூறு வருஷங்களுக்கு மேலாக இங்கே இருந்து வருகிறது. ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வேறு சில சர்ச்சுகளும் இருந்து வருகின்றன. இப்படி இருக்க, வெளிநாட்டுச் சம்பந்தமும் உதவியும் அற்றுச் சுதந்தரமான ஒரு சர்ச்சு இந்தியாவுக்கே உரியதாக ஏன் உருவாகக் கூடாது? அதற்கு இத்தனை காலம் போதாதா என்று நேரு கேட்கிறார். நியாயமான கேள்விதானே? இந்தியாவுக்குள் கிறிஸ்து தத்துவங்களைப் பிரசாரம் செய்ய அந்நியர் எதற்காக வர வேண்டும்? இந்தியப் புதல்வர்களான கிறிஸ்தவர்களே திருச்சபையின் நிர்வாகிகளும் முதல்வர்களுமாகி அந்த அலுவலை ஏன் புரியக்கூடாது?

இந்திய சர்க்காரின் ஐந்து வருஷ திட்டத்துக்கு மக்களிடம் கடன் வாங்குவதில் புதுமையானதொரு முறையை அநுஷ்டிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். நிதி மந்திரி தேஷ்முக் அதை விளக்கியிருக்கிறார். நம் தேசத்தில் பெண்கள் தங்க வைர நகைகளை அணிவதில் மோகமுள்ளவர்கள். மற்ற நாட்டுப் பெண்களை விட அதிகமாக இவற்றை அணிகிறவர் நம் நாட்டுப் பெண்கள். தங்க, வைர நகைகளைக் கடனுக்காகச் சர்க்கார் நேரே வாங்கிக் கொள்ள மாட்டார்கள். சர்க்கார் நியமித்த பாங்குகள் இவற்றை வாங்கி விற்று, அந்தப் பணத்தைச் சர்க்காரிடம் கொடுக்கும். நகைகளைக் கொடுத்தவர், இந்தப் பணத்துக்குரிய கடன் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வார்கள். பண்டித நேருவே முதல் முதலாகத் தம் வசமுள்ள லட்சம் ரூபாய் வரையில் பெறுமானமுள்ள தங்க, வைர நகைகளை இதற்காகக் கொடுக்க இசைந்துவிட்டார். ஏற்பாடு ரசமாய்த்தான் இருக்கிறது. மகாத்மா காந்தி நிதி வசூலிக்கும்போது இப்படி நகைகளை வாங்கியதுண்டு. அதைப் பின்பற்றியே இந்த யுக்தி செய்திருக்கிறார்கள்போல் இருக்கிறது. இது எப்படி வேலை செய்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதனால் சில தமாஷ்களும் விளையலாம்.

இதே சமயத்தில் பொது மக்களின் பணம் எப்படிக் கொள்ளை போகிறது என்று விளக்கும் ஒரு நிகழ்ச்சியும் வெளியாகியிருக்கிறது. ஒன்றுக்கும் உதவாத தண்டவாளங்களை இந்திய ரெயில்வேக்களுக்கென்று வாங்கியதில் ஒன்பது லட்ச ரூபாயை இந்திய சர்க்கார் இழந்துவிட்டார்களாம். இந்த மாதிரி வெளிவந்த கொள்ளைகள் சில; வெளிவராத கொள்ளைகள் எத்தனையோ. மத்திய சர்க்காரில் அபிவிருத்தித் திட்டங்களுக்கென்று பிற மந்திரிகளின் இலாகாக்கள் செலவழிக்கும் பணக் கணக்கையெல்லாம் நிதி மந்திரி இலாகாதார் கண்காணிக்கிறார்களாம். இதனால் பல திட்டங்களுக்குக் குந்தகம் ஏற்படுகிறதாம். இது பிற மந்திரிகளுக்குப் பிடிக்கவில்லை. இப்படிக் கண்காணிப்பதால்தான் எவ்வளவோ பணத்தைக் காப்பாற்றினோம் என்கிறார்கள் நிதிமந்திரி இலாகாக்காரர்கள். இந்த வாதப் பிரதிவாத நியாயமெல்லாம் எப்படிப் போனாலும் சரி; பொதுமக்களின் பணத்தைச் செலவழிப்பதில் மந்திரி முதல் கீழ் உத்தியோகஸ்தர் வரையில் அத்தனை பேரும் விழிப்புடனும் பொறுப்பாகவும் நாணயத்தோடும் நடந்துகொள்வது மிக்க அவசியம். தவறு செய்கிறவர்கள் மீது நிர்த்தாட்சிண்ணியமாகவும் கடுமையாகவும் நடவடிக்கை எடுப்பதும் முக்கியம்.

தெய்வமும் முயற்சியும்

வீரர்களே, கடவுளை நம்புங்கள். ஆயினும் வெடி மருந்து ஈரமாகிவிடாமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

—க்ராம்வெல்

இலங்கை தமிழுக்குத்தான் எவ்வளவு
தூரம் கடமைப்பட்டிருக்கிறது!

தமிழர் வளர்த்த சிங்களம்

'மணி'

இலங்கை ஒரு காலத்தில் இந்தியாவோடு இணைந்திருந்தது என்றும், அப்போது இந்தியாவிலிருந்து மக்கள் இலங்கைக்கு நடந்துவந்தார்கள் என்றும் புராதன சரித்திரக்காரர் கூறுகிறார்கள். இவர்கள் கருத்தின்படி பாக்ஸ் ஜலசந்தி ஏற்பட்டதன் பிறகே இலங்கை இந்தியத் தொடர்பு சிறிது தடைப்பட்டதென்று தெரிகிறது. அது எப்படியானாலும் இந்த இரண்டு நாடுகளின் தொடர்பு இன்று நேற்றல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டது என்பது மறக்க முடியாத உண்மை.

ஆயினும் இலங்கைச் சரித்திரம் விஜயனையே சிங்கள மக்களின் தந்தையாகக் குறிப்பிடுகிறது. சரித்திர காலத்தில் இலங்கைக்கு வந்த முதல் இந்தியன் இவனே. 700 சகாக்களுடன் இங்கே வந்த விஜயன், அப்போது இலங்கையில் வாழ்ந்த குவேனி என்னும் அரசியை வசப்படுத்தி, அவள் மூலம் அவளுடைய சுற்றத்தாரை வென்று இலங்கையின் அரசனானான். நாட்டின் அதிகாரம் தன் கைக்கு வந்ததும் குவேனியை விரட்டிவிட்டு, பாண்டிய இளவரசியை மணந்தோடு, தன் சகாக்களுக்கும் பாண்டிய நாட்டிலிருந்தே பெண்களைக் கொணர்ந்தான் என்று இலங்கைச் சரித்திரம் கூறுகிறது.

இலங்கை தொன்றுதொட்டு வட இந்தியாவோடு மாத்திரமே தொடர்பு கொண்டிருந்ததென்று சாதிக்கத் துணியும் சிலர், "சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாண்டிய நாடு, தென்னிந்தியப் பாண்டிய நாடு அல்ல; அது வட இந்தியாவில் எங்கோ ஒரு மூலையில் இருந்த நாடு" என்கிறார்கள். பண்பட்ட சரித்திராசிரியர் இந்தக் கருத்தை முற்றும் மறுக்கிறார்கள்.

தொன்றுதொட்டு யுத்தம் காரணமாகவும் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடும் தொழில் தேடியும், இந்தியர் - முக்கியமாகத் தமிழர் - இலங்கைக்கு அடிக்கடி வரத்தொடங்கினார்கள். நாகரிகம் படைத்த தமிழர் இங்கே வரத்தொடங்கியதும், இந்த நாட்டு மக்களிடையே பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. பண்பட்ட தமிழரின் நடையுடை பாவனைகளை, இங்கிருந்தவர்கள் பின்பற்றினார்கள். தம் ஆசார முறைகளை மாற்றி அமைத்துக்கொண்டார்கள். தாம், பேசும் மொழியிலும் மாற்றம் கண்டார்கள். அதன் பயனாக இந்த நாட்டிலே ஒரு புது மொழி தோன்றியது. அதைத்தான் நாம் சிங்களம் என்கிறோம்.

மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்: மார்ச் '54), கொழும்பு.

சிங்கள மொழி வளர்வதற்கு, முதலில் சம்ஸ்கிருதமும், பாளி மொழியும் பின்னல் தமிழ் மொழியும் பெரிதும் உதவின. இப்படி விருத்தியடைந்த சிங்கள மொழி 10-ஆம் நூற்றுண்டிலே மறுமலர்ச்சி காணத் தொடங்கியது.

அடிக்கடி தமிழர்கள் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தார்கள். கடைசியாக 11-ஆம் நூற்றுண்டில் சோழர் இலங்கைக்குப் படையெடுத்து வந்து இலங்கையைக் கைப்பற்றி, பொலன்னறுவையை ராஜதானியாக்கிக் கொண்டு ஆட்சி செய்தார்கள். தமிழ்க் கலையை இலங்கையில் பரவச் செய்தார்கள். இந்தக் காலத்திலே தமிழின் செல்வாக்கு நாட்டில் பரவியது. அப்பரும் சுந்தரரும் மாணிக்கவாசகரும் தோன்றி, சைவத் தென்றலை வீசி மறைந்த காலமாதலால், சோழரின் சைவப்பற்று இலங்கையில் எங்கும் மணம் வீசியது. இப்போதுதான் தமிழின் பெருமையை இலங்கை உணர்ந்தது. இலங்கையிலிருந்த பல சிங்களப் புலவர்கள் தமிழை நன்கு கற்றுத் தமிழின்பம் சுவைத்தார்கள். இதன் பயனுகத் தோன்றியது 'சிதத் சங்கராவ' என்று பெயர் பெற்ற சிங்கள மொழியின் தலை சிறந்த இலக்கணம். இந்த நூலை, 12-ஆம் நூற்றுண்டிலே வாழ்ந்த 'பிரதிராஜ' என்ற 'பிரிவேனு'வின்—அதாவது, கீழ்நாட்டுக் கல்லூரியின் - தலைமைப் புத்த குரு எழுதினர். இது தமிழ் இலக்கண நூலான வீரசோழியத்தைப் பின்பற்றி எழுந்ததென்று டாக்டர் சி. ஈ. கொடகும்புற என்ற பன்மொழிப் புலமையாளர் குறிப்பிட்டிருக்கிறர்.

12-ஆம் நூற்றுண்டின் பின்னே இந்த நாட்டின் சரித்திரத்தில் தமிழ் மணம் வீசியது. முதலில் அநுராதபுரியிலும், பின்பு பொலன்னறுவையிலும் தம்பதேனியிலும் இருந்து அரசு செலுத்திய சிங்கள மன்னர்கள் 15-ஆம் நூற்றுண்டுக்குப் பின்பு, கோட்டையை ராஜதானியாக்கிக்கொண்டார்கள். இந்தக் காலத்தில் தமிழ்ப்பழக்க வழக்கங்கள் சிங்களரிடையே வேரூன்றின. தமிழிலே தூது காவியங்கள் தோன்றி, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியங்களோடு சேர்ந்து வாழ முடியாது அழிந்தொழிந்தன. ஆனல் அவைகளைப் பின்பற்றி எழுந்த சிங்கள சந்தேச காவியங்கள் சிங்கள இலக்கியத்தின் முன் வரிசையில் வைத்தெண்ணப்படும் இலக்கியங்களாயின. ஆறும் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் சிரிராகுல என்ற புலவர் வாழ்ந்தார். தமிழ், சம்ஸ்கிருதம், சிங்களம், பாளி முதலிய பாஷைகளை இவர் கற்றுத் தேர்ந்திருந்தார். தமிழ் இலக்கியங்களில் தாம் கற்ற விஷயங்களைத் தாராளமாகச் சிங்களத்தில் இவர் கையாண்டார். இவர் காலத்தில் தமிழ் முக்கிய பாடமாக எல்லாப் பிரிவேனுக்களிலும் கற்பிக்கப் பெற்றது என்று, தக்க ஆதாரங்களுடன் காட்டுகிறர் டாக்டர் கொடகும்புற. 16-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த இன்னும் ஒரு புலவருக்கு அழகிய வன்ன மொஹெட்டால என்று பெயர். தாம் 'சுபாசித்திய' என்ற சிங்கள நீதிநூலை எழுதத் தமிழ் நூல்களிலிருந்து கருத்துக்கள் பெற்ற

தாகத் தம் நூலில் இவர் கூறுகிறார். 'தெமல சக்கு மகதத்' என்ற அடியில், 'தமிழ், சம்ஸ்கிருதம், பாளி முதலிய மொழிகளிலிருந்து கருத்துக்கள் பெற்றேன்' என்கிறார்.

17-ஆம் நூற்றாண்டிலே கிரிமிட்டியாவை என்ற இடத்தில் ஒரு புலவர் வாழ்ந்தார். இவரை அந்தக் கால மக்கள் கிரிமிட்டியாவைக் கவிஞர் என்றழைத்தார்கள். இவர் பாரதக் கதையைச் சிங்களத்தில் பாடினார். பாரதக் கதையைச் சம்ஸ்கிருதத்திலிருந்து இவர் மொழிபெயர்த்திருப்பார் என்று சிலர் கூறக்கூடும். கவிஞரே தம் நூலின் முதல் பாடல்களில், சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் எழுதப் பெற்ற நூலை வாசித்து அதையே மொழிபெயர்ப்பதாகக் கூறுகிறார்:

தெமலென் கிவு போரண
சிங்ஹல பஸின்ம கியன
துட்ட வரதக் நொகென
இவஸா மென் கருகர
நெணத்தி தன.

இதன் பொருள்: "தமிழில் கூறப்பெற்ற புராணக் கதையைச் சிங்களத்தில் கூறுகிறேன். குற்றங்களைந்து குணமறிந்துகொள்ளுவது கற்றறிந்த உங்கள் கடன்."

இவர் 'வேதாளன் கதாவ' என்ற விக்கிரமாதித்தனின் வேதாளக் கதையையும் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

போரண மே கத்தாவய
தெமலென் தீபு கத்தாவய
மெமசித், இத்தா மய
கியம் வேத்தாலன் கத்தாவய.

இனி வருவோம் 18-ஆம் நூற்றாண்டுக்கு. இந்தக் காலத்திலே தொடம்வலைக் கவிஞர் வாழ்ந்தார். இவர் அரிச்சந்திரன் கதையைத் தமிழிலிருந்து சிங்களத்தில் மொழிபெயர்த்தார். புஞ்சி பண்டார சன்னஸ்கல என்பவர், 'சிங்கள இலக்கியச் சரித்திர'த்தில், "இந்தக் கதை தமிழிலிருந்தே மொழிபெயர்க்கப் பெற்றது" என்று ஒப்புக்கொள்ளுகிறார்.

இவர் காலத்தில் வாழ்ந்த இன்னுமொரு புலவருக்கு அபய சுந்தர முதலி என்று பெயர். இவர் வள்ளி-முருகன் கதையை 'வள்ளி மாதா கதாவ' என்ற தலைப்பில் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

இதுவரைக்கும் சிங்கள இலக்கியம் வளர்த்த புலவர்கள் தமிழ் கற்றறிந்திருந்தார்கள் என்பதைப்பற்றிக் குறிப்பிட்டேன். இனிச் சிங்கள நூல்களை எழுதிய தமிழர்களைக் கவனிக்கலாம்.

கோட்டையிலிருந்து ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் அரசாண்ட காலத்திலே பாண்டிய நாட்டிலிருந்து நல்லூர்த் துணையார் என்ற தமிழ் வீரன் இலங்கைக்கு வந்தான். இவன் பராக்கிரமபாகுவின் படையில் சேர்ந்து தன் திறமையினால் அரசனின் நன்மதிப்பைப் பெற்றான். இந்த வீரன் தமிழை நன்றாய்க் கற்றறிந்ததோடு, தமிழில் அளவில்லாத ஆர்வமும் கொண்டிருந்தான். இவனுடைய விவேகத்தையும் வீரச் செயல்களையும் கண்ட அரசன், இவனைத் தன் முதல் மந்திரியாகவும் ஆலோசகனாகவும் நியமித்துக்கொண்டான். நல்லூர்த்துணையார் சிறிது காலத்துள் சிங்களத்தை நன்றாய்க் கற்றுச் சிங்களத்தில் நிகண்டு இல்லாத குறையை நிவர்த்திப்

பதற்காக, தமிழ் நிகண்டு முறையைப் பின்பற்றி, 'சிங்கள நாமாவலிய' என்ற நூலை எழுதினன். சிங்களத்தில் எழுதப்பெற்ற முதல் நிகண்டு இதுவே. பராக்கிரமபாகு மன்னன் தன் குமாரி லோகநாத தேவியை இந்தத் தமிழ் வீரனுக்கு மணம் செய்து வைத்தான். அரசனின் குமாரியை மணந்ததும் இந்த வீரன் அவளுடைய பெயரை 'உலகுடைய தேவி' என்று மாற்றினன். சிங்களம் கற்றும் இவன் தமிழின் பெருமையை மறக்கவில்லை!

இந்த வீரனின் பெயர் சிங்கள நூல்களில் நன்னூர்த்துணையார் என்றும், நன்னுருதுணையார் என்றும், நல்லூர்த்துணையார் என்றும் பலவிதமாகக் காணப்படுகிறது.

இவன் காலத்திலே பாடப்பெற்ற நீண்ட சிங்களத் தூது காவியம் 'கோகிலஸந்தேஸ' என்பது. இதைத் தமிழில் 'குயில் விடு தூது' என்று சொல்லலாம். இதைப் பாடியவர் தமிழிலும் சிங்களத்திலும் நல்ல பாண்டித்தியம் பெற்றவராய் விளங்குகிறார். இவருடைய பெயர் இருகல் மைத்திரேய. இவர் தமிழராக இருக்கலாமென்று சிங்கள இலக்கிய விமர்சகர்கள் கருதுகிறார்கள். இருகல் என்பது தமிழோசையைத் தருவதால் இப்படிக் கருதுகிறார்கள்.

19-ஆம் நூற்றாண்டில் ஏ. வி. நமசிவாய முதலியார் என்பவர் களுத்துறைக் கோர்ட்டு முதலியாராகக் கடமை பார்த்தார். இவர் ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம், சிங்களம் ஆகிய பல மொழிகளைக் கற்று நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தார். கோர்ட்டு முதலியாராக இருந்த இவருக்குச் சிங்களம் சரிவரத் தெரியாது என்று இவருடைய சிங்கள நண்பர்கள் கருதினர்கள். அவர்களுக்குத் தம் சிங்கள மொழிப் புலமையைக் காட்ட நினைத்த முதலியார், சிங்களத்தில் 'பஞ்சதந்திர'த்தை எழுதினர். இதுவே சிங்களத்தில் எழுதப் பெற்ற முதல் மொழிபெயர்ப்பு உரைநடை நூல். இது தவிர, 'குடும்ப சம்ரட்சிணி' என்ற ஒரு நூலையும் இவர் சிங்களத்தில் எழுதினர். இவருடைய சேவையை இன்றும் சிங்களவர்கள் பெருமையுடன் எடுத்துரைக்கிறார்கள். 'சிங்கள நாவல்' என்ற நூலை எழுதிய டாக்டர் ஈ. ஆர். சரத்சந்திரா தம் நூலில் இவருக்கு முதலிடம் அளித்திருக்கிறார்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பல சிங்களப் பெரியார்கள் தமிழ் கற்றுத் தமிழிலக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஹிஸ்ஸெல்லே தர்மரத்ன என்ற பௌத்த குரு, சமீபத்தில் மணிமேகலையைச் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். இவர் தமிழில் பண்டித பரீட்சையில் தேறிப் பட்டமும் பெற்றவர்.

சாத்தியமும் அசாத்தியமும்

பணம், விருது, பதவி இவைகளைப் பெறுவது எல்லாருக்கும் சாத்தியம் அல்ல; ஆனல் நல்லவனுகவும் தயாள குணமுள்ளவனுகவும் புத்திசாலியாகவும் இருப்பது எல்லாருக்கும் சாத்தியம்.

—வாவனர்கூஸ்

பாவினத்தில் ஒன்றையே தன் தனிப் பெயராய்ப் பெற்ற மந்திரமாகி, மந்திரமே தேவதையாகிவிட்டது!

காயத்திரி

டி. எஸ். சர்மா

காயத்திரி மந்திரம் வேதங்களின் சாரம் என்றும், இந்து மதத்தின் ஆணி வேர் என்றும் அறிவாளிகள் சொல்வார்கள். ரிக் வேதத்தின் மூன்றும் மண்டலத்தில் முதல் முதலில் இது வந்திருக்கிறது.

“ஓம் பூர் புவ: ஸுவ: (ஓம்) தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோயோ ந: ப்ரசோதயாத்” என்பதே இது.

இந்த மந்திரத்தின் பொருளைக் குறித்து ஏராளமான நூல்கள் இருக்கின்றன. விசேஷமான பொருள்களை விட்டுவிட்டு இதன் சாமானியமான பொருளை இங்கே சொல்லுகிறேன்: “நித்தியமாகிய அந்த ஆத்ம சக்தி, வானம், பூமி ஆகியவற்றிலும் இவற்றைச் சார்ந்த உலகங்களிலும் வியாபித்திருக்கிறது. எல்லோரும் வணங்கப் பெறும் அந்தத் திவ்விய ஜோதியைத் தியானிப்போம். அந்தத் திவ்விய ஜோதி எங்களுடைய புத்தியை நன்றாக ஒளிரும்படி செய்யட்டும்!”

இந்தத் தியான மந்திரத்தில் இந்திய வேதாந்த தத்துவம் முழுவதும் வெகு சூட்சுமமாக அடங்கியிருக்கிறது. ‘ஓம் பூர் புவ: ஸுவ:’ என்னும் வாக்கியத்தில் முதல் முதலில் வரும் ஓங்காரம் பர தத்துவ வாசகமாகும். இந்தப் பரதத்துவம் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது என்று இந்த மந்திரம் அறுதியிட்டுக் கூறுகிறது. ஈசாவாஸ்யோபநிஷத்தில் ‘ஈசாவாஸ்ய’ என்று தொடங்கும் மந்திரமும் இந்தப் பொருளையே வலியுறுத்துகிறது. உலகத்தில், எல்லாம் இயற்கையின் விதி வரம்புக்கு உட்பட்டே நடக்கின்றன என்பதை நாம் அறிவோம்; அதாவது, ஒவ்வொரு பொருளின் இயக்கமும் சர்வேசுவரனுடைய விருப்பப்படி நடக்கிறது.

நட்சத்திரம் கிரகம் முதலியவற்றின் சலனமும், பருவ மாற்றமும், செடி கொடிகளின் வளர்ச்சியும் அழிவும், பால் பயிர் பலிதமும், அஃறிணைகளின் செயல்களும் எங்கும் வியாபித்திருக்கும் பரம்

காப்பிரைட்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு: வருஷ மலர்), சென்னை.

பொருளின் விருப்பப்படியே இயல்கின்றன. இந்தச் சூழலுக்கு இசையாதது ஒன்றே ஒன்றுதான். அதுதான் மனிதனுடைய மனம். மேலே சொன்ன திவ்விய சூத்திரம் மனத்தைக் கட்டுப்படுத்துவதில்லை. மனிதனுக்குள் அடங்கியிருக்கும் தனிப்பட்ட சுதந்தர வாஞ்சையே இதற்குக் காரணம். உலகத்தில் ஈசுவரனுடைய விருப்பத்தை அநுசரித்துப் போகவோ, அல்லது எதிர்த்து நடக்கவோ மனிதனுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. மனிதனின் சுயேச்சை பரமேசுவரனுடைய விருப்பத்தோடு ஒன்றியபோதுதான் மனிதனுக்குப் பேரின்பச் சேர்க்கை உண்டாகும் என்றும், இந்த விஷயத்தில் உலகம் முழுவதும் சூழலும் மேலே சொன்ன பொது வழியிலே மனிதன் செல்வதே நன்மை தரும் என்றும் உலகத்து மதங்கள் எல்லாம் சொல்லுகின்றன. அஃறிணைகள் எல்லாம் தம்மையும் அறியாமல் அநுசரிக்கும் இந்த மேலான தருமத்தை மனிதன் தன் விருப்பப்படியே அநுசரிக்கிறான். சாமானியமாக மனிதகுலம், 'இந்தத் திவ்விய மார்க்கத்தை எதிர்த்து நடந்தாலும் பரவாயில்லை; மனம் காட்டும் வழிதான் ஆனந்த வாழ்வுக்குச் சாதனம்' என்று நம்புகிறது. இது மனிதனோடு ஜீரணம் அடைந்துவிட்ட அஞ்ஞானமே. மனிதன் செல்லும் ஆத்மிகப் பாதை தடையின்றி இருந்தாலும் இந்த அஞ்ஞானத்தாலேயே பாபச் சேறும் துக்கமும் தோன்றுகின்றன.

அதனால் மனிதன் தன் இச்சா சக்தி அதன் போக்கில் காண்பிக்கும் வழியைப் பின்பற்றாமல், சர்வாந்தர்யாமியாகிய ஈசுவராக்ஞைப்படி நடக்க அருளவேண்டுமென்று தினந்தோறும் பிரார்த்திக்க வேண்டும். அதோடு நில்லாமல் ஈசுவராக்ஞைக்கு ஒத்தபடி தன் மனப்போக்கைக் கொண்டுவரவேண்டும். காயத்திரி மந்திரத்தின் முக்கிய உத்தேசம் இதுவே.

இந்த மந்திரத்தைச் சொல்லும் போது, நாம் விதிபுருஷனை மனத்தில் இருத்தி அவனுடைய திவ்விய மாகிய சிருஷ்டிசக்தி, தன் விருப்பப்படி நடக்குமாறு நம் மனத்தைத் தட்டி எழுப்பட்டுமென்று பிரார்த்திக்கிறோம். ஆகையால், காயத்திரி மந்திரத்தில் ஞான, பக்தி, கர்மயோகங்கள் மூன்றும் அடங்கி இருக்கின்றன என்பதை நாம் அறிய வேண்டும். அதன்பின், 'திவ்வியமாகிய பரமேசுவரனுடைய விருப்பப்படி நடக்கவேண்டும்; நம் மனம் போன போக்கில் நடக்கக் கூடாது' என்றும் தெரிந்துகொள்ள வேண்டும். இது ஞானயோகத்தின் சாரம். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற சூத்திரம் சொன்னபடி அவன் ஆணைக்கு மனோ வாக்குக் காயங்களால் பணிந்து அந்தத் திவ்விய ஒளியே வழி என்று தியானிப்பதால் பக்தியோகமும் இதில் அடங்கி இருக்கிறது.

நம் செயல்கள் எல்லாம் ஈசுவர ஆக்ஞைப்படி நிகழவேண்டும் என்றும் குறுகிய இயற்கையுள்ள மனப்போக்கின்படி நடக்கக் கூடாதென்றும் சங்கர்பித்துக் கொள்ளுவதால் இது கர்மயோகத்தின் சாரமாகவும் அமைகிறது. இப்படி இந்த மந்திரத்தின் உள்ளுறை பெருமை பெற்றிருப்பதால் இந்து மதத்தின் வேதாந்த சாரம் எல்லாம் சூட்சுமமாகத்

திரண்டு காயத்திரி மந்திரமாகிய தென்று சொல்லுகிறார்கள்.

முதல் முதலில் 'காயத்திரி' என்பது செய்யுள் இலக்கணச் சந்தஸ் ஒன்றுக்குப் பெயராக இருந்தது. பிறகு காயத்திரி என்ற சந்தஸைக்கொண்ட செய்யுளால் ஏற்பட்ட மந்திரத்துக்குப் பெயராயிற்று. காலப் போக்கில் அது அந்த மந்திரத்தின் அதிதேவதைக்கே பெயராயிற்று. கீழே உள்ள சுலோகம் அந்தத் தேவதையின் பாவசித்திரம்:

முக்தா வித்ரும ஹேம நீலதவள
சாயைர் முகைஸ்த்ரீக்ஷணை:।

யுக்தாம் இந்து நிபத்த ரத்ன
மகுடாம் தத்வார்த்த வர்ணாத்மிகாம் ॥

காயத்ரீம் வரதாபயாங்குச
கசாஹ் சுப்ரம் கபாலம் கதாம்।
சங்கம் சக்ர மதாரவிந்த யுகளம் ஹஸ்தைர் வஹந்தீம் பஜே ॥

இதன் பொருள்: "முத்து, பவளம், பொன், நீலம், வெண்மை ஆகியவற்றின் நிறங்களுள்ள ஐந்து முகங்களைக் கொண்டவள்; முக்கண்ணி; பிறை சேர்ந்த ரத்தின மகுடம் தரித்தவள். உண்மைப் பொருளாகிய வர்ணமே தானாகியவள். வரத முத்திரை, அபய முத்திரை, அங்குசம், சாட்டை, வெண்மையான மண்டையோடு, கதை, சங்கு, சக்கரம், இரண்டு தாமரைகள் இவற்றையெல்லாம் கைகளில் அணிந்த காயத்திரி தேவியை வணங்குகிறேன்."

பொய்யும் மெய்யும்

குற்றவாளி ஒருவனை வெட்டும்படி அரசர் ஆணையிட்டார். இப்படித் தண்டனை விதிக்கப்பெற்றவன் அரசரை வாயில் வந்தபடியெல்லாம் திட்டிவிட்டான். அவன் வேற்று மொழியில் ஏசியதால் எவருக்கும் பொருள் விளங்கவில்லை. அரசருக்கு இது தெரியவந்தது.

அப்போது அபுல் பராஜ் என்ற முதல் மந்திரி, "அரசே! சினத்தை அடக்கி ஆள்பவரையும், எளியோரிடம் இரக்கமுடையோரையும், கொடைவன்மை மிக்கோரையும் இறைவன் விரும்புகிறான் என்று இவன் கூறுகிறான்" என்றார்.

குற்றவாளியை இரக்கம் மிகுந்த அரசர் மன்னித்தார்.

உண்மையில் குற்றவாளி சொன்னதை அறிந்த வேறொரு மந்திரி, "அரசே, எவராயினும் அரசர் முன்னிலையில் பணிவுடனும் அடக்கமாகவும் பேசவேண்டும். இந்தக் குற்றவாளி தங்களைத் தகாத வார்த்தைகளால் திட்டினான், பிரபு!" என்றார்.

அரசர் சொன்னார்: "மந்திரி அபுல் பராஜின் பொய், நீர் மொழிந்த உண்மையைவிட இனிமையாக இருந்தது. ஏனென்றால், அபுல் பராஜ் அவனைக் காப்பாற்ற விரும்பினார்; நீர் அவனைக் கொல்ல நினைத்தீர். 'நன்மை பயக்கும் பொய்யை விடத் தீமை தரும் மெய் சிறந்ததல்ல' என்பது அறிஞர் கருத்து."

—ஏ. எம். அலீ, 'மணி விளக்கு'

வருஷந்தோறும் நடக்கும் இந்தக் கண்காட்சி ஒரு விழா அல்ல; விஞ்ஞானிகளின் யாத்திரைக் கூடம்.

விஞ்ஞானப் புதுமைகள்

லியனார்டு ஜி. ரூல்

'ஒரு ரெயில் வண்டியை அதன் நிழலே பின் தொடர்ந்து வர முடியவில்லை. அவ்வளவு வேகமாய் அது ஓடியது' என்று வேடிக்கையாக ஒரு கதை சொல்வதுண்டு. இதை அநேகர் கேட்டிருப்பார்கள். இதில் என்ன தமாஷ் என்றால், இது சாத்தியமேயில்லை என்பதுதான். ஆனால், பிரிட்டனின் 'ஃபிஸிக்கல் ஸொஸைட்டி' நடத்திய 38-ஆவது பொருட்காட்சியைப் பார்த்த பிறகு, இந்த மாதிரி விஷயங்களெல்லாங்கூடச் சாத்தியமோ என்றுதான் தோன்றும்; ஒளியில் என்ன என்ன தந்திரங்களையெல்லாம் வேண்டுமானாலும் செய்யலாம் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

அந்தப் பொருட்காட்சியில் ஒரு காமிரா இருந்தது. ஒளி ஓடிக்கொண்டேயிருக்கும்போது அதைப் படம் எடுத்துவிடக் கூடியது இந்தக் காமிரா. ஒரு செகண்டு நேரத்தை ஐந்து கோடி பகுதிகளாகப் பிரித்த ஒரு பகுதி நேரத்தில் இதைக் கொண்டு படம் எடுக்கலாம்! (ஒளியின் வேகமோ செகண்டுக்கு 1,86,365 மைல்தான்.) இந்தக் காமிரா இப்போது ஒரே ஒரு காரியத்துக்குத்தான் முக்கியமாகப் பயன்பட்டு வருகிறது. குண்டுகள் வெடிப்பதை, இதைக் கொண்டு படம் பிடிக்கிறார்கள். பிரிட்டிஷ் அணுசக்தி இலாகாதார்தான் இந்தக் காமிராவைத் தயாரித்திருக்கிறார்கள். சென்ற வருஷம் ஆஸ்திரேலியாவிலும் அதற்கு முந்திய வருஷம் மாண்டிபெல்லோ தீவுகளிலும் பிரிட்டிஷ் அணு குண்டுகள் வெடித்துப் பரீட்சித்தபோது படம் பிடிக்க இந்த மாதிரி காமிராக்களையே உபயோகித்தார்கள்.

இதைப் படித்துவிட்டு, "ஓஹோ! இந்தப் பிரிட்டிஷ் கண்காட்சி என்பது ஏதோ திருவிழா வேடிக்கையோ! வருஷத்துக்கு வருஷம் விஞ்ஞான விந்தைப் பொருள்களை வைப்பார்கள்; ஜனங்கள் வாயைப் பிளந்துகொண்டு அவைகளைப் பார்ப்பார்கள். இவ்வளவுதானே?" என்று நீங்கள் கேட்டுவிடாதீர்கள். இது ஒன்றும் அப்படி வெறும் வேடிக்கை அல்ல.

1874 - இல் ப்ரொஃபஸர் ஃப்ரெடரிக் கத்ரீ என்பவர் இந்த 'ஃபிஸிக்ஸ் ஸொஸைட்டி'யை அமைத்தார். அப்போது அவர் சொன்னார்: "பௌதிக ஆராய்ச்சிச் சங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். புதிய பௌதிக ரகசியங்களை அது விளக்கவேண்டும்; அதோடு பழைய பௌதிக ரகசியங்களையும் புது முறையில் விளக்கவேண்டும். இதுவே என் நோக்கம்."

காப்பிரைட்: பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸ் (ஆங்கிலம்), சென்னை.

விஞ்ஞானிகளும் பிறருமாக 98 பேர் அவருடன் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்தார்கள். ஆனால், அந்தச் சங்கம் அமைந்து 30 வருஷங்கள் சென்ற பிறகுதான், முதல் முதல் அதன் கண்காட்சி நடந்தது. இன்று போலவே அன்றும் லண்டன் இம்பீரியல் காலேஜ் கட்டிடத்திலேயே அந்தக் கண்காட்சியை நடத்தினர்கள்.

ஆஸ்திரேலியாவில் வுமீரா ராக்கட் ரேஞ்சிலிருந்து பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஓர் அணுகுண்டை வெடித்துச் சோதித்தபோது எடுத்த படம்.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்ட இங்கிலாந்துக் கம்பெனிகளும் பிறஸ்தாபனங்களும் மிகப் புதிதாகத் தயாரித்திருக்கும் கருவிகளையும் திட்டங்களையும் இந்தக் காட்சியில் வைக்கின்றன. அவைகளைக் காண்பதற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஒவ்வொரு வருஷமும் பல விஞ்ஞானிகள் வருகிறார்கள். காட்சிப் பொருள்களின் நயத்தை அறிவதற்கு, இந்த வருஷத்துக் காட்சியைக் கவனித்தாலே போதும். ஒரு விஷயந்தான் மிகவும் ரசமானது. விஞ்ஞானிகள் உபயோகிக்கும் அடிப்படையான கருவிகளை வருஷத்துக்கு வருஷம் அபிவிருத்தி செய்துகொண்டே வருகிறார்களே, அதைத்தான் குறிப்பிடுகிறேன்.

உதாரணமாக, மைக்ராஸ்கோப் (அணுதரிசினி) என்ற கருவியை எடுத்துக்கொள்ளலாம். 50 வருஷத்துக்குமுன் இருந்த மைக்ராஸ்கோப் கருவி, ஒரு பொருளை 500 மடங்கு பெரிதுபடுத்திக் காட்டும். அந்தக் காலத்தில் இதைக் கண்டே பரவசம் கொண்டார்கள். பின்னால் வந்த கருவி, பொருள்களை 2,000 மடங்கு பெரிதுபடுத்திக் காட்டியது. இந்த வருஷம் கண்காட்சியில் வைத்திருந்த புத்தம் புதிய கருவியோ பொருள்களை 6,400 மடங்கு பெரிதபடுத்திக் காட்டுகிறது. இதற்கு 'ஃப்ளையிங் ஸ்பாட்' (பறக்கும் புள்ளி) என்று பெயர். இந்தக் கருவியில் இன்னும் ஒரு விசேஷம் உண்டு. இந்தக் கருவியின் மூலம் தோன்றும் பிரதிபிம்பத்தை ஒரு திரையில் இடுகிறார்கள். ஒரு வகுப்பு மாணவர்கள் அத்தனை பேரும் ஒரே சமயத்தில் சேர்ந்தாற்போல் அதைப் பார்த்துவிடலாம். தனித் தனியாக ஒவ்வொருவரும் கருவிக்குள்ளே பார்ப்பதானால், வெகு நேரம் ஆகும் அல்லவா? அந்தத் தொல்லை இதில் இல்லை.

'ரேடியோ-ஆக்டிவ் இஸோடோப்ஸ்' என்ற கதிர் வீசும் மூலப் பொருள் ரகங்களை இந்தக் காட்சியில் சென்ற மூன்று வருஷங்களாக வைத்து வருகிறார்கள். விஞ்

ஞானிகளுக்கும் பெருந்தொழில் முதலாளிகளுக்கும் அவை கருவிகளாகப் பயன்படும். கம்பிகளின் சுற்றளவுகளை அளக்கும் 'கேஜ்' என்ற சாதாரணக் கருவிகள் முதல், தொட்டி நீரை ஒரே மட்டத்தில் வைத்திருக்கும் அதிசயக் கருவி வரையில் பல வகைகள் காட்சியில் இருந்தன. தொட்டிக்குள் எந்தப் பொருளையும் ஆதாரமாக வைக்காமலே, நீரை ஒரே மட்டத்தில் இருக்கும்படி இந்தக் கருவி 'கண்ட்ரோல்' செய்கிறது. கண்ணாடி செய்யும் தொழிலில் இந்தக் கருவி பெரிதும் பயன்படும். கொப்பரையில் உருக்கிய கண்ணாடிக் குழம்பைத் தொடாமலே, அதன் திரவ மட்டத்தை ஒரே நிலையில் இது வைத்து வருவது பெரிதும் உதவியாயிருக்கிறது.

புற்று நோய்க்குச் சிகிச்சை செய்யும் 'ரேடியோ-கிராஃபி' முறையில், சில 'இஸோடோப்' என்ற மூலப்பொருள் ரகங்கள் உபயோகமாகின்றன. அந்தத் துறையில் மிகவும் சமீபத்தில் ஆராய்ந்து கண்ட பொருள்களை ராயல் கான்ஸர் ஹாஸ்பிட்டல் நிபுணர்கள் இந்தக் காட்சியில் கொணர்ந்து வைத்திருந்தார்கள். ஒலி அலைகளுக்கும் ரேடியோ அலைகளுக்கும் இடைப்பட்ட 'அல்ட்ரா-ஸோனிக்ஸ்' அலைகளை மனிதர் உடலில் மோதச் செய்து, அதன் 'எக்கோ ஸவுண்டிங்' என்ற எதிரொலியைக் கொண்டு வியாதி இன்னதென்று ஆராயும் முறைகள் சிலவற்றையும் இங்கே விளக்கிக் காட்டினார்கள்.

பார்க்கப் பார்க்க ஆனந்தம் தரும் பொம்மை போன்ற ஒரு கருவியையும் காட்சியில் பிரிட்டிஷ் விஞ்ஞான ஆராய்ச்சி இலாகாதார் காட்டினார்கள். நதிகளின் முகத்துவாரம், கடற்கரை இவை போன்ற சில 'மாடல்'கள் செய்து வைத்திருக்கிறார்கள். அங்கெல்லாம் கட்டிடங்கள் கட்டுவதானால், நீரோட்ட வேகத்தை அறிவது அவசியமாகும். மின்சார சக்தி மூலம் அப்படி நீரோட்ட வேகத்தை அறியும் நுட்பமான கருவியைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன்.

ரசாயனப் பொருள்களை ஆராயும் புது முறை ஒன்றையும் இதே இலாகாதார் விளக்கிக் காட்டினார்கள். ரசாயனப் பொருள் ஒன்றின் மெல்லிய படலத்தில் 'இன்ஃப்ரா' ரெட் ஒளிக்கதிரைப் பாய்ச்சினால், அதனால் ஏற்படும் அலையதிர்ச்சிப் பட்டை (பாட்டர்ன்) ஒன்று, மின்சார சக்தியின் உதவியால் ஒரு திரையில் விழுகிறது. அந்த அலையதிர்ச்சிப் பட்டை வெவ்வேறு ரசாயனப் பொருளுக்கு வெவ்வேறு விதமாக விழுகிறது. இதனால் ஒரு ரசாயனப் பொருள் இன்னதுதான் என்பதைக் கணநேரத்தில் இப்போது கண்டுபிடித்து விடலாம்.

ஆத்மாவின் தோழன்

ஆத்மாவுக்கு உடல் ஒரு சமயம் தடை; ஒரு சமயம் கருவி; ஒருபோதும் விட்டுப் பிரியாத தோழன். ஐம்புலன்கள் ஆத்மாவின் சிறை அல்ல; ஆத்மா உலகத்தோடு உறவாடுவதற்கு அமைந்த சாளரங்கள்.

—விக்டர் கஸின்ஸ்

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, ':.பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை ':.பிலிமிண்டியா' மே '54 இதழில் வந்தவை.

கேள்வி: அழகைக் காட்ரெஜ் பெட்டிகளில் பூட்டி வைக்கலாமா?

பதில்: பெட்டிகளில் கரப்பான் பூச்சிகளைத்தான் அடைக்கலாம். அழகைக் கைகளால் பூட்ட வேண்டும்.

* * *

கே: இந்தியா கீழே ஆழ்ந்து கொண்டிருக்கிறதா?

ப: இல்லை; அது பிணத்தைப் போல மிதந்துகொண்டிருக்கிறது.

* * *

கே: ஓட்டுப் பெட்டிகளில் என்ன இருக்கிறது?

ப: கோடிக்கணக்கான மக்களின் துரதிருஷ்டம்.

* * *

கே: எதற்காக இந்த நாலு பெரிய பேர்வழிகளின் மகாநாடு?

ப: ஒவ்வொருத்தருடைய தேக உஷ்ணத்தையும் அளப்பதற்காக. ஒவ்வொருவனும் மற்றவனுக்கு உடம்பு சரியில்லை யென்று நினைக்கிறான்.

கே: மனிதன் பணம் இல்லாமல் வாழ முடியுமா?

ப: முடியாது. காந்தியடிகளுக்குக்கூட நிறையப் பணம் வேண்டியிருக்கிறது.

* * *

கே: அமெரிக்கப் பெண்களின் கல்யாண வயது என்ன?

ப: கல்யாணம் அவர்களுக்கு அவ்வளவு முக்கியம் அல்ல. அவர்கள் பதின்மூன்று வயதிலேயே காதல் செய்யத் தொடங்கி விடுகிறார்கள்.

* * *

கே: நல்ல காரியதரிசியைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

ப: நல்ல மனைவிமாரைப் போலவே நல்ல காரியதரிசிகளும் கிடைப்பதற்கு அருமையானவர்கள்; நல்லவர்கள் கிடைக்க அதிருஷ்டம் வேண்டும்; தேர்ந்தெடுத்து வருவதில்லை.

* * *

கே: கோவா எங்கே இருக்கிறது?

ப: நாலாயிர மைலுக்கு அப்பால் போர்ச்சுகல் தேசத்தில் இருக்கிறது!

* * *

கே: நம்பிக்கையோடு வாழ்வது எப்போதும் நல்லதா?

ப: நம்பிக்கை கொல்வதில்லை; வாழ வைக்கிறது. ஆனால் நம்பிக்கை போய்விட்டாலோ, அந்த நிலை விஷமாகி விடுகிறது.



கே: சட்டம் கழுதை என்றால் வக்கீல்களை என்ன என்பது?

ப: சண்டையென்கிற இருமலைப் போக்க நாலு பேர் பார்க்கிற இடத்தில் அதைக் கறக்கிறவர்கள்தான் வக்கீல்கள்.

* * *

கே: உங்கள் கடன்காரர்களை எப்படி ஏமாற்றுகிறீர்கள்?

ப: அவர்கள் என்னை எப்போது பார்க்க வேண்டும் என்கிறார்களோ அப்பொழுதெல்லாம் அவர்களைப் பார்க்கிறேன்; பார்த்துக் கடனைத் தீர்க்க என்ன வழி என்று யோசனை கேட்கிறேன்.

* * *

கே: அமெரிக்கர்களிடத்திலும் சாதி வித்தியாசம் இருக்கிறதா?

ப: அவர்களுக்கு எத்தனையோ சாதிகள் உண்டு. கறுப்பு மனிதன்-வெள்ளை மனிதன், யூதர்-கிறிஸ்தவர், பணக்காரன்-ஏழை, கிழக்கு-மேற்கு, வடக்கு-தெற்கு, கத்தோலிக்கர் - ப்ராடெஸ்டண்ட், சிவப்பு இந்தியர் - வெள்ளை அமெரிக்கர், கம்யூனிஸ்டு அமெரிக்காக்காரன் - ஜனநாயகக் கட்சிக்காரன்-குடியரசுக் கட்சிக்காரன் என்று இப்படிப் பல சாதிகள் இருக்கின்றன. இந்தச் சாதிபேதம் மிகவும் கடுமையானது. இதனால் ரத்தம் சிந்துகிறார்கள்; சரித்திர மாற்றமே உண்டாகிறது.

கே: கம்யூனிஸ்டுகள் பட்டினி கிடந்து சாகிறார்களா?

ப: கொள்ளை யடிக்கிற ஆசாமிகள் எப்போதும் பட்டினி கிடப்பதில்லை.

* * *

கே: பெண்களுடைய பழக்கங்களில் எது மிகவும் அதிகப் பணச் செலவாகிற பழக்கம்?

ப: கல்யாணம்! செலவு செய்கிறவர்களைக் கேட்டுப் பாருங்கள்.

* * *

கே: இந்தியா ருஷியாவிடமிருந்து உதவி பெற வேண்டுமா?

ப: நாம் யாரிடத்திலும் உதவி பெறக் கூடாது என்று நேரு சொல்லுகிறாரே, அதுதான் சரி என்று நான் நினைக்கிறேன். ஆனால் யாரிடமும் நாம் ஆயுதங்களை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

* * *

கே: அங்கே போனால் வேலை காலி இல்லை; இங்கே போனால் காலி இல்லை. இதற்கு என்ன செய்கிறது?

ப: மூளையில் இருக்கிற காலியிடத்தை நிரப்பிவிட்டுச் சிந்தியுங்கள். சிந்தனை புதிய வேலைகளை உண்டாக்கும்.

* * *

கே: கடவுளின் படைப்புக்குள் பூர்ணமானது எது?

ப: அவருடைய சிறந்த படைப்பு மனிதன். ஆனாலும் அதில் எத்தனை குறைகள்? கடவுள்கூடச் சாமானியத் தொழிலாளிதான் போலிருக்கிறது!

* * *

கே: சர்ச்சிலுக்கு அதிக வயசாகிவிட்டது; வியாதிக்காரராகிவிட்டார்; தளர்ந்து போயிருக்கிறார்; அதனால் பிரதம மந்திரி

யாக இருக்கத் தக்கவர் அல்ல என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ப: ஒரு தேசத்தில் ஜனங்களுடைய வயசுதான் முக்கியமேயன்றிப் பிரதம மந்திரியின் வயசு அல்ல.

* * *

கே: அரசியல்வாதிகள் எப்போது கடவுளைப் பிரார்த்தனை செய்கிறார்கள்?

ப: பிரசாரத்துக்கும் தேர்தலுக்கும் நடுவிலுள்ள காலத்தில்.

* * *

கே: அமெரிக்காவிலும் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களா?

ப: எங்கே காய்கிற வயிறு இருக்கிறதோ அங்கே கம்யூனிஸ்டும் இருக்கிறார். பசியின் வேதனையில் அராஜகம் வளர்கிறது. அமெரிக்காவில் பசி நிறைய இருக்கிறது.

* * *

கே: சிலர் வாழ்க்கையை நாடக மேடை என்கிறார்கள். சிலர் கனவு என்கிறார்கள். வேறு சிலர் மோசமான நரகம் என்கிறார்கள். உங்கள் கருத்து என்ன?

ப: அத்தனையுந்தான்; அதோடு சொர்க்கமுங் கூட!



கே: இனிய கனவுகளைக் காண்பது எப்படி?

ப: 'கன்னபிஸ் இண்டிகா' வைச் சாப்பிட்டுப் பாருங்கள். இந்தியாவில் அதைப் 'பங்கி' யென்றும் 'கஞ்சா' என்றும் சொல்வார்கள். சரியான அளவு சாப்பிட்டால் அது அரபிக் கதைகளின் உலகத்துக்கே அழைத்துச் சென்றுவிடும். ஆனால் நேரு ஐந்தாண்டுத் திட்டம் என்ற தலையணையை வைத்துப் படுத்து, இன்ப மயமான கனவுகளைக் காண்கிறார்.

* * *

கே: கன்னிப் பெண் சிறு குழந்தைகளிடம் அன்பு காட்டினால் அது எதைக் குறிக்கிறது?

ப: கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையைக் குறிக்கிறது.

மனைவியிடம் என்ன குறை?

ரோம் நாட்டைச் சேர்ந்த ஒருவன் தன் மனைவியை விவாகரத்து செய்துவிட்டான். இதைப்பற்றி அவனுடைய நண்பர்கள் அவனைக் கோபித்துக்கொண்டார்கள். "உன் மனைவி அழகாக இல்லையா? கற்புடன் இல்லையா?" என்று அவர்கள் கேட்டார்கள்.

மனைவியை விலக்கியவன் தன் கால் செருப்பு ஒன்றைக் கழற்றிக் கையிலே எடுத்து, "இதோ பாருங்கள், இந்தச் செருப்பு அழகாக இல்லையா? நன்றாகத் தைத்திருக்கவில்லையா? ஆயினும், இது என்னை எங்கே கடிக்கிறது என்று உங்களில் யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டான்.

—ப்ளூடார்க்

டில்லி நிருபர்

கே. ஸ்ரீநிவாசன்

டில்லித் தமிழ்ச் சங்கத்தார், 'சுடர்' என்ற பெயருடன் அருமையாக ஒரு விசேஷ மலர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் ரசமான கதைகளும் பொருள் மிகுந்த கட்டுரைகளும் அடங்கியிருக்கின்றன. பண்டித நேரு ஆசிச் செய்தி அளித்திருக்கிறார். காகிதமும் அச்சும் மிக நேர்த்தியாயிருக்கின்றன. அட்டை கலைச் சுவையோடு அமைந்திருக்கிறது. இந்த அழகிய மலரிலிருந்து ஒரு கட்டுரையை இங்கே எடுத்துத் தந்திருக்கிறோம்.

புது டில்லியில் இரண்டு இடங்களில் நாள் பூராவும் சில நபர்கள் மாறி மாறி இருந்துகொண்டே இருப்பார்கள். ஒன்று, இந்தியா காபி ஹவுஸ்; மற்றொன்று ஸவுத் இந்தியா போர்டிங் ஹவுஸ். இவற்றை வட்டமிடுபவர்கள் பத்திரிகை நிருபர்கள். பத்திரிகைக்குச் செய்திகள் இங்கேதான் உற்பத்தியாகின்றன.

எப்படி இருந்தாலும் நிருபர்களுக்கு அவர்கள் வேலைக்கு இடையில் உள்ள ஓய்வு நேரத்தில் எங்காவது தங்க இடம் வேண்டுமே; அதற்காக ஒரு கப் காபிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு இடக் குத்தகை எடுப்பது தொழில் ரகசியம்.

"உங்களுக்கென்ன, ஐயா, நாழிகையா? மணியா? எப்பொழுதும் ஊர் சுற்றலாம்; நாடகமோ, நாட்டியமோ, எங்கும் போகலாம்; தேநீர்க் கச்சேரிகளுக்கு அழையா விருந்தாளியாகப் போகலாம். நீங்கள் நுழையாத இடந்தான் எது?" என்று நிருபர்களிடம் சொல்வார்கள். ஒன்றுமட்டும் வாஸ்தவம். அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுக் காலையில் ஆபீஸை நோக்கி நாங்கள் ஓட வேண்டியதில்லை. ஆனால் அதிகாலையில் வானராம்பட்டி ராஜப்பிரமுகர் விமான மூலம் டில்லிக்கு வருகிறார் என்றால், நாங்கள்தான் ஓடுகிறோம்; ஊர் சுற்றுகிறோம்! வாஸ்தவமான பேச்சு. ஆனால் ஊர் சுற்றாவிட்டால் செய்தி சேகரிப்பது எப்படி? டில்லிக் கோடை பிரசித்தம். மே, ஜூன் மாதங்களில் தெருவில் நெருப்பு டன் கணக்கில் கொட்டினாற்போல் இருக்கும். இந்த மாதங்களில் உச்சிவேளையில் மற்ற எல்லாரும் கதவைச் சாத்திக்கொண்டு பங்காவுக்கு அடியில்

மூலம்: சுடர் (தமிழ்: ஜயமலர்; விலை 1-0-0; வெளியிட்டோர்: டில்லித் தமிழ்ச் சங்கம், புது டில்லி.

சுகமாக உட்கார்ந்துகொண்டிருக்க, இரு ரக விசித்திரப் பிறவிகள்தான் தெருக்களில் சஞ்சரிக்கப் பார்த்திருக்கிறேன்: ஒன்று, நிருபர்கள்; மற்றொன்று, நாய்கள்!

சங்கீதக் கச்சேரிகளோ அல்லது பிற கேளிக்கைகளோ யாருக்குப் பிடிக்கும்! எங்களுக்குப் பிடிக்காது. இவைகளைப் பார்த்துவிட்டு ஆனந்தமாக வீட்டுக்குத் திரும்புகிற பிறருக்கு இவைகளைப்பற்றி எழுத வேண்டும் என்ற தண்டனை கிடையாது. ரசிப்பது ஒரு விஷயம்; விமர்சனம் எழுத வேண்டுமென்ற கவலையுடன் பார்ப்பது வேறு விஷயம்.

என்னைப் பொறுத்த வரையில் மணிப் பிரகாரம் ஆபீஸ் போகப் பிடிக்காதவன். அதனால்தான் இந்தத் தொழிலை மேற்கொண்டேன். இதில் நுழைந்த பிறகுதான் தெரிந்தது, இதில் உள்ள தொல்லை. பத்திரிகை நிருபர்களுக்கு மற்றவர்களைப் போலக் கூடி, கிளப், சங்கம் முதலியவைகளில் பொழுது போக்க நேரம் கிடையாது; மற்றக் காரியாலயங்களில் உள்ளது போல் வேலை பாக்கி என்று 'பைல்'களை நாங்கள் மூட்டை கட்டிக்கொண்டு வராவிட்டாலும், அன்றன்றைக் கடனைத் தீர்க்க இரவு பன்னிரண்டு மணியானாலும் உட்கார்ந்து முடித்துவிட்டே வரவேண்டி இருக்கிறது.

டில்லியில் நிருபர்களின் வாழ்க்கை எப்படி என்பதை அறிய, அவர்களின் தினசரி அலுவல் திட்டத்தைத் தெரிந்தகொண்டால் போதும். சென்னையைப் போல் டில்லியில் நிருபர்களுக்குத் தலைவர் பிரதம நிருபர் அல்ல; செய்தி ஆசிரியரே. காலையில் காரியாலயத்துக்குச் சென்றதும், 'இன்றைய நிகழ்ச்சிகள்' என்ற தலைப்பில் உள்ள அலுவல்களை நிருபர்களுக்கு அவர் பகிர்ந்து கொடுப்பார்.

சமீப வருஷங்களில் டில்லியில் நிருபர்களுக்குத் தினசரி அலுவல்கள் ஏகமாக அதிகரித்துவிட்டன. குறைந்த பட்சம் அரை டஜனாவது இருக்கும். அரசியல் கட்சிக் கூட்டங்கள் முதல் சர்வதேச மகாநாடுகள், அகில இந்தியக் கண்காட்சிகள் வரையில் நடக்கும் விஷயங்கள் அனந்தம். அதுவும் மத்திய சர்க்காரில் மந்திரிகளின் எண்ணிக்கை அதிகரித்த பிறகு, க்ஷவர சலூன் முதல் டேரா சினிமாவைத் திறப்பதுவரையில் எல்லாந்தான் மந்திரிகளின் வேலையாகி விட்டனவே!

மகாநாடுகளும், கண்காட்சிகளுந்தான் டில்லிக்குப் பெருமை. அவற்றைப் பிரசித்தப்படுத்தப் பத்திரிகை நிருபர்கள் அவசியம். அவர்கள்தான் பொது ஜனங்களுக்கும் சர்வதேச ரீதியான டில்லி நிகழ்ச்சிகளுக்கும் தினசரிப் பத்திரிகை மூலம் இணைப்புச் செய்கிறவர்கள். இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு! டில்லியில் வசிக்கும் நிருபர்களும் போட்டோ நிருபர்களும் சேர்ந்தாலே மகாநாட்டுக் கூட்டம் கூடிவிடும்.

டில்லியில் சில விடாக்கண்டர்களும் இருக்கிறார்கள். நிருபர்கள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி; விழாவில் எடுத்த புகைப்படங்களுடன் பத்திரிகைகளுக்குச் 'செய்திச் சுருக்கம்' ஒன்றை அவர்கள் அனுப்பிவிடுவார்கள். இவைகளில் விழா நடத்திய ஸ்தாபனங்களைப் பற்றிப் பிரமுகர் சொல்லாத புகழ் வார்த்தைகள் அமோகமாகக் காணப்படும். படங்களிலோ பிரமுகர் பக்கத்தில் இந்த விடாக்

கண்டார்கள் தான் நின்றிருப்பார்கள். கோர்ட்டில் ஜட்ஜுக்குச் சாட்சியத்தில் எது உண்மை, எது உண்மையில்லை (பொய் என்பது எங்களைப் பொறுத்தவரையில் தவிர்க்கப்பட வேண்டிய சொல்) என்று பழக்கத்தில் தெரிவது போல், எங்களுக்கும் தெரியும், வெளியிலிருந்து வரும் 'வெளியீட்டில்' உள்ள உண்மை விகிதாசாரம்! இதை நன்றாக வடிகட்டி விடுவோம்.

செய்தி என்பதெல்லாம் பொதுக் கூட்டமும் கண்காட்சிகளுந்தான் என்று எண்ணாதீர்கள். ஒவ்வொரு நிருபருக்கும் போலீஸ்காரனின் 'ரோந்து' போல் சில இடங்களும் காரியாலயங்களும் உண்டு. இவைகளுக்குக் கூடுமானவரையில் தினமும் போயாக வேண்டும். ஆனால் இந்த இலாகாக்களில் மிகவும் மோசமானவை மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள். இவைகளைப் 'பிரத்தியட்ச நரகம்' என்றே கொள்ள வேண்டும். பாழடைந்த கட்டிடங்கள், அறை தாங்காத கூட்டம், நேரக்கணக்கற்ற காவல் வேலை! இந்தக் கோர்ட்டுகளின் எண்ணிக்கை அதிகமாகையால், பல பத்திரிகைகளின் நிருபர்கள் இவைகளைப் பகிர்ந்துகொண்டு செய்தி சேகரிப்பது வழக்கம். இப்படிச் சேகரிக்கும் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளத்தான் காபி ஹோட்டல் சந்திப்பு. இப்போது விளங்குகிறதா, 'செய்தி உற்பத்தி' இடத்தின் அவசியம்!

யமனுக்கும் தெரியாமல் உயிர் போகும் அல்லது தப்பும் என்பார்கள் அல்லவா; அது உண்மையாய்த் தான் இருக்க வேண்டும். சிற்சில சமயங்களில் பிரத்தியேக பேட்டிகள் பத்திரிகைகளில் வெளிவரும். அப்படிச் செய்தி சேகரிப்பது அலாதிக் கலை. ஆனால் செய்தி நிருபர்களுக்கும் 'டோக்கர்' காட்டுகிறவர்கள் உண்டு. பிரதமர் நேருவைப் பொறுத்தவரையில் அவர் பத்திரிகை நிருபர்களைக் கூட்டமாக ஒவ்வொரு மாதமும் பார்ப்பது வழக்கம். அநுபவம் என்பது இணையற்றதோர் வஸ்து. சில வருஷங்களுக்கு முன்பு நேருவைப் பத்திரிகை நிருபர்கள் எந்தத் தேசத்தைப்பற்றியும் எந்த விஷயத்தைப் பற்றியும் பேச வைத்து விடுவது வழக்கம். இப்பொழுது அரசியலில் அடிபட்டு, சர்க்கார் நடத்துவதில் ஊறிப் பழுத்த அவர், சாமர்த்திய சாலி ஆகிவிட்டார்.

நேருவைப் பழைய மோஸ்தரில் கண்டு பேசவேண்டுமென்றால், அவரைச் சர்க்கார் கட்டிடங்கள் அல்லாத ஸ்தலத்தில் பார்க்கவேண்டும். வேலைத்தொந்தரவு, பொறுப்பின் பாரம் இவைகளை நினைக்காத சிறு பையனைப் போல் அவரைச் சமீப காலத்தில், நான் பார்த்தது பார்லிமெண்ட் கிரிக்கெட் விளையாட்டின்போதுதான். இரண்டு தினங்களிலும் காலேஜ் மாணவனைப்போல் அவர் ஓடிக் குதித்தார். இறுதி நாளில் தாம் கையெழுத்திட்ட மட்டை, பந்து முதலியவைகளை அவர் ஏலம் கூறினார். தம் குல்லாயையும் அவர் ஏலம் போட ஆரம்பித்தபொழுது நான், "பண்டிட்ஜி, உங்கள் வெயிஸ்ட்டையும் கொடுப்பீர்களா!" என்றேன். அவர் கொடுத்த பதில் பழைய நாள் நேருவை ஞாபக மூட்டியது. என்னை மட்டையினால் துரத்துவதுபோல் பாவனை செய்து, பக்கத்தில் நின்ற உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் சொன்னார்: "நிருபர்கள்

என் வெயிஸ்ட்டை என் கேட்கிருர்கள் தெரியுமா? அத்துடன் என் பிரதமர் பதவியும் இருக்கிறது என்பதால்தான்.'' எல்லாரும் சிரித்தார்கள்.

டாக்டர் ராஜேன் பாபு இதற்கு விதிவிலக்கு. ஜனதிபதி என்பதால் அவர் ராஷ்டிரபதி பவனில் இருக்கலாமே தவிர, அவரைச் சுற்றியுள்ள பரிவாரம் சில மணி நேரம் விலகிவிட்டால் அவருக்கு எங்கிருந்தோ சுதந்தரம் வந்து விட்டதாக எண்ணம் உண்டாகி விடுகிறது.

ஜனதிபதி என்ற ஹோதாவில் அவருக்குத் தினசரி அலுவல்களைப் பற்றிப் பத்திரிகை நிருபர்களிடம் பேசப் பிரமேயமே ஏற்படுவதில்லை. ஆனல் விசேஷ தினங்களில் அவர் ஏதாவது அலுவல்களில் பங்கெடுத்துக்கொள்ளும்பொழுது, அவர் தம்மை மறந்து நிருபர்களைப் பெயரைச் சொல்லி அழைத்து அளவளாவுவார். உண்மைக் காந்தி பக்தரான அவருக்கு, காந்திஜியின் ஜன்மதினம், காந்திஜி அமரத்துவம் எய்தின தினம் எல்லாம் சொந்தப் பிதாவின் கிரியைக்குரியன போன்றவை.

இந்தியாவுக்கு விஜயம் செய்யும் எந்த வெளிநாட்டுப் பிரமுகரும், நேரு, ராஜேன் பாபு இருவரையும் பார்க்காமல் செல்வதில்லை. ஸ்ரீ அனூரின் பெவான் ஆங்கிலத் தொழிற் கட்சித் தலைவர்களுள் ஒருவர். அவர் சொன்னர்: ''பண்டித நேருவும் டாக்டர் பிரஸாதும் இரட்டைகள் போன்றவர்கள். எதைக் குறித்தும் ஆற அமர யோசிப்பதற்கு இருவரும் தேவை. ஒருவர் தூரதிருஷ்டியுள்ளவர் என்ருல், இன்ஞெருவர் ஆழ்ந்த திருஷ்டியுள்ளவர். ஆனல் இருவரும் தங்கள் அபிப்பிராயத்தை எதைக் கொண்டும் சீக்கிரத்தில் மாற்றிக்கொள்பவர்கள் அல்ல.''

செய்தி சேகரிப்பதில் சென்னைக்கும் டில்லிக்கும் உள்ள வித்தியாசங்கள் பல. சென்னையில் செய்தி சேகரிக்கும் வேலை காலையிலேயே முடிந்துவிடும்; சாயந்திரம் பொதுக் கூட்டங்கள் இல்லாவிட்டால், நிருபர்களுக்கு ஓய்வு உண்டு. டில்லியில் இது முடியாத காரியம். ஏனென்ருல், செய்திச் சேகரிப்பெல்லாம் உச்சி நேரத்தில்தான் நடக்கும். ஆகவே, காலையில் கிளம்பும் நிருபர்கள் செக்கு மாடுதான்.

டில்லியில் நடக்கும் விஷயம் எதுவாக இருந்தாலும், அதற்கு நிருபர்கள்தான் ஜவாப்தாரி என்பது வழக்கம். ஆகவே, நாங்கள் மிகவும் பயப்படுவதெல்லாம் நெருப்புப் பற்றும் சம்பவங்களே! டில்லியில், அகதிகள் வந்தாலும் வந்தார்கள்; 'ரெடிமேட்' கடைகள் கணக்கில்லாமல் தோன்றிவிட்டன. இவற்றில் நெருப்புப் பற்றிக்கொள்வதற்குச் சமயம், சந்தர்ப்பம் என்பது ஒன்றுமில்லை. கோடையானலும், குளிரானலும், மழையானலும் திடுதிப்பென்று நெருப்புப் பிடித்து இந்தக் கடைகள் எங்கள் உயிரை வாங்கிவிடுகின்றன! இரவு ஒரு மணிக்கு நெருப்புப்பிடித்துக்கொண்டாலும், போலீஸுக்கு முன்பாக ஸ்தலத்துக்கு விரைந்தோடுகிறவர்கள் நாங்கள்தான். எங்களுக்கு எப்படிச் செய்தி எட்டும் என்று கேட்கிறீர்களா? அதுதான் தொழில் அநுபவம். கழுகுக்கு மூக்கிலே வேர்ப்பது ஏன்!

நெருப்பு மாத்திரம் எங்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிவிடும் என்று எண்ணவேண்டாம்.

யாராவது பிரமுகர் அசௌக்கிய மாக இருந்தால், அவர் எப்படித் தினந்தோறும் அபிவிருத் தியையோ மாறுன நிலையையோ அடைகிறார் என்பது எங்கள் கழுத்தறுப்பு. இது விஷயமாக ஒரு சிறிய சம்பவம் ஞாபகம் வரு கிறது எனக்கு. ரைட் ஆனரபிள் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் சென்னையில் நோய்வாய்ப்பட் டிருந்த சமயம். அவருடைய தேக நிலையைப்பற்றி டெலிஃபோனில் தினம் இரவு நேரத்தில் நாங்கள் விசாரிப்பது வழக்கம். அவ ருடைய நிலைமை மோசமாக ஆக அவர் வீட்டை டெலிஃபோனில் கூப்பிட்டு நாங்கள் விசாரிப்பது அதிகமாயிற்று. பதில் கூற ஃபோனடியில் இருந்த ஒரு கிழவி, "உங்களைக் க....லே வைக்க! நீங்கள் நாசமாய்ப் போக!" என்று திட்ட ஆரம்பித்துவிட்டாள். இந்த ஆசிர்வாதத்தை நேரில் பெற இரவில் ஒரு நடை போக லாம் என்று சென்றால், அவருடன் பல வருஷங்களாக இருந்த வேலைக்காரன் எங்களில் ஒரு வரைக் கடுமையாகத் துரத்த ஆரம்பித்துவிட்டான். பாவம், உறவினர்களுக்கு நோய்வாய்ப் பட்டிருப்பவர்களைப்பற்றிக் கவலை; நபர் எங்களுக்குத் தெரியாமல் பிராணனை விட்டுவிடப் போகி றாரே என்று எங்களுக்குக் கவலை!

ஆனால் டில்லியில் இதற்கு மாறான நிலை. ஏதாவது பிரமு கருக்கு ஆபத்து என்றால், பத்திரி கைக் காரியாலயத்துக்கு நேரேயே டெலிஃபோனில் செய்தி கிடைக் கும். சமீபத்தில் காங்கிரஸ் தலைவர் ஒருவர் இறந்தபொழுது அவர் வீட்டுக்கு நான் சென்றேன். அங்கே ஜனங்கள் எவரும் இல்லை. இறந்தவருடைய ஸ்வீகார புத்திரி புழக்கடையில் இருந்தாள். இறந் தவருடைய அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு வெளி வராந்தா வில் வந்து நான் உட்கார்ந்து கொண்டேன். அப்பொழுதுதான் வந்த டில்லியின் சுகாதார மந்திரி என்னைச் சரியாகப் பார்க்காமல், "பாவம், இன்னும் கொஞ்ச காலம் இருந்திருக்கலாம்" என்றார். இதில் நமக்கு என்ன நஷ்டம் என்று, "ஆம்" என்று தலையசைத்து நிமிர்ந்தேன். அவர், "அட, நீங் களா!" என்றவுடன் நான், "பரவா யில்லை" என்று எழுந்து நடையைக் கட்டினேன்.

நிருபர்களுடைய வாழ்க்கை யைப்பற்றி எவ்வளவு எழுதினாலும் மாளாது. ஆனால் நிருபர்களைப் பற்றியும் அவர்களுடைய கஷ்டங் களைப்பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ள இது போதும்.

மகிழ்ச்சியான மறைவு

'ஏ துளசி, நீ இந்தப் புவியில் பிறந்தபோது அழுது கொண்டே வந்தாய்; உலகம் சிரித்தது. அதற்காக இந்தப் பொல்லா உலகைத் தண்டிக்க எண்ணினயானல், முறையோடு வாழ். நீ இறக்கும்போது சிரித்துக்கொண்டே போவாய்; உல கம் உன் மறைவுக்கு அழும்.'

—துளசிதாஸர்

வையகமே வானகம்

ரில்க் கேட்ட அமரகீதம்

உலகை இன்ப மயமாக்க, உலகை மாற்றத் தேவையில்லை என்பது இந்தப் பெரியாரின் கருத்து. ரில்க் காலம் 1875-1926. இந்தக் கற்பனை உலகக் கட்டுரை வரிசையை எழுதி வருகிறவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

உண்மை எங்கும் உலாவுகின்றது. அது ஒரு தெய்வக் குரலில் சதா ஒலித்துக்கொண்டிருக்கிறது. அதை உள்ளபடி கேட்பதற்கு நமக்கு ஆற்றல் இல்லை. நம்மைத் தக்க கருவிகளாய் அமைத்துக்கொண்டால், அந்த அமர கீதம் நம் செவி வழியாய்ப் புகுந்து, நம் உள்ளங்களில் ரீங்காரம் செய்யும். எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்பு நம் புனிதமான நாட்டில் தபோ வனங்களில் மகரிஷிகள் இந்தப் புகலரும் ஒலியைக் கேட்டார்கள். உவகையில் மெய்மறந்து உலகத்துக்கு இதை வெளியிட்டார்கள். இந்த ஒலி மாயவில்லை. எங்கே தக்க சான்றோர்கள் அவதாரம் செய்கிறார்களோ, அங்கே அந்தச் சான்றோர்கள் வழியாக இந்த நாதம் வெளி வருகிறது. இத்தகைய அமர கீதத்தைக் கேட்டவர்களில் ரில்க் என்பவர் ஒருவர் என்று சாற்றினால், அது மிகையாகாது.

ரெய்னர் மேரியா ரில்க் 1875-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ஆம் தேதியில் பிரேக் நகரில் அவதரித்தார். அவருடைய தகப்பனார் அவரை ஒரு ராணுவக் கல்லூரிக்கு அனுப்பினர். அந்தத் துறைக்கு இவர் தகுதி அற்றவர் என்பதை அவர் விரைவில் அறிந்துகொண்டார். ராணுவப் படிப்பு நிறுத்தப்பெற்றது. கலாசாலைப் படிப்புக்கு அங்கமான ஒரு பரீட்சைக்குத் தம்மை ரில்க் தயார் செய்துகொண்டார். அந்தப் பரீட்சையில் வெற்றியும் கிடைத்தது. ஆனால் பிரேக், மூனிக், பெர்லின் முதலிய இடங்களில் ஒரு விதத் திட்டமும் இல்லாமல் படித்து வந்தார். இத்தாலி, ருஷியா இந்த நாடுகளைச் சுற்றினர். ருஷியாவில் டால்ஸ்டாயைச் சந்தித்தார். பிரெஞ்சு நாட்டில் பிரபலமாய்த் திகழ்ந்த ரோடின் (Rodin) என்ற சிறந்த சிற்பியோடு நட்புக்கொண்டார். அவருக்குக் காரியதரிசியாகவும் இருந்தார். அவருடைய மாணவியாக இருந்த க்ளாரா வெஸ்தாவ் (Klara Westhoff) என்பவளை மணம் புரிந்தார். உலகப் போர், புயலடிக்கின்ற நாட்களில் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் தம் காலத்தைக் கழித்தார். 1919-ஆம் ஆண்டில் ஸ்விட்ஜர்லாந்தில் தங்கினர். அங்கே 1926-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ஆம் தேதி தமது 51-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

தாம் ஒரு கவி ஆக வேண்டும் என்ற அவா அவரைப் பல

அநுபவங்களையும் நாடச் செய்தது. "வெறும் உணர்ச்சிகளை வெளியிடுவது கவிதை ஆகாது. உணர்ச்சிகள் அநுபவமாய்க் கனிய வேண்டும். அந்த அநுபவச் சொத்தைச் சேகரிக்க ஓர் ஆயுள் முழுவதும் வேண்டியிருக்கும். சரியான படி செஞ்சொற்களில் பத்து வரிகள் எழுதுவதற்கு எவ்வளவோ அநுபவம் தேவை" என்று, 'மால்டி லாரிட்ஸ் பிரிக்கின் புத்தகக் குறிப்பு' (The Note - book of Malte Laurids Brigge) என்ற நூலில் ரில்க் தம் கருத்தை வெளியிடுகிறார்.

கவி தன்னுடைய ஆற்றலை ஆண்டவனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். மேலும், கவி ஒருவன் தான் வாழ்வின் மர்மத்தையெல்லாம் உள்ளபடி அறிய முடியும். 'ஆர்ஃப்பியூஸைக் குறித்துப் பாடிய பாடல்'களில் (Sonnets to Orpheus) கவியைப்பற்றி இவர் கூறியுள்ள வரிகள் நோக்கத் தகுந்தன:

மற்றவர் மேலிந்தே
மன மிக மறுகினர்;
ஆயினும்,
கிளைக்குமேல் கிளையாய்க்
கிளர்ந்தெழ கவிஞ,
கால அலைக்குமேல்
கடிந்தே செல்வாய்.
உலக மரத்தின்
உச்சியில் உவந்து
மீட்டுவாய், மீட்டுவாய்
உன்றன் யாழையே.

வாழ்வின் தளிராய் அவன் விளங்குகிறான். உதாரணமாக: எத்தனையோ காலந் தவங் கிடந்து வால்மீகி பகவான் தம் இதிகாசத்தை இயற்றினார். தியானத்தில் இருக்கும்போது, அவரைப் புற்று மூடிவிட்டது. பிரபஞ்சத்தின் ரகசியங்களையெல்லாம் ஆழ்ந்து உற்றுக் கேட்டார். பிறகு கவிதைக் கொம்பின் மீது அமர்ந்து ஒரு கோகிலம் போல இன்பமாய்ப் பாட்டிசைத்தார். அதை உலகம் கேட்டு இன்புற்றது; இன்புறுகின்றது. வாழ்வின் கொழுந்தாய் அவர் திகழ்ந்தார் என்பதில் சந்தேகமில்லை.

ரில்க் எழுதின நூல்கள் யாவும் இவருக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பைக் கூறுகின்றன. தம்முடைய சாதாரண உணர்ச்சிகளைக் கொட்டுவதற்காக மட்டும் பாடல்களை இவர் இசைக்கவில்லை; இயற்கையிலும், உணர்ச்சியற்ற பொருள்களிலும், எழைமையிலும், எழையாயுள்ள ஜன சமுதாயத்திலும் இவர் ஆண்டவன் செயலைக் கண்டார்; ஆண்டவன் குரலைக் கேட்டார்; ஆண்டவன் திருநடனத்தைப் பார்த்தார். இந்தப் பேருண்மையை நாடுகின்ற தம் நீண்ட யாத்திரையில் தமக்கு நேர்ந்த அநுபவத்தை வெளியிடுவதற்காகவே, தாம் ஒரு கவியானார். ஆண்டவன்தான் தமக்கு 'உண்ணுஞ் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலையு மெல்லா'மாகக் கண்டார். அவன் இல்லாத இடமில்லை. அவன் எல்லாப் பொருள்களிலும் தோன்றுகிறான் என்ற தத்துவத்தை 'அண்டவனைப் பற்றிய கதைகள்' (Stories of God) என்ற உருக்கமான நூலில் வெளியிட்டுள்ளார். எல்லாவற்றையும் சமனாகப் பார்க்க வேண்டும் என்று கீதை கூறுகிறதன்றோ? உண்மையான அன்பைப் பரீட்சை செய்வதற்கு ஓர் உரைகல் உண்டு. "ஒரு குஷ்டரோகியை ஒரு காதலியைப்

போலக் கட்டி அணைக்கும் நிலைக்கு ஒருவன் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுகிற பொழுதுதான் உண்மையான அன்பு தோன்றும்'' என்று தம் 'புத்தகக் குறிப்'பில் இவர் கூறுகிறார்.

ஒரு நிலையில் நின்று நோக்கும் பொழுது உலகம் இருள் தரும் இன்னல்கள் நிறைந்ததாகத் தோன்றும்; இன்னொரு நிலையில் நின்று பார்க்கும்பொழுது அன்பும் ஒளியும் அழகும் அறமும் கைகோத்துத் தெய்வ நடனம் புரிகின்ற நிலை நம்முன் விரியும். ருஷிய நாட்டு டாஸ்டவிஸ்கி (Dostoevsky) என்பவரும் இந்த நிலையைத் தம் நாவல்களில் சித்திரித்திருக்கிறார்; 'இரு விதக் காட்சி' (The Dual Vision) என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டே 'காரமசோவ் சகோதரர்கள்' (The Brothers Karamazov), 'அறிவிலி' (The Idiot) முதலிய நாவல்களை அவர் எழுதியிருக்கிறார்.

'மனிதக் கண்ணோடு இவ்வுலகத்தை நான் பார்க்கப் போகிறதில்லை; ஒரு தெய்வக் கண்ணோடு பார்க்கப் போகிறேன். இதுதான் என் காரியம். இந்தக் காரியத்தை நோக்கியே என்னுடைய முயற்சிகள் யாவும் செல்லும்' என்கிறார் ரில்க். இவர் பாடிய இரங்கற் பாக்களில் (Elegies) புறமும் அகமும் ஒன்றாய்த் திகழ்கின்றன. புறத்தில் அகத்தைக் காண்கிறோம். இயற்கையே ஆண்டவனைக் காட்டக் கூடிய ஒரு பெருஞ் சின்னமாய்க் காட்சி அளிக்கிறது. எங்கும் தெய்வ நகையும் மணமும் தோன்றுகின்றன.

நாம் இல்லாமற் போனால், ஆண்டவன் ஒன்றும் செய்வதற்கில்லை. நமக்குப் பகவான் எத்தனை தேவையோ, அத்தனை தேவை அவனுக்கு நாமும் என்ற கருத்தைத் தருகிறார்:

ஐயனே! நீ யேன்
செய்வாய், ஐயனே?
நானே நீயுணும்
நலநீதரும் பாத்திரம்.
அஃதுடைநீ திடுமேல்,
அஃதுடை நீ திடுமேல்,
யாதுநீ செய்வாய்?
யாதுநீ செய்வாய்?
நானே நீயுணும்
நறுநீர் தானே;
அந்நீர் அழிவுறின்,
அந்நீர் அழிவுறின்
நீயேன் செய்வாய்?
நீயேன் செய்வாய்?
நல்லுடை உனக்குநான்,
நலிவுறின் என்னும்?
நீயிலை; நானிலேன்;
இல்லை நீயே?

ஆண்டவனுக்கும் நமக்கும் இருக்கிற தொடர்பை இந்த அடிகள் மிகக் கவின் பெறச் சித்திரிக்கின்றன. "நீ என் கண்களால் உன்னுடைய படைப்பைக் காண்கின்றாய்; என் செவிகளால் உன் சிருஷ்டி கானத்தைக் கேட்கிறாய்' என்று டாகுர் தம் 'கீதாஞ்சலி'யில் இசைக்கிறார். 'மரணத்தைக் கண்டு அஞ்ச வேண்டாம். மரணம் நம் புக்ககத்திலிருந்து வரும் ஒரு தூதன்' என்ற முறையில் டாகுர் 'கீதாஞ்சலி'யில் மரணத்தைப்பற்றிப் பாடுகிறார். ரில்க் மரணத்தைப்பற்றிச் சிந்தியாத நாளில்லை. ஆண்டவனும் மரணமுந்தான் அவருடைய எல்லா நூல்களிலும் தொடர்ந்து நம் முன் எழுகின்றன. ஒரு

கதையில் இறந்தவர்களைப்பற்றிக் கூறுகிறார். இறப்பது எதற்காக என்ற கேள்வியைக் கேட்டுக்கொண்டு அதற்கு விடையும் தருகிறார்; 'வாழ்வின் மர்மத்தை அறிதல் பொருட்டே, இறந்தவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று அழகு பெற முடிக்கிறார். மற்றொரு கதையில், வாழ்வுத் தோட்டத்தில் சேர்ந்து வளர்கிற மலரும் கொடியுந்தான் மரணம் என்று இவர் கூறுவது நோக்கத் தகுந்தது. 'வாழ்வின் விரிவுதான் மரணம்' என்ற கருத்தில் எத்தனை பெரிய உண்மை பொதிந்து கிடக்கிறது, பாருங்கள்!

போலிஷ் மொழில் தம்முடைய 'இரங்கற் பாவை' மொழி பெயர்த்த விட்டோல்ட் வான் ஹல்விக்ஸ் (Witold Von Hulewicz) என்பவருக்கு இவர் எழுதிய கடிதம் மிகச் சிறந்த ஒன்றாகும்; 'உலகத்தையே மாற்ற வேண்டும்' என்று அதில் கூறுகிறார். வைகுந்தம், கைலாசம் என்பதெல்லாம் ஏதோ தனிப்பட்ட ஓர் இடமன்று. இந்த வையகந்தான் வைகுந்தமும் கைலாசமுமாகும். பரமயோகி அரவிந்தர் இந்த உலகத்தை அமர நாடாக்க முயன்றார். 'சாவித்திரி' என்ற தம் பெருங் காவியத்தில், தம்முடைய ஆழ்ந்த கருத்துக்களை அவர் மலரச் செய்திருக்கிறார். 'உலகம் பொய்யில்லை. உலகந்தான் அந்தப் பேரின்ப வீடு' என்று அச்சமின்றிக் கூறுகிறார்.

போலிக போலிக போலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கிங்கியாதொன்றுமில்லை

என்றும்,

ஒக்கத்தொழுகிற்றிராகில்
கலியுக மொன்றுமில்லையே

என்றும், தம் வெற்றி முரசை ஆழ்வாரும் அடிக்கிறாரன்றோ?

சந்தேகம் தெளிய வழி

அமெரிக்க ராஜதந்திரி கார்டல் ஹல் என்பவர் ஐரோப்பியத் தலைநகர் ஒன்றுக்கு ஒரு சமயம் சென்றிருந்தார். அவர் பேசும் வார்த்தைகள் சில சமயம் இங்கிலீஷ் மாதிரியும் சில சமயம் பிரெஞ்சு மாதிரியும் தோன்றின, சில ஐரோப்பியருக்கு.

அவர்கள் திகைத்துப் போனார்கள். "இங்கிலீஷ்தான்" என்று சிலரும், "பிரெஞ்சுதான்" என்று வேறு சிலரும் சொன்னார்கள். இதனால் தர்க்கம் வளர்ந்தது.

கடைசியில் ஒருவர், "கொஞ்சம் பொறுங்கள். இவர் பேச்சைக் காரியதரிசி பிரெஞ்சு பாஷையில் மொழிபெயர்க்கிறார் பார்ப்போம். அப்படி மொழிபெயர்த்தால், இவர் பேசுவது இங்கிலீஷ்தான் என்று நிச்சயம் ஆகிவிடும்" என்றார். யுக்தி எப்படி?

—வயோலா ஃப்ரெடரிக்

பரீட்சார்த்த மணம் என்று அமெரிக்காவில் ஏதோ புதிதாகச் சொல்லுகிறார்களே, அது இந்தப் பழங் குடிகளிடம் எத்தனையோ காலமாக நடந்துவருகிறது!

பழகி மணம் புரிவோர்

பிலோ இருதயநாத்

சமீபத்தில் நான் நீலகிரிக்குச் சென்றிருந்தேன். இங்கே உள்ள பழங்குடிகள் தொதுவர், குறும்பர், கோத்தர். இவர்களைத் தவிரப் படுகர், படகர், வடுகர், கௌடர் என்று பல பெயருடைய வடகரும் உண்டு. இவர்களே இங்கே பெரும்பான்மையோர். நீலகிரிக்கு வடக்கே உள்ள மைசூரிலிருந்து இவர்கள் வந்ததால்தான் இவர்களை 'வடகர்' என்று குறிக்கிறார்கள்.

பள்ளத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் பள்ளி மாணவன்

பதினேழாவது நூற்றாண்டில் மைசூரை அரசாண்ட திப்பு சுல்தான் ஆட்சியின்போது, இவர்கள் மைசூரிலிருந்து பாண்டியூர்க் காட்டின் வழியாக நீலகிரிக்கு வந்து சேர்ந்தார்கள். ஒரு நாள் கன்னடியப் பெண்மணி ஒருத்தி, கொல்லையில் இருந்த பசுவைக் கறந்துகொண்டிருந்தாள். அவளுடைய அழகைக் கண்டு சுல்தான் ஒரு சேவகனை அவளிடம் அனுப்பி, தன்னை மணம் செய்துகொள்ள அழைத்தான். அப்போது அந்தப் பெண்ணின் சகோதரன் எங்கிருந்தோ வந்துகொண்டிருந்தான். பேச்சு வளர்ந்ததாம். தனிமையாக வந்திருந்த சேவகன் மற்ற அரண்மனை ஆட்களைத் துணைக்கு அழைக்கச் சென்றான். அந்தச் சமயம் அந்தக் குடும்பத்தினர் வீட்டை விட்டுக் காட்டை நோக்கி ஓடினார்கள். தொட்டிலில் இருக்கும் குழந்தையைக்கூட எடுக்காமல் போட்டுவிட்டுப் பதறித் துடித்துக்கொண்டு காடும் மலையும் கடந்து ஓடினார்கள்.

காப்பிரைட்: சக்தி (தமிழ்: பிப்ரவரி '54), சென்னை-14.



படகர்களும் மலையாளிகளும் சேர்ந்து, மாடுகள் கட்டிச் சாமைக் கதிர் அடிக்கிறார்கள்.

பண்டைக் காலத்தில் இவர்களுக்குக் கல்வி அறிவே கிடையாது. இந்தக் காலத்தில் பட்டம் பெற்ற படகர்களும் இருக்கிறார்கள். இவர்கள் நம்மைப்போல் திருமணம் செய்துகொள்வதில்லை. இவர்களில் மாப்பிள்ளை வீட்டார் முதலில் பெண்ணைத் தங்கள் வீட்டுக்கு இரவில் முதல் அல்லது இரண்டாவது ஜாமத்தில் அழைத்து வருவார்கள். மறுநாள்

திப்புவின் ஆட்களோ விடாப்பிடியாகத் தொடர்ந்தார்கள்.

அல்லிமாயாறு என்னும் நீலகிரியின் சாரலுக்கு வந்ததும், அங்கே வசித்த குறும்பர், அவர்களை ஆதரித்ததோடு, திப்புவின் ஆட்களால் தொல்லை வராமல் இருக்க அவர்களுடைய ஆடையையும் தங்களுடையதைப்போல் மாற்றிவிட்டார்கள். புடைவை உடுத்திருந்த கன்னடியப் பெண்ணுக்கு இடையில் ஒரே ஒரு துண்டையும் மார்புக்குமேல் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாக இரண்டு கச்சைகளையும் கட்டித் தலையில் ஒரு வெண் துண்டைப் போர்த்துவிட்டார்கள். நெற்றியில் பச்சை வேறு குத்திவிடவே, அடையாளமே மாறிவிட்டது.

ஓடி வரும்போது தொட்டிலில் தூங்கிய குழந்தையை விட்டுவிட்டு வந்ததால், இன்றும் படுகர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவதில்லை. அப்படிக் கட்டுவது தங்களுக்குச் சாபக்கேடாகும் என்பது இவர்கள் கொள்கை.

காலையில் மாப்பிள்ளை வீட்டில் பெண் வீட்டாருக்கு, ஊரையே கூட்டிய பெரு விருந்தோ அல்லது சிறிய குடும்ப விருந்தோ அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி நடைபெறும். அப்போது பெண்ணும் மாப்பிள்ளையும் கலந்து பேசித் தனிமையாக ஒரு வீட்டில் வாழ்வார்கள். இந்தச் சடங்கை 'எண்ணு கூட்டி பந்தார' என்று படுக பாஷையில் கூறுகிறார்கள்.

மாப்பிள்ளை வீட்டுக்கு வந்து சுமார் இரண்டு மூன்று ஆண்டுகள் வரையில் பெண்ணுக்குக் குழந்தை உண்டாகிறதா என்று பார்ப்பார்களாம்.

மாப்பிள்ளையிடம் ஒப்புவித்து அவள் ஐந்து, அல்லது ஆறுமாதக் கர்ப்பவதியாக இருக்கும்போது தான் திருமணம் நடத்துவார்கள். திருமணச் சடங்கை, 'கண்ணி கட்டி மதுவை' அல்லது 'அரக்கோல் மதுவை' என்று கூறுகிறார்கள். அன்று சக்திக்குத் தகுந்தாற்போல ஊர் விருந்து நடக்கும். மூன்று நான்கு ஆண்டுகள் கழித்

தும் பெண் கர்ப்பவதியாகா விட்டால், தாய் வீட்டுக்கு அவளை அனுப்பிவிட்டு, இதைப்போலவே மீண்டும் சடங்குகள் செய்து, மற்றொரு பெண்ணை அழைத்து வந்து விடுவார்களாம்.

குழந்தை பிறக்கவில்லை என்று தாய் வீடு சென்றவள், மறுபடியும் வேறு விவாகம் செய்துகொள்ளுவாள். மறு விவாகம் செய்துகொள்ள அவளுக்குப் பூரண சுதந்தரம் உண்டு. சில சமயங்களில் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்த பிறகும் இருவரில் யாருக்காவது அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், உடனே பெண்ணோ அல்லது ஆணோ சண்டை சச்சரவு இராமலே பெருந்தன்மையாக விலகிவிடுவது சகஜம். இது ஒரு விதம். மற்றொன்று, அந்தக் குடும்பத்தில் ஆண் மகவு இல்லாத குறை ஏற்பட்டால், இரண்டு மூன்று பெண் குழந்தைகள் பிறந்த பிறகும் மனைவியை வேண்டாமென்று விலக்கியோ விலக்காமலோ இரண்டாந் தாரம் கொள்வார்கள். விதவைகளை உடனே மற்ற ஆண்கள் மணம் செய்துகொள்ளுவதால், இந்தச் சமூகத்தில் விதவைகளைக் காண்பது அருமை.

இளம் படகா

நம்மைப் போலவே, இவர்களும் சீதனம் கொடுக்கிறார்கள். ஆனால் முறம், உலக்கை, உரல், துடைப்பம் முதலியவைகளையும், கூடுமானால் பசு, எருமை முதலியவைகளையும் பெண் வீட்டார் கொடுப்பது வழக்கம். பெண்ணுக்குக் குறைந்தது திருமணத்துக்கு முன்பு மாப்பிள்ளை நூறு ரூபாயாவது கொடுக்கவேண்டும். பெண்ணின் பெற்றோர்கள், அந்த ரூபாய்க்கு வெள்ளி நகைகளாக வாங்கிப் பூட்டிவிடுவார்கள்.

படக ஆண்களும் பெண்களும்

பொன் நகைகளைவிட வெள்ளி நகைகளைத்தான் படகர்கள் அதிகமாக அணிந்துகொள்ளுகிறார்கள். சாதாரணமாக அவர்கள் பெரிய காப்பு, மோதிரம், தொங்கும் கம்மல், தட்டை மூக்குத்தி இவைகளையும் பழைய காலத்து வேறு நகைகளையும் அணிகிறார்கள்.

மிக விலையுயர்ந்த செருப்பாக இருந்தாலும், இரவிலும் பகலிலும் தெருவிலேயே வைத்துவிடுவார்கள்.

இவர்கள் சமுதாயத்தில் ஆண்களோ அல்லது பெண்களோ அந்நிய ஜாதியாரின் வீட்டில் சாப்பிட்டால், சாப்பிட்டவர்களுடைய நாக்கில் சூடு போட்ட பிறகுதான் வீட்டுக்குள் சேர்ப்பார்கள்.

இவர்களிடம் ஜாதிக் கட்டுப்பாடும், ஜாதி ஒற்றுமையும், குடும்ப ஒற்றுமையும், புருஷன் மனைவி விசுவாசமும் மிக அதிகம். இவர்கள் வீட்டில் வெண்கலப் பாத்திரங்கள் அதிகம். 'வட்டுலு' என்ற நல்ல வெண்கலப் பாத்திரத்திலே சாப்பிடுகிறார்கள். சுமார் நான்கு ஐந்து பெண்கள் ஒற்றுமையுடன் ஒரே தட்டில் சாப்பிடுவார்கள். அவரவர் வீட்டில் இருக்கும் சமைத்த பதார்த்தங்களை ஒன்றாக வைத்துக் கொண்டு சாப்பிடுவார்கள்.

இவர்களின் தெய்வங்கள், 'மாகாளி,' 'எத்தையம்மன்,' 'ஜடசாமி' என்பவை. இவைகளுக்குக் கோயில்கள் கட்டியிருக்கிறார்கள்.

இவர்கள் வசிக்குமிடத்துக்கு, 'ஹட்டி' என்று பெயர். இவர்கள் எல்லாருமே சாதாரணமாய்ச் சிறிய பொன் துண்டு ஒன்று வைத்திருக்கிறார்கள். குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் உயிர் போகும் போது அந்தப் பொன் துண்டை வெண்ணெயில் வைத்து வாயில் போடுவார்கள். பிறகுதான் பால் ஊற்றுவார்கள். சிலர் இந்தப் பொன் துண்டோடு, சாமை அல்லது அரிசி சேர்த்தும் வாயில் போடுவதுண்டு. புருஷன் இறந்துவிட்டால், வர்ணமிட்ட புதுக் கூடை ஒன்றைப் பிடித்துக் கொண்டு பிணத்தை மனைவி சுற்றுவாள்.

பொதுவாக இவர்கள் பயிர்த் தொழில் புரிகிறார்கள். காபி, தேயிலை, சின்கோனா, யூகலிப்டஸ், கோதுமை, பார்லி, சாமை, ராகி, பழவகைகள், காய்கறிகள், கிழங்கு வகைகள் முதலியவை பயிர் செய்கிறார்கள்.

இவர்களின் தொகை சென்ஸஸ் கணக்குப்படி மற்ற எல்லா மலைவாசிகளையும்விட அதிகம். இவர்கள் பேசுவது கன்னடமும் தமிழும் கலந்த ஒரு மாதிரியான மொழி. இன்பம் கலந்த சூழ்நிலை, அமைதியான வாழ்க்கை, தொடர் மலைகளின் நீலக் காட்சி, சலசலக்கும் நீரோடை, வற்றாத வளமை முதலியவை நிறைந்த இடம் இவர்கள் வாழும் நீலகிரி.

ஒரே பாட்டில் தீர்த்துவிடும்

நோயாளி: இந்த ஒரே பாட்டில் மருந்தில் என் இருதய நோய் தீர்ந்துவிடுமா? உங்களுக்கு நிச்சயந்தானா?

டாக்டர்: அதென்னவோ; இதுவரைக்கும் எவனும் இரண்டாவது பாட்டிலைத் தேடி என்னிடம் வந்ததே கிடையாது.

—'இல்லஸ்டிரேடட் வீக்லி அவ் இந்தியா'

கார்ட்டூன் கதம்பம்

கோவாவுக்குப் போர்ச்சுகீசியர் புதிய அந்தஸ்து அளிக்கப்போகிருர்களாம்.

—'சங்கர்ஸ் வீக்லி'



''இது ரொம்பவும் சாந்தமானது. குரைக்கவும் குரைக்காது; கடிக்கவும் கடிக்காது'' என்கிருர் காட்ஜு.

—'ப்ளிட்ஸ்'

யுத்த அபாயத்தைத் தடுத்து உலக சமாதானத்தைத் தோற்றுவிக்க என்ன வழி?

உண்மையான பலம்

விநோபா பாவே

இன்று இந்திய மக்களுக்கு மிகுந்த பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. உலகம் சமாதானத்தை நோக்கியே சென்றுகொண்டிருப்பதாக எண்ணி வந்தோம். கடைசியாக உலகம் சமாதான வழியைத்தான் கடைப்பிடிக்கும் என்பது என் நம்பிக்கை. ஆனால் இப்போது சமாதானத்துக்கு எதிரான சக்தி வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பெரிய வல்லரசுகள் சமாதானத்துக்கு எதிராக வேலை செய்துகொண்டிருக்கின்றன. அவை யுத்தத் தீயில் உலகத்தை ஆழ்த்த விரும்புகின்றன என்று நான் சொல்லவில்லை. பெரிய தலைவர்கள் உலக சமாதானம் என்று சொல்லுவது வெறும் பாசாங்கு என்று நான் கருதவில்லை. அமெரிக்கா, ருஷியா இன்னும் பிற தேசங்கள் எல்லாம் உலக சமாதானம் ஏற்படவும், உலகில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவும் உதவியாக இருக்கவே விரும்புகின்றன என்பதை நான் அறிவேன். ஆனால் அவற்றின் செயலைப் பார்க்கும்போது, எதிரிடையாகவே இருக்கிறது என்பதை நான் கூறத்தான் வேண்டும்.

ஆசியாவில் உள்ள எல்லா நாடுகளுக்கும் உதவி புரிந்து தன்னுடைய செல்வாக்கு அங்கு நன்றாக வேரூன்றச் செய்ய வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. இதில் சுயநலம் இல்லை. உலகத்தைக் காப்பாற்றவே இவ்விதம் செய்கிறோம் என்று அமெரிக்கர் கருதுகிறார்கள். ஆனால் அவர்கள் அதற்காக வேலை செய்யும் முறை, அதாவது ராணுவ உதவி கொடுப்பது ஆபத்தான காரியம். அதனால் சமாதானத்துக்குப் பதில் கொந்தளிப்பே ஏற்படும். அமெரிக்காவின் இந்தப் போக்கைக் கண்டு ஆசியாவில் சில தேசங்கள் வருந்துகின்றன. "இந்தியாவும் இவ்வித ராணுவ உதவி தனக்குத் தேவை என்று கோரினால் அந்தக் கோரிக்கையை அநுதாபத்துடன் கவனிப்போம்" என்று அமெரிக்க ஜனாதிபதி நம் பிரதமமந்திரிக்கு எழுதிவிட்டார்.

பாகிஸ்தான் அவ்வித உதவி பெறுவது நல்லதே என்று கருதியது. இதனால் பாகிஸ்தான் பலம் பொருந்திய நாடாகிவிடும் என்று பாகிஸ்தான் தலைவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்தியா இவ்வித ஆயுதப் போட்டியில் விழ விரும்பவில்லை. இதைத் தெளிவாக நம் தலைவர்கள் எடுத்துரைத்துவிட்டார்கள். நாம் வெளி உதவி பெற விரும்பவில்லை. காந்திஜி காட்டிய வழியில் இந்தியத் தலைவர்கள் சென்றுகொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். பாகிஸ்தான் வெளியாரிடமிருந்து ராணுவ உதவி பெறுகிறது. நாமும் நம் சமாதான வழியை விட்டு அதைப் பின்பற்றினால்,

மூலம்: ஸர்வோதயம் (தமிழ்: மே '54), திருப்பூர்.

நமக்கே ஆபத்தை உண்டாக்கிக் கொண்டவர்களாவோம். பிறகு நமக்கு எந்த விதமான சுதந்தரமும் இருக்காது. எல்லாவற்றிற்கும் பிறரை அண்டியிருக்க வேண்டி வரும். இந்தச் சுழலில் நாம் சிக்கக்கூடாது. நம் தலைவர்கள் - முக்கியமாகப் பண்டித நேரு-இந்தத் தத்துவத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ''உங்களுக்கும் உதவி அளிக்கத் தயார். எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உதவி அளிக்கிறோம்'' என்று அமெரிக்க ஜனாதிபதி கூறுவது கேலியாகவே தோன்றுகிறது. வெளி உதவியே தேவையில்லை என்று நாம் சொல்லும்போது ஒருவர் நமக்குத் ''தயவு காட்டுகிறேன்'' என்று கூறுவது கேலியே தவிர, வேறு அல்ல.

வெளி உதவி பெற்றுக்கொள்ள விரும்பவில்லை என்பதோடு மட்டும் நம் வேலை தீர்ந்து விடாது. தேசத்தை உண்மையான வகையில் பலம் பொருந்தியதாக்க வேண்டும். ஒரு தேசம் ராணுவ ரீதியில் தன்னைப் பலப்படுத்திக் கொண்டால், அண்டை நாடுகள் அதைக் கண்டு துவேஷிப்பதும் பயப்படுவதும் சகஜம். அப்படிப் 'பலப்படுத்திக்கொள்வது' தவறு. உண்மையான முறையில் ஒரு தேசம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டால் அதைக் கண்டு யாரும் பயப்பட மாட்டார்கள். மற்ற எல்லாத் தேசங்களையுமே அது பலப்படுத்திவிடும். ஒரு தேசம் இப்படிப் பலம் அடைவதால் பிற தேசங்களுக்குப் பயம் உண்டாவதில்லை. தாங்களும் இவ்விதம் பலப்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற ஊக்கம் அவைகளுக்கு ஏற்படும்.

பலப்படுத்திக்கொள்வது என்றால் என்ன? உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மனப்பான்மை ஒழிந்து, சுயதேவை பூர்த்தியாகி, அன்பாக இருப்பதே உண்மையாகப் பலப்படுத்திக்கொள்வதன் லட்சணம். இவ்விதமாக நம் தேசத்தை நாம் பலப்படுத்திக் கொண்டால், எவ்வளவுதான் கஷ்டங்கள் நம்மைச் சூழ்ந்து வந்தாலும் நாம் கவலையில்லாமல் இருக்கலாம். நம்மை நாம் பலப்படுத்திக் கொண்டால், உலகத்தையே காப்பாற்ற முடியும். பெரிய தத்துவத்தை நான் சொல்லிவிட்டேன். ஆனால் உலகத்தை இறைவன்தான் காப்பாற்றவேண்டும்; நம்மால் காப்பாற்ற இயலாது. இறைவனின் கருணையினால் நம் புத்தியை நாம் ஸ்திரப்படுத்திக் கொண்டு வந்தால், அஹிம்சையின் சக்தியையும் அன்பின் சக்தியையும் சத்தியாக்கிரகத்தின் சக்தியையும் நாம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தால், நம்மிடையே உள்ள ஏழைமையை விரட்டி நிர்மாணத் திட்டங்களை ஊக்கத்துடன் நிறைவேற்றி வந்தால், அதற்காக ஒவ்வொருவரும் புரிய வேண்டிய தியாகங்களைப் புரிந்தால், ஒற்றுமையாகச் சகோதர பாவத்துடன் வாழ்ந்தால், இறைவன் நம்மைக் கருவியாகக் கொண்டு உலகத்தைக் காப்பாற்றக்கூடும். உலகத்தில் நடைபெறும் போராட்டத்தில் நாமும் சிக்கிவிடுவோம் என்று கருத வேண்டியதில்லை. நாம் ஜடப் பொருளல்ல; சேதனர்கள். சூழ்நிலை நம் கையில்தான் இருக்கிறது. தேச நிலைமையை நாம் சமாதான முறையில் சீர்திருத்தினால், நாமும் உலகப் போராட்டச் சங்கடத்தில் சிக்கிக்

கொள்ள வேண்டியதில்லை. உலக சமாதானத்தைக்காப்பதில் உதவி புரியக் கூடியவர்களாகவே இருப்போம்.

கூட்டுச் சேருவதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அநேக நாடுகள் தங்களுக்குள் கூட்டுச் சேர்ந்திருக்கின்றன. நாம் எந்தக் கூட்டிலும் சேர விரும்பவில்லை. இவ்விதக் கூட்டினுல் ஒருவிதப் பிரயோஜனமும் விளையாது. பயங்கொள்ளிகளும் நீதியற்றவர்களும் சேர்ந்து எவ்வளவுதான் கூட்டு அமைத்துக்கொண்டாலும், அந்தக் கூட்டுக்குப் பலம் ஏற்படாது. நாம் பயங்கொள்ளிகளாகவும் அக்கிரமத்துக்கு முன்னுல் தலை வணங்கியவர்களாகவும் இருந்தால், நமக்குள் ஒற்றுமையில்லாமல் சண்டையிட்டுக்கொண் டிருந்தால், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற மனப்பான்மை கொண்டிருந்தால், நாம் எவ்வளவுதான் கூட்டு அமைத்துக்கொண்டாலும் பிரயோஜனம் ஏற்படாது. ஐம்பது பூஜ்யங்களை ஒன்று சேர்த்துக் கூட்டினுல் என்ன விடை கிடைக்கும்? அதே பூஜ்யந்தான் கிடைக்கும். நம்மை உண்மையான பொருளில் பலப்படுத்திக்கொண்டால், உலகத்தில் நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, நம் தேசம் ஒரு கோட்டையாக மாறிவிடும். ஆகையால் எனக்குக் கூட்டு அமைத்துக்கொள்வதில் நம்பிக்கையில்லை. தேசத்தின் நிலைமையை நாம் உடனே மாற்றவேண்டும்.

நம் தேசத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகம் இருக்கிறது; அதைப் போக்க வேண்டும். ஏழைமையை அகற்ற வேண்டும். உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உழைக்கும் உற்சாகத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். சோம்பலைப் போக்க வேண்டும். சமூக வாழ்க்கையில் ஜாதி, வகுப்பு, மதம், பாஷை முதலிய பாகுபாடுகளை நீக்க வேண்டும். இன்று கட்சிகளிடம் அதிக மாச்சரியம் காண்கிறது. தீண்டாமை கொஞ்சம் மறைந்துதான் இருக்கிறது. ஆனுல் தீண்டாமை என்ற பேய் இன்னும் இறந்துவிடவில்லை. சமூக வாழ்க்கையில் இந்த மாதிரியான சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும். இன்று எங்கே பார்த்தாலும் லஞ்சம், குடி, மோசமான சினிமா முதலியவற்றையே காண்கிறோம். சினிமா நல்லதுதான். ஆனுல் இன்று அது சென்றுகொண்டிருக்கும் மோசமான பாதையினுல் தேசத்துக்கே அழிவு ஏற்படும். இவைகளை எல்லாம் போக்கி நம்மைச் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவர் என்ன செய்வார்?

சாப்பிட வந்தவர் (பரிமாறுகிறவனைப் பார்த்து): இந்தா அப்பா, இந்தப் பலகாரத்தை நான் சாப்பிட மாட்டேன். மானேஜரைக் கூப்பிடு.

பரிமாறும் ஆள்: அவர் வந்து என்ன பிரயோசனம்? அவருந்தான் இதைச் சாப்பிட மாட்டார்.

—'இல்லஸ்டிரேடட் வீக்லி அவ் இந்தியா'

அணு விஞ்ஞானி சங்கடம்

★

அமெரிக்க அணுகுண்டு தயாரிப்பதில் தலைமை தாங்கி நின்று வெற்றி கண்ட உலகப் பிரபல விஞ்ஞானி ஓப்பன்ஹீமர் என்பவர். இவரை ராஜ்ய விசுவாசம் இல்லாதவர் என்று சொல்லி இன்று தள்ளியிருக்கிறார்கள். விசாரணையும் புரிந்து வருகிறார்கள். கம்யூனிஸ்ட் அநுதாபி என்று இவரைச் சந்தேகிக்கிறார்கள். இவருடைய வரலாறு இது.



"நான் 1904-இல் நியூ யார்க் நகரில் பிறந்தேன். என் தகப்பனார் 17-ஆவது வயதில் ஜெர்மனி தேசத்திலிருந்து இங்கே வந்து சேர்ந்தார். அவர் வெற்றிகரமான வியாபாரி; சமூக விவகாரங்களில் ஈடுபட்டு உழைத்தவர்.. எதிக்கல் கல்சர் ஸ்கூல், ஹார்வர்டு காலேஜ் இரண்டிலும் நான் படித்தேன். அந்தக் காலேஜில் 1922-இல் நான் சேர்ந்தேன்" என்கிறார் அணுகுண்டு நிபுணர் ஓப்பன்ஹீமர். அணுசக்தி (ஆட்டம் எனர்ஜி) கமிஷன் என்ற சர்க்கார் ஸ்தாபனம் தம்மை 'ஸஸ்பெண்டு' செய்ததற்கு எழுதிய பதிலில்தான் இப்படி இவர் கூறுகிறார்.

மூன்றாவது வகுப்பிலோ, நான்காவது வகுப்பிலோ இவர் படித்துக்கொண்டிருந்த காலத்தில் இவர் செய்த செயல் ஒன்றை இவரோடு படித்த மாணவர் ஒருவர் சொல்லுகிறார். கலாசாலையின் விளையாட்டு மைதானத்துக்கு ஓப்பன்ஹீமர் எப்போதாவதுதான் போவாராம். ஒரு சமயம் இவர் அங்கே போனபோது, ஒரு சிறுவன் விளையாட்டுப் பந்தை வீசி எறிந்தான். "இந்த மாதிரி எறிந்தால், வழியிலே போகிற யார் மேலாவது பட்டுக் காயம் உண்டாக்கி விடாதா?" என்று சிறுவர்களைக் கலாசாலை அதிகாரி கண்டித்தார். உடனே ஓப்பன்ஹீமர் ஒரு கணக்குப் போட ஆரம்பித்து விட்டார். பக்கத்து நடைப் பாதையில் பந்து போய் விழுந்த வேகத்தைக் கணக்கிட்டுப் பார்த்

காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்: 26-4-'54), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

தால், அதன் அடி யாருக்கும் காயம் உண்டாக்காது என்று நிரூபித்துக் காட்டினார். ஹைஸ்கூலில் படிக்கும்போது, 'கால்குலஸ்' என்ற கணிதத்தை இவர் கற்றார். கிரேக்க பாஷையில் ஆர்வம் கொண்டார். மூன்றே மாதத்தில் ஸாஃபக்ளீஸ் என்ற பழமையான நாடகாசிரியரின் நூல்களை அகராதியின் உதவியில்லாமலே படிக்கத் தொடங்கிவிட்டார்.

இவருக்கு ஐந்து வயதாக இருக்கும்போது, இவருடைய தாத்தா, தாதுப் பொருள்களில் (மினரல்ஸ்) இவருக்கு ஊக்கம் விழச் செய்தார். இவருக்கு விளையாட்டுப் படகு ஒன்று உண்டு. அதற்கு இவர் 'ட்ரைமெதி' என்று பெயர் வைத்தார். 'ட்ரைமெதிலீன்-பைக்ளோரைடு' என்ற ரசாயனக் கூட்டுப் பொருளின் குறிப்பாகவே படகுக்கு இவ்விதம் பெயர் சூட்டினார்.

எதிக்கல் கல்சர் ஸ்கூல் வகுப்பில் படித்தபோது, பிற பையன்களோடு அதிகமாகப் பழக மாட்டாராம். "என் வகுப்பு மாணவரில் எவனையும் எனக்கு ஞாபகமேயில்லை. என்னைக் கண்டால் என்னவோ எவனுக்குமே பிடிப்பதில்லை" என்று இவரே ஒரு முறை சொல்லியிருக்கிறார்.

காலேஜில் சேர்வதற்கு முன்பே, அறிவுத் துறையில் மிகவும் ஈடுபட்டுத்தான் இருந்தார். ஆயினும், ஹார்வர்டு காலேஜில் சேர்ந்தபோதே, ஞான லோகத்தின் கதவு திறந்ததுபோல் இவருக்குத் தோன்றியது. "என் வாழ்க்கையில் அதுவே மிகவும் பரவசமான காலம். ரோம் நாட்டில் ஜயசீலர்களாக, கோத் (பழைய ஜெர்மன்) ஜாதியினர் நுழைந்தபோது எப்படி இருந்திருப்பார்களோ அப்படிப் பரபரப்படைந்தேன். கல்வி கற்க அப்போதுதான் எனக்கு உண்மையான வாய்ப்புக் கிடைத்தது. மகிழ்ச்சியுற்றேன். படிக்க வேண்டிய பாடங்களைவிட அதிகமான விஷயங்களைப் படித்தேன். போர் போல் கிடந்த புஸ்தகக் குவியல்களிலே மூழ்கினேன். அதை என் அறிவுப் படையெடுப்பு என்றே சொல்ல வேண்டும்" என்று இவர் சொல்கிறார்.

பௌதிக சாஸ்திரம் (ஃபிஸிக்ஸ்) பாடத்தில்தான் இவருக்கு முதன்மையான ஆர்வம். இதற்காகப் பிற விஷயங்களை வேறு சிலரைப்போல் இவர் ஒதுக்கித் தள்ளவில்லை. ஹார்வர்டு சர்வகலாசாலையில் இருக்கும் போதே ஸாஃபக்ளீஸ் நாடகங்களைப் படித்துவிட்டார். உலகில் நிறைந்திருக்கும் தீமைகளைக் கண்டு பின்னால் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தார். டாண்டே என்ற பிரபல இதாலிய கவிஞரின் நூலைக் கண்டுகொண்டார். பிரெஞ்சு இலக்கியங்களைப் படித்தார்.

பிற்காலத்தில் பெரிய தலைவராக விளங்க இருந்த இவருக்கு, ஹைஸ்கூல் மாணவரில் எவனிடமும் கவர்ச்சி ஏற்படவில்லை; அதேபோல் காலேஜ் மாணவரில் எவனும் இவரை ஒன்றும் அப்படிப் பிரமாதமாய் மதிக்கவில்லை. வருஷ முடிவில் வெளியிடும் 'காலேஜ் ஈயர் புக்'கில், 'மூன்று வருஷம் அண்டர்கிராஜுவேட்' என்ற வரியைத் தவிர வேறு எதுவும் இவரைப்பற்றிக் காணவில்லை.

ஐக்கிய அமெரிக்காவிலும் பிற வெளிநாடுகளிலும் மேலும் மேலும்

ராஜாங்க செக்ரடரி டல்லஸ்

தொடர்ந்து படித்தார். 1929-இல் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பினார். பெரிதும் முன்னுக்கு வரக்கூடிய பௌதிக சாஸ்திரி (ஃபிஸிஸிஸ்ட்) என்று அப்போதே இவரைப் புகழத் தொடங்கிவிட்டார்கள். பாஸடேனா என்ற இடத்தில் உள்ள கலிஃபோர்னியா இன்ஸ்டிட்யூட் அவ் டெக்னலஜி, பெர்க்ளி என்ற இடத்தில் உள்ள யூனிவர்ஸிட்டி அவ் கலிஃபோர்னியா என்ற இரண்டு கல்வி ஸ்தாபனங்களிலும் சேர்ந்தாற்போல் தமக்குக் கிடைத்த பதவிகளை ஏற்றுக் கொண்டார். நியூ யார்க் நகரில் வசிக்க இவருக்கு ஆசையில்லை. மேற்குப் பிரதேசமே இவருக்குப் பிடித்தது. வனாந்தரங்களில் குதிரைமீது சவாரி செய்வ தென்றால் இவருக்கு ஆனந்தம்.

அணுசக்தி கமிஷனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இவர் சொல்கிறார்: "பாஸடேனா, பெர்க்ளி இரண்டு இடங்களிலும் பெரும்பாலும் விஞ்ஞானிகளும் இலக்கிய நிபுணர்களும் கலைஞர்களுமே எனக்கு நண்பர்களானார்கள். ஆர்த்தர் ரைடர் என்ற அறிவாளியிடம் நான் சம்ஸ்கிருதம் கற்றேன். பொருளாதார சாஸ்திரம், அரசியல் சாஸ்திரம் இவைகளில் எனக்கு விருப்பம் விழவில்லை. இந்த நாட்டில் இன்று நிகழும் நிகழ்ச்சிகளில் எனக்கு அடியோடு தொடர்பில்லாமல் போய்விட்டது. எந்தச் செய்திப் பத்திரிகையையும் பிற பத்திரிகைகளையும் நான் படிப்பதேயில்லை. என்னிடம் ரேடியோ, டெலிஃபோன் இவைகளை நான் வைத்துக்கொள்ளவில்லை. மனிதனிடமும் அவனுடைய அநுபவங்களிடமுமே எனக்குச் சிரத்தை உண்டாயிற்று. என் ஸயின்ஸிலும் எனக்கு ஆழ்ந்த சிரத்தை உண்டாயிற்று. தான் வாழும் சமுதாயத்தினிடம் மனிதனுக்கு என்ன சம்பந்தம் என்பது மாத்திரம் எனக்குப் புரியவேயில்லை."

ஆனால், ஸயின்ஸ் அல்லாத பிற இலக்கியங்களை ஆர்வத்தோடு இந்தக் காலத்திலும் இவர் தொடர்ந்து படித்துக்கொண்டேயிருந்திருக்கிறார். ஸம்ஸ்கிருதம் படித்ததோடு, ரோமன் கத்தோலிக் மத நூல்களையும் டாஸ்டவிஸ்கி நாவல்களையும் படித்தார். ரேடியோ, டெலிஃபோன் இவைகளை வைத்துக்கொள்வதன் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதைவிட அதிகமாக டாஸ்டவிஸ்கி நாவல்களின் மூலம் உலகத்தைப்பற்றி இவர் அறிந்துகொண்டிருக்கலாம். ஆனால், என்னவோ அப்படி அறிந்துகொள்ளவில்லை. எங்கே

பார்த்தாலும் தீமையைக் கண்ட போது, இவருக்கு இடி விழுந்தது போல் ஆயிற்று. அணுசக்தி கமிஷனுக்கு எழுதிய கடிதத்தில் இவர் சொல்கிறார்:

"1936 கடைசியில் என் சிரத்தை வேறு விஷயங்களில் திரும்பியது. ஜெர்மனியில் யூதர்கள் பட்ட பாடு என் ஆத்திரத்தைக் கிளப்பியது. இந்தத் துயரத்தால் என் மாணவர்கள் அடைந்த கஷ்டத்தைக் கண்டேன். சமூக வாழ்வில் நான் இனி அதிகமாய்க் கலந்து கொள்ள வேண்டுமென்று உணர்ந்தேன். ஆனால், அதற்கு வேண்டிய திடமான அரசியல் கொள்கையோ, அநுபவமோ எதுவும் எனக்கு இல்லை.

"ஸ்பெயின் நாட்டில் நடந்த போரிலேதான் என் அநுதாபம் மிகுதியும் சென்றது. விஷயத்தை நன்றாகப் புரிந்துகொண்டதாலோ, திடமான கொள்கையாலோ, இந்த அநுதாபம் எனக்கு ஏற்பட்டு விடவில்லை. நான் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்றதேயில்லை; அதன் இலக்கியத்தைப் படித்ததில்லை; அதன் சரித்திரத்தையோ, அரசியல் நிலைமையையோ, தற்காலப் பிரச்னைகளையோ அறிந்துகொள்ளவில்லை. வேறு பல அமெரிக்கர்களைப் போலவே நானும் சோஷலிஸ்டுகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட லாயலிஸ்டு சர்க்காரை ஆதரித்தேன். யுத்த முடிவும் லாயலிஸ்டுகள் தோல்வியும் எனக்குப் பெருந்துயரம் அளித்தன.

"ஸ்பெயின் கஷ்ட நிவாரண முயற்சிகளில் ஈடுபட்ட தன் மூலமே டாக்டர் தாமஸ் ஆடிஸ் என்பவரை நான் அறிய வந்தேன். அவர் வைத்தியத்துறையில் சிறந்த விஞ்ஞானி. எனக்கு நண்பரானார். தம் வழியாக ஸ்பெயினுக்கு நன்கொடைகள் அனுப்பும்படி என்னை அவர் கேட்டுக்கொண்டார். கஷ்ட நிவாரணத்தில் ஈடுபட்ட பிற ஸ்தாபனங்களுக்கு அனுப்பும் பணத்தைப் போல் அல்லாமல், இந்தப் பணம் நேராகக் கம்யூனிஸ்டுகள் மூலம் யுத்த வீரர்களுக்குப் போய்ச் சேரும் என்று அவர் சொன்னார். நான் அப்படியே நன்கொடைகள் அனுப்பினேன். கம்யூனிஸ்டுகள் அபாயமானவர்கள் என்று அப்போது நான் எண்ணவில்லை. 'அவர்களுடைய அறிக்கையில் கண்டிருந்த சில நோக்கங்கள் நல்லவை' என்றே எனக்குத் தோன்றியது.

"கொஞ்ச காலத்தில் இந்த நன்கொடைகள் நின்றன. பேர்ல் ஹார்பர் நிகழ்ச்சிக்கு முந்திய நாள் இரவில் ஸ்பெயின் கஷ்ட நிவாரணம்பற்றிய பெருங்கூட்டம் ஒன்றுக்கு நான் சென்றேன். அடுத்த நாள் பெரிய யுத்தம் ஆரம்பித்துவிட்டது குறித்துக் கேள்விப்பட்டேன். 'ஸ்பெயின் போராட்டத்துக்கு உதவியது போதும்; உலகத்தில் இன்னும் அதிக முக்கியமான நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன' என்று எனக்குத் தோன்றியது.

"பின்னால் என் மனைவியாக விருந்த பெண்மணியை, 1939 கோடையில் பாஸடேனா நகரில் தான் முதல் முதல் சந்தித்தேன். காடலோனியா இன்ஸ்டிட்யூட் அவ் டெக்னலஜி என்ற ஸ்தாபனத்தில் பதவி வகித்த டாக்டர் ஹாரிஸன் என்பவரை இவள் மணந்திருந்தாள். அதற்கு முன்பு ஜோ

ஜனாதிபதி ஐஸன்ஹோவர்

டாலெட் என்பவரை மணந்திருந்தவள் என்றும் கேள்விப்பட்டேன். ஜோ டாலெட் போர்க்களத்தில் சண்டையிட்டு இறந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர். அவரோடு வாழ்ந்த ஒன்றிரண்டு வருஷ காலம் இவளும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினளாக இருந்தாளாம். இவளை நான் சந்தித்தபோது, கம்யூனிஸ்ட் கட்சியிடம் இவளுக்கு வெறுப்பும் ஏமாற்றமும் உண்டாகியிருக்கக் கண்டேன். ஒரு காலத்தில் தான் நினைத்திருந்தபடி கம்யூனிஸ்ட் கட்சி இல்லை என்று அவள் சொன்னாள்.

“1943 - ஆரம்பத்தில் லாஸ் ஆலமோஸ் என்ற இடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். என் அபிப்பிராயங்கள் மாறிவிட்டன; யுத்தம் சம்பந்தமான வேலைச் சுமை குவிந்திருந்தது. ஆகவே, இடதுசாரி ஸ்தாபனங்களிடமும் கோஷ்டிகளிடமும் எனக்கு இருந்த சம்பந்தங்களையெல்லாம் அறுத்துக் கொண்டு விட்டேன். பிறகு ஒரு போதும் அந்தச் சம்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளவே யில்லை.”

1943 - ஆரம்பத்தில் லாஸ் ஆலமோஸ் அணு ஆராய்ச்சிச் சாலைத் தலைவராக ஓப்பன் ஹீமரை நியமித்தார்கள். யுத்தத்துக்கு முன்பு இவருக்கிருந்த கம்யூனிஸ்ட் சம்பந்தங்கள் அப்போதே சர்க்காருக்குத் தெரியுமாம். இவ்விதம் அணுசக்தி கமிஷனே இப்போது கூறுகிறது. லெஃப்டினண்ட் ஜெனரல் லெஸ்லீ க்ரோவ்ஸ் என்பவர்தான் இவரை அந்தப் பதவியில் நியமித்தவர். அவருக்குக் கம்யூனிஸ்டுகளிடம் அநுதாபம் உண்டு என்று சொல்ல முடியாது. அமெரிக்க ராஜாங்கத்திடம் ஒப்பன்ஹீமர் விசுவாசமுள்ளவர் என்றே நாம் நம்புவதாகப் போன வாரம் மீண்டும் அந்த லெஃப்டினெண்ட் கர்னல் ஊர்ஜிதமாய்க் கூறியிருக்கிறார்.

லாஸ் ஆலமோஸ் உத்தியோகம் ஒப்பன்ஹீமருக்கு விஞ்ஞான ஆராய்ச்சி சம்பந்தப்பட்டதாக மாத்திரம் இல்லை. அவரே கமிஷனுக்கு எழுதிய கடிதத்தில் அதை விளக்குகிறார்: “அணுசக்தி ஆராய்ச்சிச்சாலையில் வேலை செய்ய ஆள் திரட்டுவதற்காக நாடெங்கும் சுற்றினேன். காலவரையறை இல்லாமல் ந்யூ மெக்ஸிகோ வனாந்தரத்தில் ராணுவக் கட்டுதிட்டங்களுக்கு உட்பட்டு மறைந்து கிடப்பதாவது என்று பல விஞ்ஞானிகள் தயங்கினார்கள். அவர்களைத் தவிர இன்னும் எத்தனையோ குடும்பங்கள் வேறு இப்படி வந்து வசிக்கத் தயங்கின.

ஆனல், அதில் உள்ள ஒரு பரபரப்பு, விஞ்ஞான ஆர்வம், தேசபக்தி இவைகளால் உந்தப்பட்டு, இறுதியில் பலர் என்னுடன் வந்து லாஸ் ஆலமோஸில் வசிக்க இசைந்தார்கள்.''

சமுதாய வாழ்வு இன்னதென்று ஒப்பன் ஹீமர் அறிந்துகொண்டார். அதுமாத்திரம் அல்ல; மனிதர்களுக்குத் தலைமை தாங்கி நடத்தவும் கற்றுவிட்டார்.

1945 ஜூலை 16-ஆம் தேதி ஆலமோகார்டோ மணலுக்கு மேலே முதல் முதலாக அணுகுண்டின் பெரும்புகையொன்று காளான் குடைபோல் எழுந்தது. அப்போதுதான் ஒப்பன்ஹீமர் மற்றும் ஓர் உண்மைபற்றி விழிப்புற்ருர். அப்போது தாமும் தம் கீழ் வேலை செய்தவர்களும் அடைந்த உணர்ச்சிபற்றி, 1947-இல் 'உலக ராஜாங்கத்துக்கு அஸ்திவாரம்' என்ற பிரசுரத்தில் ஒப்பன்ஹீமர் எழுதியது இது: ''உலக ஒழுங்கை சில நாட்ட விஞ்ஞான ஆராய்ச்சியைப் பயன்படுத்த இந்த வேலையின் மூலம் அற்புதமான ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக நாங்கள் கருதினேம். உண்மையான சர்வதேசக் கட்டுப்பாட்டை உண்டாக்கும் பாதையில் சென்று, உலக சர்க்கார் ஒன்றை அமைத்துவிட நாங்கள் விரும்பினேம். அதுமட்டும் அல்ல; அணுசக்தியைக் கண்காணிக்கவேண்டும் என்பதில் ஏற்படக்கூடிய இடையூறுகளையெல்லாம் குறைத்து மதித்துவிட்டோம்.''

ஒப்பன்ஹீமர் புது மனிதர் ஆகிவிட்டார். அரசியல் ஆதர்சங்களை வாயால் சொல்லுவதோடு நின்றுவிடுகிறவர் அல்ல இவர். அணு சக்திபற்றிய அரசியல்வாதங்களில் தலையிடத் தொடங்கினர். அணுசக்திமீது அதிகாரம் சிவில் அதிகாரிகளுக்கு இருக்கவேண்டுமோ, ராணுவ அதிகாரிகளுக்கு இருக்கவேண்டுமோ என்ற போராட்டத்தில் ஒரு முக்கியஸ்தராகிவிட்டார். அணுசக்தி கமிஷனுக்கு ஆலோசனை சொல்ல ஏற்பட்ட ஜெனரல் அட்வைஸரி கமிட்டிக்கு இவர் தலைவரானர்.

1946-இல் ஆக்கிஸன், லிலியெந்தால் இருவர் பெயராலும் வெளியான சர்வதேச அணு சக்திக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முதன்மையாய் நின்று தயாரித்தவர் ஒப்பன்ஹீமர்தான். ''நான் கண்ட உண்மையான ஒரே மேதை இவரே'' என்று லிலியெந்தால் இவரைப் புகழ்ந்தார். ''நான் கண்ட மகோன்னத புத்திமான்கள் இரண்டே இரண்டு பேர்தான்: ஒருவர் லார்டு கேன்ஸ்; மற்றவர் ராபர்ட் ஒப்பன்ஹீமர்'' என்று ஆக்கிஸன் வியந்தார். யுத்தத்துக்குப் பிறகு இவ்வளவு செல்வாக்கு இவருக்கு ஏற்பட்டது.

உண்மையான சர்வதேச சகோதரத்துவத்துக்கு அற்புதமான உதாரணம் விஞ்ஞானிகளே என்று ஒப்பன்ஹீமர் ஒரு சமயம் சொன்னர். அந்தச் சகோதரத்துவத்தில் இப்போது ஓர் ஓட்டை விழுந்துவிட்டது.

1949 ஜூன் 7-இல் 'ஹவுஸ் அவ் அன்-அமெரிக்கன் ஆக்டிவிடீஸ் கமிட்டி' (அமெரிக்காவுக்கு விரோதமான செயல்களை ஆராயும் சபை) செய்த ரகசிய விசாரணையில், டாக்டர் பெர்னர்டு பீட்டர்ஸ் என்ற மற்றோர் அணு விஞ்ஞானியைப்பற்றி ஒப்பன்ஹீமர் சாட்சியம் கொடுத்தார்.

கேள்வி: டாக்டர் பீட்டர்ஸ் அபாயமானவர் என்றும் பெரிய கம்யூனிஸ்ட் என்றும் ஸெக்யூரிட்டி அதிகாரி ஒருவரிடம் நீர் சொன்னதுண்டா?

பதில்: டாக்டர் டி ஸில்வா என்பவரிடம் நான் அப்படிச் சொன்னதுண்டு.

கேள்வி: அவரைப்பற்றி விவரமாய்ச் சொல்லும்.

பதில்: டாக்டர் பீட்டர்ஸ் ஜெர்மன் தேசத்தவர் என்று நினைக்கிறேன். ஜெர்மன் நேஷனல் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினராக இருந்திருக்கிறார். அவரை நாஜிகள் சிறைப்படுத்திவிட்டார்கள். அவர் எப்படியோ தப்பி ஓடிவிட்டார். கலிஃபோர்னியா மாகாணத்துக்கு வந்து சேர்ந்தார். ஒரு வேலையும் செய்யாத உதவாக்கரை என்று கம்யூனிஸ்ட் கட்சியைப் பலமாய்த் திட்டினர்.

இந்தக் கேள்வி பதில்கள் உடனே ரோசெஸ்டர் 'டைம்ஸ்-யூனியன்' என்ற பத்திரிகையில் வெளியாயின. நேஷனல் ப்யூரோ அவ் ஸ்டாண்டர்ட்ஸ் என்ற சர்க்கார் ஸ்தாபனத்தின் தலைவரான டாக்டர் எட்வர்டு யு. காண்டன் என்ற விஞ்ஞானி இதனல் வருத்தமுற்றார். கொலராடோ என்ற இடத்திலிருந்து வாஷிங்டன் நகரத்தில் உள்ள தம் மனைவிக்கு அவர் ஒரு கடிதம் எழுதினர். அதில் அவர் கூறியது இது: "சென்ற சில வாரங்களில் ஓப்பீ கொஞ்சம் நிதானம் இழந்திருப்பதாகத் தோன்றுகிறது. தம்மையே சிக்கவைத்து விடுவார்களோ என்று அவர் அஞ்சுவதாகக் கேள்விப்படுகிறேன்... தாமே உளவு சொல்கிறவனுகத் திரும்பி விட்டால் தப்பித்துக்கொள்ளலாம் என்று அவர் எண்ணுவதாய்த் தோன்றுகிறது...

"ஓப்பீ உண்மையிலேயே நிதானம் இழந்துவிட்டால், அதனுல் பல சிக்கல்கள் நேரிடும்... அவர் உளறிவிட்டால், பெரிய அபாயந்தான். தம்மோடு நிற்காமல் இன்னும் பல பேரையும் சந்திக்கு இழுக்காமல் விட்டாரானுல் நல்லது.

"இந்தக் கடிதம் ஞாயிற்றுக் கிழமைக்குள் வந்து சேரவில்லையென்றால், அதைத் தந்திமூலம் எனக்குத் தெரிவி."

இதற்கு நான்கு நாளைக்கெல்லாம் ஓப்பன்ஹீமருக்கே காண்டன் ஒரு கடிதம் எழுதினர்: "உளவு சொல்கிறவனுக மாறி நீங்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது முட்டாள்தனம் என்றே சொல்லத் தோன்றுகிறது. அது உண்மை அல்ல என்று நம்புகிறேன். இந்த மனிதர்கள் உங்கள் பூர்வோத்தரத்தைக் கிளறத் தொடங்கினுல், இதுவரை அம்பலமானதெல்லாம் அற்ப சங்கதிகளாய்த் தோன்றிவிடும்."

சொல்லப் போனுல், ஓப்பன்ஹீமரின் ராஜாங்க விசுவாசத்தையோ, நாணயத்தையோ பொய் என்று காண்டன் கடிதம் நிரூபித்து விடவில்லை. ஆனுல், ஒன்று: ஒருவர்மீது கரி பூசுவது மெக்கார்த்தியின் ஏகபோக உரிமையல்ல; மகத்தான சர்வதேச சகோதரத்துவத்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி ஒருவர்மீது மற்றொரு பெரிய விஞ்ஞானியும் கரி பூச முடியும். இது மட்டும் நிரூபணமாகிவிட்டது.

ஹைட்ரஜன் குண்டு செய்வதா, வேண்டாமா என்ற போராட்டம்

வந்தபோதுதான் ஒப்பன்ஹீமருக்கு முதல் முதல் தோல்வி ஏற்பட்டது. கமிஷனுக்கு எழுதிய கடிதத்தில் அவரே சொல்கிறார்: “1949-இலையுதிர் காலத்தில் ஸோவியத் சர்க்காரின் அணு குண்டு ஒன்று வெடித்தது. அது வரைக்கும் ஹைட்ரஜன் குண்டு பற்றி அப்படி ஒன்றும் கடுமையான விவாதம் தோன்றவில்லை. 1949-இல் ஜெனரல் அட்வைஸரி கமிட்டியின் விசேஷக் கூட்டம் ஒன்றை அணுசக்தி கமிஷன் கூட்டியது. இரண்டு விஷயங்கள் பற்றி ஆலோசனை சொல்லும்படி எங்களைக் கேட்டது. ஒன்று: ஸோவியத் வெற்றியைப் பார்க்கும் போது, நம் திட்டம் போதுமானதா? இல்லையென்றால் என்ன மாறுதல் செய்வது? இரண்டு: இன்னும் அதிக சக்தியுடைய குண்டு ஒன்றை அதிசீக்கிரத்தில் தயாரிக்கக்கூடிய ஏதாவது முயற்சியை இனி நம் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாமா?

“இன்னும் அதிக சக்தியுடைய குண்டு தயாரிப்பதை ஒரே முகமாக ஆலோசனைக் கமிட்டி எதிர்த்தது. நமது அன்றைய நிலைமையில் தொழில் நுட்ப (டெக்னிக்கல்) சம்பந்தமான விஷயங்களையும் வேறு விஷயங்களையும் தீர ஆலோசித்துப் பார்த்தே நாங்கள் அப்படி ஒரேமுகமாக எதிர்த்தோம். அன்று அதிக சக்தியுள்ள குண்டுத் திட்டம் ஐக்கிய அமெரிக்காவுக்குப் பலம் கொடுப்பதற்குப் பதிலாகப் பலவீனமே கொடுக்கும் என்று நாங்கள் திடமாக நம்பினோம். ஹைட்ரஜன் குண்டு தயாரிக்கும் திட்டத்தில் வேலை செய்ய வேண்டாம் என்று நான் யாரையும் வற்புறுத்தவில்லை.”

ஒப்பன்ஹீமர் சொல்வது உண்மையா? அல்லது ஹைட்ரஜன் குண்டு செய்வதற்கு அவர் இடைஞ்சல் விளைவித்தார் என்று அவர்மீது வந்திருக்கும் குற்றச்சாட்டே உண்மையா? - இந்த விஷயத்தைத் தீர்மானிப்பதற்குப் போதிய தஸ்தாவேஜுகள் இல்லை. முந்திய ராணுவ ஸெக்ரடரி கார்டன் க்ரே என்பவருடைய தலைமையில் விசாரணைச் சபை ஒன்று அமைந்திருக்கிறது. ஒப்பன்ஹீமர் வழக்கை அது சென்ற வாரம் தொடங்கி விசாரித்து வருகிறது. ஹைட்ரஜன் குண்டு சம்பந்தமான குற்றச்சாட்டை அதன் முன்பு ஒப்பன்ஹீமர் சார்பில் பலமாய் மறுப்பார்கள். தர்மம், அரசியல், தொழில் நுட்பம் இந்த மூன்று ரீதியிலும் ஹைட்ரஜன் குண்டை எதிர்த்த கோஷ்டி ஒன்று உண்டு. அதற்குள்ளே மிகவும் பலம் வாய்ந்த மனிதர் ஒப்பன்ஹீமர். ‘யுத்தம் வந்தால் ருஷியாவைத் திருப்பி அடிப்பதற்கு அணுகுண்டே சிறந்த ஆயுதம். அதைத் தயார் செய்து வைத்துக்கொள்ளுவதே நம் விமானப் படையின் ராணுவ தந்திரமாயிருக்க வேண்டும்’ என்பது சிலர் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தை மிகவும் பலமாய் எதிர்ப்பவர் ஒப்பன்ஹீமர்.

ஆனால், இந்த அணுகுண்டு விமான ராணுவ தந்திரத்தையே அஸ்திவாரமாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்காவின் தற்காப்புக் கொள்கையை வகுத்து வெகு காலமாக அநுஷ்டித்து வருகிறார்கள். ஜனாதிபதி ஐஸன்ஹோவர், ராஜாங்க ஸெக்ரடரி டல்லஸ் இருவரும் இந்தக் கொள்கையை விளக்கி, இதையே அடிவலுவாகக்

கொண்டு சர்வதேச விவகாரங்களில் மிகவும் கண்டிப்பான முறையை அநுஷ்டிக்கிறார்கள்.

இந்தக் கொள்கையை ஒப்பன்ஹீமர் எதிர்ப்பதால், அவர் ராஜ்ய விசுவாசம் இல்லாதவர் என்று சொல்ல முடியாது. தார்மிக ரீதியாக யுத்தத்தில் பொறுப்புணர்ச்சி கொண்டிருப்பவர் அணு விஞ்ஞானிகள் மட்டும் அல்ல; அநேக ராணுவ தளபதிகளும், அரசாங்கத்தில் உயர் பதவிகள் வகித்திருக்கும் பல ஸிவில் அதிகாரிகளுங்கூடத்தான் இப்படி உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒப்பன்ஹீமரைப்போல் 'பாவம்' என்று யுத்தத்தை அவர்கள் கருதவில்லை. இதனால் அவர்களெல்லாம் ராஜ்ய விசுவாசத்தில் இவரை மிஞ்சியவராகிவிட மாட்டார்கள்; இவருக்குச் சளைத்தவரும் ஆகிவிட மாட்டார்கள்.

இந்த அபிப்பிராய வேற்றுமையே, இவருக்கும் மற்றவருக்கும் ஏற்பட்ட போராட்டத்துக்குக் காரணமாக இருக்கலாம். கடைசியில் இவர்மீது சந்தேகங் கொண்டு குற்றமும் சாட்டிவிட்டார்கள். முட்டாள்தனம், அதர்மம் இவை காரணமாக மனித சமுதாயத்துக்குத் துரோகம் இழைப்போரை வென்று தாமும் தம் சகாக்களும் உலகத்தையே மாற்றிவிடலாம் என்று 1945-இல் ஒப்பன்ஹீமர் திடமாக நம்பினார். ஆலமகார்டோ பாவத்திலிருந்து தம்மை ரட்சித்துக்கொள்ள அவர் விரும்பினார்.

பாவம் இழைத்துவிட்டோம் என்றெண்ணும் குற்றமுள்ள நெஞ்சிலிருந்து ஒரு செருக்குப் பிறப்பது மனிதர்களுக்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் அநுபவம். ஆனால், ஒப்பன்ஹீமரின் எதிர்ப்புக்கு ஆளான பல ஸிவில் அதிகாரிகளும் ராணுவ அதிகாரிகளும், 'இவருக்கு அகம்பாவம் வந்துவிட்டது. ஜன சமுதாயத்தைத் தாமே காக்கப் பிறந்திருப்பதாக எண்ணுகிறார்' என்றெல்லாம் நினைத்துவிட்டார்கள். இப்படி அவர்கள் நினைப்பது ஒருகால் தவறாயிருக்கக்கூடும். அப்படித் தவறில்லை என்றாலுங்கூட, ராஜ்ய விசுவாசமில்லாதவர் என்று இவரைக் குற்றம் சாட்டுவது பொருந்தாது. இப்போது இவர் இந்தச் சங்கடத்தில் எப்படியோ சிக்கியிருக்கிறார். சிக்கியது எப்படியானாலும் சரிதான்: கசப்பு மிகுந்துவிட்ட இந்தக் காலத்தின் கசப்பு மிகுந்த ஓர் உதாரணக் கதையாகவே ஜே. ராபர்ட் ஒப்பன்ஹீமரின் வாழ்க்கை வரலாறு விளங்குகிறது.

எங்கே எழுதுவது?

நம் கருத்தைக் கல்லில் பதித்தால், அழியும். பித்தளையில் பதித்தால், மங்கும். கோயில்களில் அமைத்தால், இடிந்து விழும். அமரத்துவம் வாய்ந்த மனித மனங்களிலே பதித்தால், உன்னதக் கொள்கைகளை அவற்றிலே இழைத்துவிட்டால், என்றென்றும் நித்தியமாய் அழியாதொளிரும்.

—டேனியேல் வெப்ஸ்டர்

உலகம் மாற வழி

எங்கள் வீட்டுக்கு இரு விருந்தாளிகள் வந்தார்கள்.

ஸ்ரீமான் தா

ஸ்ரீமான் இந்தா

ஸ்ரீமான் தா வந்தபோது வீடு இருந்த நிலை.

ஸ்ரீமான் இந்தா வந்த போது வீடு இருந்த நிலை.

இது தான் உலகம் →

ஒவ்வொரு வீட்டுக்கும் ஸ்ரீமான் தா வரும்போது உள்ள நிலை இது. ஸ்ரீமான் இந்தா வந்தால், உலகம் எப்படியிருக்கும் தெரியுமா? தலை கீழாய்த் திரும்பி விடும். எங்கே, திருப்பிப் பாருங்கள்!

'தி ஆஃப்ரிகன் ஈகிள்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர் நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

சீதா, திருநெல்வேலி:

கேள்வி: எனக்கு வயது இருபது. முதல்முதல் கர்ப்பமாயிருக்கிறேன். நான்கு மாதங்களாயின. நான் என்ன என்ன செய்து கொள்ள வேண்டும்? எப்படிச் செய்துகொண்டால், சுகப் பிரசவம் ஏற்படும்?

விடை: 'வயது இருபது; முதல் பிரசவம்' என்றால் சற்றுக் கஷ்டமாகத்தான் இருக்கும். சுகப் பிரசவமாயிருக்குமா, அல்லது சிக்கலான பிரசவமாயிருக்குமா என்று சொல்ல உங்கள் உடம்பை நன்றாகச் சோதனை செய்தாகவேண்டும். அடிக்கடி டாக்டரிடம் சென்று சோதனை செய்துகொள்ள வேண்டும். குழந்தையாக இருக்கும்போது கணைநோய், இளம்பிள்ளை வாதம், சில் நோய் ஒன்றும் ஏற்பட்டிராவிட்டால், பிரசவ வழிகள் ஆரோக்கியமாக இருக்கும் என்றும், இருதயம் திடமாயிருக்கும் என்றும் நம்பலாம்.

வளரும் குழந்தையும் நீங்களும் ஊட்டம் பெறப் பாலும், வைட்டமின் சத்துள்ள உணவும் சாப்பிட வேண்டும். எண்ணெய், நெய் வகைகளை முன் மாதங்களில் குறைத்துக்கொள்ள வேண்டும். பின் மாதங்களில் உப்பை ஆகாரத்திலிருந்து சற்றுக் குறைத்துக் கொள்ள வேண்டும். சிறு நீரையும் வாரத்துக்கு ஒரு தடவையாவது சோதனை செய்துகொள்ள வேண்டும். கடைசி மாதங்களில் அடிக்கடி டாக்டரைக் காணவேண்டும். குழந்தையின் தலை அளவும் தாயின் இடுப்பு அளவும் எளிதான பிரசவத்துக்குத் தக்கபடி இருக்கின்றனவா என்று டாக்டர் கவனிப்பார்.

'என்ன என்ன தயார் செய்து கொள்ள வேண்டும்?' என்று, பிரசவத்துக்கு உதவியாயிருக்கப் போகும் டாக்டரைக் கேட்டுக் கொள்வது நல்லது.

லல்லி, சென்னை:

கே. 1: என் குழந்தை பகலில் சில நாள் தூங்கவே மாட்டேன் என்கிறான். அவனுக்கு வயது மூன்றாகிவிட்டது. எவ்வளவு கட்டா



யப் படுத்தினாலும் தூங்குவதில்லை. என்ன செய்வது?

வி: குழந்தைகள் பதினான்கு மணி நேரமாவது தினந்தோறும் தூங்கவேண்டும். ஆனால் கட்டாயம் என்பது குழந்தைகளிடம் பலிக்கவே பலிக்காது. தாய்க்கும் பகலில் அமைதியும் ஓய்வும் வேண்டும். ஆகையால், குழந்தையை அருகில் வைத்துக்கொண்டு தானும் படுத்துக்கொண்டு தட்டிக் கொடுத்தால் குழந்தை விரைவில் தூங்கிவிடுவான். வீட்டில் அந்த வேளையில் சத்தத்தையும் சற்றுக் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படியும் தூங்கவில்லையென்றால் சிறிது நேரம் விளையாட விட்டுத் திரும்பவும் முயலலாம்.

எஸ். வெங்கடேசன், கரூர்:

கே.: தியேட்டரில் பால்கனியில் உட்கார்ந்து கொஞ்சம் கீழ் நோக்கிப் படம் பார்ப்பதனால் கண்ணுக்குக் கெடுதல் உண்டாகுமா? ஏறக்குறையத் தியேட்டரின் நடுவில் உட்கார்ந்து பார்ப்பது நல்லதல்லவா? ஸினிமாஸ்கோப், 3-டி முதலிய கனபரிமாணப் படங்கள் பொதுவாகக் கண்களுக்குத் தீமையைத்தானே உண்டாக்கும்?

வி: பார்ப்பது கண்ணுக்கு உள்ள ஆற்றல். அதற்குரிய அமைப்பு, கண்ணிலும் அதைச் சூழ்ந்த தசைகளிலும் உணர்ச்சி நரம்புகளிலும் இருக்கிறது. நுண்ணிய பொருள்களையும், தூரத்திலுள்ள பொருள்களையுங் கூடப் பார்க்கும் ஆற்றல் கண்ணுக்கு இருக்கிறது. சாதாரணமாகப் படங்களைப் பார்ப்பதால், ஒருவகைக் கேடும் விளையாது. அருகிலிருந்து பார்ப்பதைவிடத் தூரத்திலிருந்து பார்ப்பதுதான் நல்லது. நாம் பார்க்கும் பொருள்கள் அனைத்துமே கன பரிமாணமுடையவைதான். படங்களையும் இதுபோல் அமைக்கும்போது கண்ணுக்கு ஒன்றும் கஷ்டம் உண்டாகாது. ஆனால் சாதாரணப் படங்களையே பார்த்துப் பார்த்துப் பழகிய நாம் கனபரிமாணப் படங்களைப் பார்க்கும்போது, உள்ளத்தை அதற்குத் தக்கபடி திருத்திக்கொள்ள வேண்டி வரு



கிறது. கண்ணாடி இருப்பது தெரியாத குருவி, கண்ணாடியில் தோன்றும் குருவியைக் கண்டு மயங்குவது போல், நாம் இந்தக் கனபரிமாணப் படத்தை முதல் தடவை பார்க்கும்போது மயங்குகிறோம். பழக்கமாக வேண்டும்; அவ்வளவுதான்.

கே. 2: உள்ளங்கையில் தோல் உரிவது ஏன்?

வி: வேர்க்குரு உள்ளங்கையில் தோன்றினுல் தோல் உரியலாம்.

கே. 3: புடல், பூசனி, சுரைக் காய் இவை எந்த உணவுச் சத்தும் இல்லா தவை தானே?

வி: கேட்கிறவருடைய அபிப் பிராயம் தவறு. இவற்றில் வி-வைட்டமின் ஏராளமாக இருக் கிறது. அவசியமான சில உப்புக் களும் இருக்கின்றன. மலச் சிக்கலுக்கு நல்ல பரிகாரம் இவை.

எம். கே. ஸ்வாமி, தர்மபுரி:

கே. 1: சணல் சாக்குப் பை, சிமெண்ட் மூட்டை, மாவு மூட்டை இவைகளை வியாபாரம் செய்யும் நண்பர் ஒருவர் இருக் கிருர். அவைகளால் அவருக்குக் கெடுதல் ஏதாவது உண்டா?

வி: சணல் நார், சிமெண்ட், மாவு இவைகளின் தூசி சுவாச கோசங்களில் சென்றுகொண் டிருந்தால் சுவாச கோசங்கள் வலுக் குன்றிப் போகும். க்ஷய ரோகக் கிருமி, வேறு வகை நோய்க் கிருமிகள், பூஞ்சண வகைகள் ஆகியவை புகுந்துகொண்டு வளர்ந்து எளிதில் நோய்களைத் தோற்றுவிக்கக் கூடும்.

கே. 2: புகை பிடிப்பவர்களுக்கு அருகில் நாம் இருக்கும்போது வீசும் புகையால் நமக்குக் கெடுதல் உண்டா?

வி: தானே புகை பிடிப்பதை விட, குடிக்கும் பிறருக்கு அருகில் இருந்துகொண்டு புகையை நன்ருய் அநுபவிக்கலாம் என்பது சிலருடைய கருத்து. புகை பிடிப் பதே கெடுதல் விளைக்கும் என்று சொல்ல இயலாது. ஆனல் வெகு நாளாக அதிகமாய்ப் புகைபிடித்து

வருவதால் கேடுகள் நேரலாம். இருதயத்தைப் புகை கெடுத்துவிடு மென்பது சில வைத்தியர்களுடைய கருத்து. அது எப்படியானுலும் புகை பிடிப்பவர்களுடைய அருகில் இருப்பதால் நமக்குக் கேடொன் றும் விளையாது.

எஸ். பாபு, சென்னை:

கே: எனக்கு வயது 19 ஆகி றது. எடை 110 பவுண்டு. உயரம் 5 அடி 9 அங்குலம். நான் எவ் வளவு பவுண்டு இருந்தால் உத்த மம்? பருக்க வழி என்ன?

வி: குறிப்பிட்ட உயரத்துக்கும் வயதுக்கும் எடை போதுமானது. பருக்க வேண்டுமானுல் நன்ருய்ச் சாப்பிடவேண்டும்; வேலை செய் யாமல் சோம்பேறியாக நாற்காலி யில் சாய்ந்திருக்க வேண்டும். கவலை இருக்கவே கூடாது.

ஆர். நரஸிம்ஹன், சென்னை:

கே: வயது பதினைந்து. உயரம் 4 அடி. ஐம்பது பவுண்டு எடை. இயற்கையாக நான் உயர வழி என்ன?

வி: செயற்கை முறையில் மனி தர்களை உயரச் செய்வதற்கு வழி எதும் இருப்பதாக நான் அறி

யேன். இயற்கையாகவே உயரக் கூடிய ஆற்றல் இவர் குடும்பத்தில் எங்கேயாவது இருக்க வேண்டும்; அப்படியானால் இவரை உயரச் செய்யலாம். ஏராளமாய், ஒரு நாளைக்குச் சுமார் அரைப் படி வரைக்கும், தனிப் பால் குடிக்க வேண்டும். கனி வகைகளும் ஏராளமாய்த் தின்ன வேண்டும். இரண்டு மூன்று மாதங்களுக்குள் உயரமும் எடையும் அதிகமாகும். ஆனால் வயது பதினைந்துதானே? உயர்வதற்கு இன்னமும் காலம் இருக்கிறது.

சுப்பையா, திருச்சி:

கே: உண்ணும் உணவில் சிறு கல் இருந்தால் அது அடிவயிற்றின் ஏதோ ஒரு பாகத்தில் தங்குவதாக ஒரு நண்பர் கூறுகிறார். அது உண்மையா? அதற்கு வாழைத்தண்டுக் கறி பரிகாரம் ஆகுமா?

வி: உண்ணும் உணவில் கற்களைப்போல் ஜீரணமாகாத பருப்பு வகைகள், விதைகள் எல்லாம் மலத்தில் வருவதைப் பார்க்கிறோம். கற்கள்மட்டும் தனியாகத் தங்கிவிட ஒரு வகைக் காரணமுமில்லை. ஆனால் 'அப்பெண்டிசைட்டிஸ்' என்னும் ஒரு வகை நோய்க்குக் காரணம் என்ன என்றால், ஜீரணமாகாத விதைகள் 'அப்பெண்டிக்ஸ்' என்னும் குடல் பகுதியில் தங்கிவிடுவதே என்பது சிலருடைய அபிப்பிராயம். வாழைத் தண்டில் நூல் அதிகம். இது உணவில் இருக்கும் கற்களைச் சூழ்ந்துகொண்டு அவைகளை மலத்தோடு தள்ளிவிடலாம்; அதனால் இதை நல்லபரிகாரமென்று கருதுகிறார்கள்.

எஸ். கீதா, குன்னூர்.

இந்தப் பெண்மணி கேட்டிருக்கும் கேள்விகள் ஒரு வகை நோயைப் பற்றியவை. இந்த நோய்க்குக் காரணங்களையும் பரிகாரத்தையும் வைத்தியரை நேரில் கண்டு அறிந்து சிகிச்சை செய்து கொள்வதே நல்லது.

தமிழ்த் துடிப்பு

தம்பி—நான் ஏது செய்வேனடா!

தமிழைவிட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது.

தமிழனைவிட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு ஸம்மதமில்லை.

தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது.

தம்பி—உள்ளமே உலகம்!

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே!

நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ! பற! பற!
—மேலே, மேலே, மேலே!

—பாரதியார் (பரலி - சு. நெல்லையப்பருக்கு எழுதிய ஒரு கடிதத்தில்).

கரப்பான் பூச்சி

டி. வி. ரங்கசாமி

வீட்டுக்கு வீடு தோன்றும் இந்தப் பூச்சி, சகல தாவரங்களையும் ஊனையும் தின்று மனிதனுக்குப் பெருங்கேடு விளைக்கும் பிராணி என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்த இளம் கட்டுரையாளர் இதனிடம் அவ்வளவு பகைமை காட்டவில்லை.

கரப்பான் பூச்சியை நாம் எல்லாரும் சகஜமாகப் பார்த்திருக்கிறோம். இதைச் சில கிராமங்களில் 'லக்ஷ்மி வண்டு', 'தனவண்டு' என்று உயர்வுபடுத்திச் சொல்வதுண்டு.

இது கிணற்றுச் சுவர் ஓரங்களிலும், சுவர்களில் மாட்டியுள்ள படங்களின் பின்புறத்திலும், பழைய மரச் சாமான்களிலும் வசிக்கும். பார்வைக்குச் சிவப்பாக இருக்கும். சில கரப்பான்கள் செம்புக்கல் நிறத்திலும் இருக்கின்றன. வீட்டில் செம்புக்கல் நிறக் கரப்பான்களை காண்கிறோமே தவிர, தூய சிவப்பு நிறக் கரப்பான்களைக் காண்பதரிது.

கரப்பான் பூச்சி சுமார் இரண்டு அங்குல நீளம் இருக்கும். பக்கத்துக்கு மூன்று கால்கள் வீதம் இரண்டு பக்கங்களிலும் மொத்தம் ஆறு கால்கள் அதற்கு இருக்கின்றன. ஒவ்வொரு காலிலும் கூர் மிகுந்த சிறுசிறு முட்கள் போன்ற ரோமங்கள் இருக்கின்றன. முன்னங் கால்கள் நான்கையும்விட, பின்னங்கால்கள் இரண்டும் சற்று நீளமாக இருக்கின்றன. இதன் தலைமீது நீளமான இரண்டு மயிர்க் கொம்புகள் இருக்கின்றன. இவற்றின் நீளம் ஒரு கரப்பானின் உடல் நீளத்தைக் காட்டிலும் சிறிது அதிகமாகவே இருக்கும். இற்றைக் கரப்பானின் மீசை என்கிறார்கள். இவற்றின் உதவியால் கரப்பான் தன் வழியில் தடை எதுவும் இராதபடி பார்த்துக்கொள்கிறது. சுவர் மீதோ அல்லது கூரைகளின் மீதோ தலை கீழாகச் செல்லும் போது விழாமல் இருக்கக் கரப்பானின் ஒவ்வொரு கால் நுனியிலும் கொக்கிபோன்ற ஒரு முள் இருக்கிறது.

இதன் வாய் அருகே இரண்டு சிறிய உணர்ச்சி நரம்புக் குழாய்கள் இருக்கின்றன. இந்தக் குழாய்களின் மூலமாகக் கரப்பான் தனக்குத் தேவையான திரவ ஆகாரத்தை உறிஞ்சுகிறது. ஒரு கரப்பானைக் குப்புறத் திருப்பிப் போட்டு ஒரு பூதக் கண்ணாடியின் உதவியால் அதன் வயிற்றுப் பாகத்தை உற்று நோக்கினால், வளையங்கள் போன்ற அநேக வரிகள் தென்படும். கரப்பானின் கால் இணைப்புகள் பார்ப்பதற்கு மிக்க விகாரமாக இருக்கும்.

தண்ணீர் ஓரங்களில் படியும் பச்சைப் பாசி, அழுக்கு, அழுகின

காப்பிரைட்: சௌபாக்கியம் (தமிழ்: மார்ச் '54), சென்னை-8.

பதார்த்தங்களில் கசியும் திரவம் இவை போன்றவையே கரப்பானின் ஆகாரம். புளியங் கொட்டையின்மீது கரப்பானுக்கு மிகுந்த விருப்பம். இந்த விஷயத்தை நீங்கள் பரிசோதிக்க விரும்பினால், கரப்பான்கள் நிறைந்த இடத்தில் புளியங் கொட்டைகளைப் போட்டு வையுங்கள். ஒரு வாரம் கழித்துப் பார்த்தீர்களானால், அந்தப் புளியங் கொட்டைகளில் அநேகம் துவாரங்கள் இருக்கக் காண்பீர்கள். கொட்டையைத் துளைத்து, உள்ளிருக்கும் மாவுப் பதார்த்தத்தைக் கரப்பான் தின்றுவிடுவதே இதன் காரணம்.

இது எப்போதும் தன் கால்களையும், தலைமீதுள்ள மயிர்க் கொம்புகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளும். ஒரு கரப்பானைப் பிடித்து, சோதனைக் கண்ணடிப் பெட்டியில்போட்டு உற்றுப்பாருங்கள். கரப்பான் அடிக்கடி தன் தலைமீதுள்ள மயிர்க்கொம்புகளை மடக்கி, தன் வாயினுள் நுழைத்து, வாயிலிருந்து ஒரு திரவத்தை உண்டாக்கி, அதனால் தன் உடலைச் சுத்தப்படுத்திக் கொள்ளும்.

ஆண் கரப்பான் பார்வைக்குப் பெரியதாகவும், செம்பு நிறமாகவும் இருக்கும். பெண் கரப்பான் உருவத்தில் சிறியதாகவும், வால் பாகத்தில் கறுப்புப் புள்ளிகளோடும் இருக்கும். இது இடும் முட்டை ஒரு காராமணி அளவு இருக்கும். முட்டையின் நிறம் பழுப்பு. சூரிய வெப்பத்தால் முட்டை வெடித்துக் குஞ்சாக மாறுகிறது. குஞ்சுக் கரப்பான் பார்வைக்குத் தூய வெளுப்பு நிறமாக இருக்கும். அப்போது அதற்குத் தலைமீது மயிர்க்கொம்புகளோ, உடலில் இறக்கைகளோ முளைப்பதில்லை. நாளாக, நாளாக முதலில் தலைமீது மயிர்க் கொம்புகள் சற்று நீளமாக முளைக்கும். இறக்கை முளைப்பதற்குப் பதிலாக மெல்லிய தோல் போர்வை ஒன்று அதன் முதுகில் படர்கிறது. வளர்ச்சி அடைந்த கரப்பானுக்குப் பழுப்பு நிறமும், வலுவான சிறகும் வந்துவிடுகின்றன.

கரப்பானுக்குப் பறக்கும் சக்தி உண்டு. இரவில்தான் பறக்கும். சிறிது தூரம் பறந்ததும், பொத்தென்று கீழே விழுந்துவிடும்.

கரப்பான் பெரிய உருவத்திலும் இருக்கிறது. அதன் நீளம் 3 அங்குலம். அதைக் 'குறவக் கரப்பான்' என்கிறார்கள். அதன் கழுத்தருகே வெளுப்புப் புள்ளிகள் பல உண்டு. இன்னும் சில கரப்பான் பூச்சிகள் முழுக் கறுப்பாகவும் உடம்பிலே பல வெளுப்புப் புள்ளிகளோடும் இருக்கின்றன. அவைகளுக்கு இறக்கைகள் இல்லை.

கரப்பானுக்குத் தேள், பல்லி, காகம், எலி முதலிய பல விரோதிகள் உண்டு. விரோதிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளக் கரப்பான் பறந்து சென்றுவிடுகிறது. ஒரு சமயம் கரப்பானின் விரோதி இதன் அருகே நெருங்கிவிடும்போது இதனால் பறக்க முடியாமல் போனால், இது உடனே தன் பின்பக்கமிருந்து ஒருவித வாயுவை வெளிப்படுத்திவிட்டு ஓடிவிடும். அந்த வாயுவின் நாற்றத்தைத் தாளாமல், விரோதி அந்த இடத்திலேயே திகைத்து நின்றுவிடும். இந்த அதிசயமான தற்காப்பு வசதி, கரப்பானுக்கு இயற்கை அளித்த வரமாகும்.

ஏழு பிரபல கைதிகள்

★

பெர்லின் நகரச் சிறை ஒன்றில் நாஜி தலைவர்கள் ஏழு பேர் இன்று அடைபட்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் சமீப காலத்தில் வெளிவரப் போகிறார். அவரை வரவேற்க ஒரு பெரிய கோஷ்டியே தயாராகிக்கொண்டிருக்கிறது. அவர் வெளி வந்ததும் என்ன நடக்குமோ, தெரியவில்லை. இந்தக் கைதிகளைப்பற்றிய இந்த விவரத்துக்கு ஆதாரம் 'ஜான் அவ் லண்டனி'ல் கீத் பிரயாண்ட் எழுதியுள்ள ஒரு கட்டுரை.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்து ஒன்பது வருஷங்கள் ஆகின்றன. 1945-இறுதியில் நியூரம்பர்க்கில் நடந்த விசாரணையில் நாஜி தலைவர்கள் பலருக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தது. ஆனால் ஏழு பேர்மட்டும் சிறைத் தண்டனையோடு தப்பினார்கள். இவர்களில் ஹெஸ், ஃபங்க், ரீடர் இந்த மூன்று பேருக்கும் ஆயுள் தண்டனையும், ஸ்பீர், வான் ஷிராக் என்ற இரண்டு பேருக்கும் 20 வருஷச் சிறைவாசமும், வான் நியூரத் என்பவருக்கு 15 வருஷச் சிறைவாசமும், டோனிட்ஸ் என்பவருக்கு 10 வருஷச் சிறைவாசமும் கிடைத்தன.

சமீபத்தில் ஜாக் ஃபிஷ்மான் என்பவர் இவர்களைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன், பிரான்ஸ் இந்த நாலு வல்லரசுகளும் சேர்ந்து இவர்களைப் பெர்லினில் உள்ள ஸ்பாண்டவ் என்ற இடத்தில் ஒரு கோட்டைக்குள் வைத்துக் காத்து வருகின்றன; இவர்களைப்பற்றி ஒரு தகவலும் வெளியிடக் கூடாது என்று மிகக் கண்டிப்பாக இருந்துவருகின்றன. ஆகவே, இவர்களுடைய மனைவிமார், உறவினர் இவர்களுக்காக வாதாடிய வக்கீல்கள், நண்பர்கள் இப்படிப் பல பேரிடமிருந்து விசாரித்து அறிந்துகொண்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டது இந்தப் புத்தகம். இதோடு, "இந்த ஏழு பேரும் எழுதிய நானூற்றுக்கு மேற்பட்ட (இதுவரை வெளியிடாத) கடிதங்களிலிருந்து பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். ஆனால் முக்கால்வாசித் தகவல் ஸ்பாண்டாவுக்குள்ளிருந்தே கிடைத்தது. அதெப்படி என்று கேட்டால், அதுதான் ரகசியம்" என்று ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தமாதிரி புத்தகத்தில் ஒவ்வொரு தகவலையும் நடந்தது நடந்தபடியே எடுத்துச் சொல்வதென்பது சாத்தியமில்லை. ஆகவே, அங்கங்கே பல இடங்களில் விஷயம் திருப்திகரமாக அமையவில்லை.

இருந்தாலும் சிறையில் வாழ்பவர்களின் மனோபாவம் எப்படியிருக்கும் என்பதைப்பற்றிய ரசமான தகவல்களை இதில் காணலாம்.

இந்த ஏழு பேரும் ஸ்பாண்டாவுக்கு வந்ததும், 'இனிமேல் உங்கள் நம்பரைச் சொல்லித்தான் கூப்பிடுவோம்' என்று சிறை அதிகாரிகள் தெரிவித்துவிட்டார்கள். அப்படியே இவர்கள் உடுத்தும் ஆடையில் இவர்களுடைய எண்களைக் குறித்துவிட்டார்கள். ஆனால் தாம் ஹிட்லருக்கு அடுத்த படியாகப் பதவி வகித்தவர் என்ற காரணத்தால் ஹெஸ் தாம் 'ஏழாம் நம்ப'ராக இருக்க முடியாது என்று ரகளை பண்ண ஆரம்பித்துவிட்டார். ஒவ்வொருவருடைய நம்பரையும் அவர்கள் முதுகுப்பக்கமும் நிஜாரின் இரண்டு கால்களிலும் வெள்ளை நிறத்தில், கண்ணைக் கூசும்படி தீட்டியிருந்தார்கள்.

கைதிகள், தலைமை வார்டரைத் தவிர மற்றக் காவலாளிகளிடமோ ஒருவரோடு ஒருவரோ விசேஷ அநுமதி இன்றிப் பேசக்கூடாது என்பது சிறையின் கண்டிப்பான விதி. இதுதான் இந்த ஏழு பேருக்கும் வேம்பாக இருந்தது. ஆனால் 1948 டிசம்பர் 1-ஆம் தேதி முதல் இந்த உத்தரவை ரத்து செய்துவிட்டார்கள். வேலை செய்யும் நேரத்தில் கைதிகள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளலாம் என்று அநுமதித்தார்கள், சிறை அதிகாரிகள்.

தோட்டத்தில் இந்த ஏழு பேரும் அன்றாடம் வேலையும் உடற்பயிற்சியும் செய்யும்போது சுற்றிலும் கண்காணிப்புப் பலமாக இருக்கும். மதில் சுவர்களில் உள்ள 'டவர்'களில் 'மெஷின் கன்'கள் தயாராக இருக்கும்.

இருபத்து நாலு மணி நேரமும் விடாமல் கடுமையாகப் பாராக் கொடுத்து வருகிறார்கள். இரவு முழுவதும் கதவிடுக்கில் ஒரு துளையின் வழியாக உள்ளே விளக்கு வெளிச்சம் வீசிக்கொண்டே இருக்கவேண்டும் என்பது சிறை விதி. இதை ஓர் எழுத்து விடாமல் அப்படியே கடைப்பிடிப்பவர்கள் ருஷியக் காவலாளிகள்தான்.

ஜெர்மன் பாங்கியின் தலைவராக இருந்தவர் ஃபங்க். அவர் நோஞ்சல் ஆசாமி. இரவில் 15 நிமிஷத்துக்கு ஒரு முறை இப்படி அவர் மேல் வெளிச்சம் வீசும்போது அவருக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வரும். கதவில் ஓங்கிக் குத்துவார். ருஷியக் காவலாளியைக் கண்டபடி திட்டுவார்.

இப்போது இவர்கள் ஏழு பேரும் பக்தி சிரத்தையோடு இருப்பதாகத்தான் சொல்லிக் கொள்கிறார்கள். பாக், பீதோவன் முதலிய ஐரோப்பிய சாகித்திய கர்த்தர்களின் பாடல்களைச் சிறையிலுள்ள பழைய பிரார்த்தனைக் கூடத்து ஹார்மோனியத்தில் அவ்வப்போது வாசிக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் பெண்கள், உணவு இந்த மாதிரி விஷயங்களைப்பற்றியும் பேசி மகிழ்ந்துதான் வருகிறார்கள்.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது ஹிட்லரின் தூதராகப் பிரிட்டனுடன் ராஜி பேச வந்தவர் ஹெஸ். ஆயுள் தண்டனை கிடைத்தும் இன்னும் ஏதோ தாம் பிரமாதமாக உலகில் சாதித்துவிட முடியும் என்ற ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது அவருக்கு. இந்த ஏழு பேருக்குள்ளும் அவர்தான் மிகவும் தொல்லை கொடுத்து வருபவர். எல்லாரும் தம்மைக்

கவனிக்க வேண்டும் என்றே இப்படியெல்லாம் செய்கிறார். சிறையிலுள்ள குறிப்புப் புத்தகத்தில் பார்த்தால் அவருக்கு எவ்வளவு தடவை சிறை விதிகளை மீறியதற்காகத் தண்டனை கிடைத்திருக்கிறது என்று தெரியும். ஹிட்லர் இளைஞர் கூட்டத்தின் 'தலைவராக இருந்தவர் பால்டுர் வான் ஷிராக். ஹெஸ்ஸுக்கும் ஷிராக்குக்கும் ஒரு நாள் கை கால் கழுவிக் கொள்ளும் இடத்தில் சச்சரவு மூண்டுவிட்டது. விஷயம் வேறொன்றுமில்லை. "இன்ன இடத்தில் நான்தான் கழுவுவது வழக்கம். நீ அங்கே போகக் கூடாது" என்றாராம் ஹெஸ்.

"எல்லாம், மொத்தத்தில் கழுவுகிற இடந்தானே? இதில் எங்கே கழுவினால் என்ன வந்தது?" என்றார் வான் ஷிராக். "இங்கே நான்தான் கழுவுவது வழக்கம். ஹிட்லருக்கு அடுத்தபடி நான்தான் முக்கியமான ஆள். ஆகையால் சிறையில்கூட எனக்குத்தான் எதையும் உபயோகிக்க முதல் உரிமை உண்டு. என் இஷ்டப்படிதான் எல்லாம் நடக்தாக வேண்டும்" என்று கத்தினார் ஹெஸ்.

அவர் தம்முடைய மனைவியையோ மகனையோ சிறைக்குள் வந்து பார்க்க அநுமதிப்பதே இல்லை. "'அப்பா கைதியாக இருப்பதைப் பார்த்துவிட்டால் பையனுக்கு எப்படி இருக்கும்?' என்றுதான் அவர் இப்படி ஒரேயடியாக எங்களை வர விடாமல் தடுத்துவிட்டார். இருந்தாலும் அதற்குக் காரணம் என்னவோ இதுதான்: நான் வந்தால் அழுது தொலைக்கப் போகிறேனே; அப்புறம் மனவுறுதி யெல்லாம் தளர்ந்துவிடுமோ என்று அவருக்குத் திகில்" என்கிறாள் மனைவி.

வான் நியூரத், ஹிட்லரின் ஆட்சியில் வெளி நாட்டு மந்திரியாகவும் லண்டனிலும் ரோம் நகரிலும் ஜெர்மன் தூதராகவும் இருந்தவர். இவருக்கு 80 வயது ஆகிறது. மட்டுமரியாதை தெரிந்த மனுஷர். இவர் எதைப்பற்றியும் குறை கூறுவதே அபூர்வம். கிடைத்த தண்டனையை அநுபவித்துத்தானே ஆகவேண்டும் என்று அமைதியாகவே இருந்து வருகிறார். அதனால் மற்றக் கைதிகளும் காவலாளிகளும் இவரிடம் மிகவும் மரியாதையோடு நடந்து கொள்கிறார்கள். இவருக்கு ஒரே ஒரு குறைதான்: "இரவில் எங்கள் அறைக்குள் ஒரு மங்கலான விளக்குப் போட்டு வையுங்களேன். அடிக்கடி இந்த 'ஃப்ளாஷ் லைட்' வெளிச்சம் வீசினால் ரொம்ப சிரமமாயிருக்கிறதே" என்று ஒரு சமயம் அவர் சிறை அதிகாரிகளிடம் சொன்னாராம்.

அவர் உடல்நிலை வர வரச் சீர் கேட்டுக் கவலைக்கு இடமாகி வருகிறது. தோட்டத்தில் அவரைக் கவனிக்க எப்போதும் ஒரு நர்ஸ் தயாராக இருக்கிறாள். அவருக்கு மார்பில் வலி ஏற்படுவதற்குமுன் ஏதோ அழுத்தமாக இருப்பதுபோல் இருக்கும். அப்போது அவர் எந்த இடத்தில் வேண்டுமானாலும் உட்கார்ந்து கொள்ளலாம், படுக்கலாம் என்று அநுமதித்திருக்கிறார்கள்.

எல்லாரையும்விட இவர்களுள் ஒருவர்தான் மிகவும் அபாயகரமான ஆசாமி. அவர்தான் அட்மிரல் டோனிட்ஸ்.

பிரிட்டிஷ்காரர்களை உள்ளூற வெறுப்பவர்; தம் நாடு தோல்வி

அடைந்ததாக அவர் ஒப்புக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார். இதனால் அவரிடத்தில் சில ஜெர்மானியருக்கு அபார பக்தி. 'டோனிட்ஸ் ப்ரிகேட்' என்று ஒரு ஸ்தாபனம் நிறுவியிருக்கிறார்கள். இதில் டோனிட்ஸின் கீழ் உத்தியோகம் பார்த்த யு-படகுத் தலைவர்கள் சுமார் 36 பேர் இருக்கிறார்கள். 'ஈவிரக்கம் இல்லாமல் கொல்லுங்கள்' என்று அப்போது டோனிட்ஸ் இவர்களுக்கு உபதேசித்து வந்தார். இவர்கள் அவருக்காக ஒரு நிதி சேர்த்து வருகிறார்கள். விரைவில் அவரது தண்டனைக் காலம் முடிந்து விடுதலை ஆவார். உடனே அவரைத் தங்கள் தலைவராகவும் தங்களைக் காக்க வந்த தெய்வமாகவும் கொண்டாடக் கூடத் தயாராக இருக்கிறார்கள் இவர்கள். மூன்றும் உலக யுத்தம் மூண்டால் அவர் ஜெர்மனியின் தலைவராக இருந்து யுத்தத்தை நடத்தக்கூடிய ஆசாமிதான்! நல்ல உயரம்; ஒல்லியாக இருப்பார். உதடு மெல்லிதாக இருக்கும். ஹிட்லர் தற்கொலை செய்துகொள்வதற்குமுன் டோனிட்ஸைத்தான் ஜெர்மன் குடியரசின் தலைவராகவும் ஜெர்மன் படைகளுக்கெல்லாமே சேனாதிபதியாகவும் நியமித்ததாகச் சொல்கிறார்கள்.

நியூரம்பர்க்கில் அவருக்குத் தண்டனை அளிக்கும்போது, "திட்டமிட்டு மூர்த்தன்னியமாக யுத்தம் செய்து, ஸப்மரீன்களைக் கொண்டு, ஓயாமல் நடு நிலைமை நாட்டைச் சேர்ந்த சாதாரண வியாபாரக் கப்பல்களைக்கூட மூழ்க அடிக்க உத்தரவிட்டவர் இவர்" என்று தீர்ப்பில் குறித்திருக்கிறார்கள்.

ஹாம்பர்க், கீயெல், டஸ்ஸல்டார்ஃப், மூனிக், மேற்குப் பெர்லின் இங்கெல்லாம் அவரைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொள்கிறார்கள். "நம் 'சிங்கம்' எப்போது விடுதலையாகி நமக்கு வழி காட்டும்?" என்றுதான் அசல் நாஜிகள் பலர் ஆவலாகக் காத்திருக்கிறார்கள். 1955 மே மாதமோ ஆகஸ்டு செப்டம்பரிலோ அல்லது 1956 அக்டோபரிலோ தண்டனைக் காலம் முடிந்து அவர் விடுதலை ஆனதும் நேராக மேற்கு ஜெர்மனிக்கு ஏரோப்ளேனில் பறந்து போவதாகத் தீர்மானித்திருக்கிறார். அன்று ஏதாவது விசேஷம் நடக்கத்தான் நடக்கும்.

எது அதிக கடினம்?

பயன் உள்ள புதிய கருத்து ஒன்றை ஜனங்கள் ஏற்கும்படி செய்வது மிகவும் கடினம். அதையும்விடக் கடினமான காரியம் வேறு ஒன்றே ஒன்று உண்டு. அது பயனற்ற பழைய கருத்து ஒன்றை அவர்கள் கைவிடும்படி செய்வதுதான்.

—எர்னஸ்ட் போரெக்

மலிவான சரக்கு

மலிவான ஒரே ஒரு 'சரக்கு' அரசியல் வாதிதான்.

—'ஜப்பான் டைஜெஸ்ட்'

பாம்பும் பாட்டும்

★

காது மிகவும் கூர்மையாக இருந்தால், 'பாம்புச் செவி' என்று சொல்வது நம் வழக்கம். 'பாம்பு செவிடு' என்பது மேல்நாட்டு மரபு. இந்த மேல்நாட்டு மரபையே விஞ்ஞானிகள் இது வரைக்கும் நம்பி வந்தார்கள். இப்போது ஒருவர் வேறு வித முடிவுக்கு வந்திருக்கிறார். இந்த விஷயத்தை 'தி ந்யூ யார்க் டைம்ஸ்' என்ற பிரபல தினசரியில் ராபர்ட் கே. ப்ளம்பு என்பவர் எழுதியிருக்கிறார்.

கார்ட்டூன் சித்திரகாரர்கள், பாம்பாட்டி மகுடியை வைத்துக்கொண்டு ஊதுவது போலவும், அவனுக்கு எதிரே ஒரு பயங்கரமான பாம்பு அப்படியும் இப்படியும் அசைந்து ஆடுவது போலவும் எழுதி வருவதை அடிக்கடி காணலாம்.

பிராணி நூல் அறிஞர்கள் சிலர், "அப்படி ஒன்றும் பிரமாதமான சங்கீத ஞானம் பாம்புக்கு இருப்பதாகச் சொல்ல முடியாது" என்கிறார்கள். இன்னும் சிலர், "பாம்புக்குக் காதே கேட்காதே. அப்படி இருக்கும்போது பாட்டுப் பாடி அதை வசப்படுத்துவதென்பதெல்லாம் நடக்காத காரியம்" என்கிறார்கள்.

'பாம்பைப் பாட்டினால் வசப்படுத்த முடியும்; சங்கீதத்தைக் கூர்ந்து கேட்கும் சக்தி அதற்கு உண்டு' என்ற கருத்துக்கு ஆதாரமாகச் சமீபத்தில் அமெரிக்க வைத்திய சங்கப் பத்திரிகையில் சில தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. டாக்டர் டேவிட் ஐ. மாக்ட் என்பவர் பால்டிமோரில் உள்ள மவுண்ட் ஸினுய் ஆஸ்பத்திரியில் இது சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறார். நாகப்பாம்பின் விஷம் ரத்தக் கோளாறு முதலிய நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.

டாக்டர் மாக்ட் இந்தத் துறையில்தான் முக்கியமாகக் கவனம் செலுத்தி வருகிறார்.

“இப்படி ஆராயும்போது இந்தியாவில் பல இந்து வைத்தியர்களோடு பழகினேன். அவர்கள் நன்ருகப் படித்தவர்கள்; அவர்கள், ‘சில ஸ்தாயிகளில் பாடும்போதும், நாகசுரம், மகுடி, புல்லாங்குழல் இவைகளை வாசிக்கும்போதும் நாகப்பாம்புகள் ஆடுவது சகஜந்தான்; சில ராகங்களைக் கேட்கும்போது மிக அதிக உணர்ச்சியோடு ஆட ஆரம்பிக்கும்’ என்ருர்கள். குழந்தைகள் இருட்டில் பாடினல், எங்கே அதைக் கேட்டுப் பாம்பு வந்துவிடுமோ என்று அஞ்சிப் பெரியவர்கள், ‘கூடாது’ என்று அவர்களைத் தடுப்பது கிராமங்களில் வழக்கம்.

“ஷேக்ஸ்பியர் இந்த விஷயத்தில் பழைய தவருன கருத்தே கொண்டிருக்கிருர். அவர் ‘ஆரும் ஹென்ரி’ என்ற நாடகத்தில், ‘நீயார், பாம்பு போல் செவிடாக இருக்கிருயே’ என்று ஓரிடத்தில் எழுதியிருக்கிருர். ஆனல் பைபிளில் வரும் ஒரு பாடலிலிருந்து, பாம்புக்கு ஓசையைக் கேட்கும் சக்தி உண்டு என்று தெரிகிறது:

“ ‘நல்ல பாம்பின் விஷம்போல் இருக்கிறது அவர்கள் கக்கும் விஷம். நன்ருகப் பாடாத பாம்பாட்டியின் இசையைக் காது கொடுத்துக் கேட்காத அந்தப் பாம்பைப் போலவே அவர்களும், காதிருந்தும் காதற்றவராக இருக்கிருர்கள்.’

“ஆகவே, பாம்பாட்டி ஆடி அசைவதைக் கண்டுதான் பாம்பும் அப்படி ஆடுகிறது என்று பிராணிநூல் அறிஞர் சொல்வது சரியல்ல. ஓசையைக் கேட்டுத்தான் அது உணர்ச்சி வசப்படுகிறது” என்கிருர் டாக்டர் மாக்ட்.

இனிமேல் பாட புஸ்தகங்களையும் அவைகளிலுள்ள பழைய தவருன கொள்கைகளைத் திருத்தி வெளியிட வேண்டியதுதான் என்று வைத்திய சங்கத்தார் சொல்லுகிருர்கள்.

பின்னேக்கிய பிரயாணம்

கொஞ்ச நாளைக்கு முன் பெங்களூரிலிருந்து மைசூருக்குப் போய்க்கொண்டிருந்தது ஒரு ரெயில் வண்டி. சில காரியேஜுகளில் 30 பிரயாணிகள் இரவு நேரத்தில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். பொழுது விடிந்ததும் விழித்துப் பார்த்தால், தங்கள் காரியேஜுகள் வெகு வேகமாக எஞ்சின் எதுவும் இல்லாமலே பின்னேக்கி ஓடிக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். பெங்களூருக்கு எட்டு மைல் தூரத்தில் உள்ள கெங்கேரி ஸ்டேஷனை இப்படி அவர்கள் கடந்து கொண் டிருந்தார்கள். சில பிரயாணிகள் பயந்துபோய் அங்கேயே குதித்துவிட்டார்கள். நல்ல வேளையாக யாருக்கும் காயமில்லை. இன்னும் 3-மைல் தூரம் பின்புறமே ஓடிய பிறகுதான் காரியேஜுகள் நின்றன. அங்கே ரெயில்பாதை மேட்டிலிருந்து பள்ளத்துக்குச் சரிவாக அமைந்திருப்பது தான் இதற்குக் காரணம். —‘ஸென்ட்ரல் ரெயில்வே மகஸின்’

சீன ஜாலம்

★

பழகு என்றலே சிலர் பரிகசிக்கிறர்கள். அது எவ்வளவு அறிவீனம் என்பதை விளக்கும் இந்தச் சம்பவம் அமெரிக்க அறிஞரான ட்ரேக் என்பவர் எழுதியது.

கோகுயீ சென் ஒரு சீன வாலிபர். மகா புத்திசாலி. அமெரிக்காவில் 5 ஆண்டுகள் வைத்தியப் படிப்புப் படித்துத் தேறி 1923-இல் சீனவுக்குத் திரும்பினர். தம் நாட்டு மக்கள் வைத்தியத் துறையில் எவ்வளவு பின் தங்கியிருக்கிருர்கள் என்று அவருக்கு அப்போதுதான் நன்ருகத் தெரிந்தது. இன்னும் பழைய பச்சிலேகளேயும் பூச்சிகளேயும் வைத்துக்கொண்டே நோய் நொடிகளுக்குச் சிகிச்சை செய்து விடுகிருர்கள் என்பதைச் சென் மறந்தே போய்விட்டார்.

சென்னின் மாமா மருந்துக் கடை வியாபாரி; அவரே இந்த மாதிரி கண்டதையெல்லாம் விற்று வருகிருரே என்று சென்னுக்கு எரிச்சல். இந்த வியாபாரமோ வெற்றிகரமாக நடந்து வந்தது. மாமாவின் கடையில் இருந்த மூலிகைகளுக்கும் உலர்த்தி வைத்த பூச்சிகளுக்கும் கணக்கு வழக்கேயில்லே! எந்த நோய்க்கும் அங்கே மாமா உடனே மருந்து கொடுத்து விடுவார்.

மாமாவிடம் எரிச்சலாக இருந்தாலும் டாக்டர் சென் அதை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டுதான் இருந்தார். ஆனல் தாமும் தம் மேலதிகாரியான அமெரிக்க டாக்டர் ஷ்மிட் என்பவரும் பீகிங் யூனியன் மெடிகல் காலேஜில் புதிய மருந்துகளே உபயோகித்துச் சிகிச்சை செய்து வரும்போது, இந்தக் கிழவர் வெகு சமீபத்தில், இந்த மாதிரி மந்திரம் மாயமெல்லாம் பண்ணுவதுதான் சகிக்கவில்லே.

ஒரு நாள் மாமா இரண்டு சருகுகளேக் கொண்டு வந்து சென்னிடம் கொடுத்து, "இதன் பெயர் மா ஹுவாங். உன் வெள்ளேக்கார வைத்தியர்களிடம் இருப்பதை விடப் பேஷான சரக்கு" என்ருர்.

சென் முகத்தைச் சிணுங்கிக் கொண்டு, "ஏதோ திரேதா யுகத்துச் சரக்குப் போல் இருக்கிறது!" என்ருர்.

"அப்படி ஒரேயடியாக மட்டந் தட்டிப் பேசிவிடாதே, அப்பா! இதைக் கொஞ்சம் உபயோகித்துத்தான் பாரேன்; செத்தவன்கூடப் பிழைத்தெழுந்து மூச்சுவிட ஆரம்பித்து விடுவான்!"

"மாமா, உங்களே மட்டந்தட்டவில்லே. உங்களிடம் மரியாதை, அன்பு எல்லாம் இருந்தாலும் இந்த மாதிரி மந்திரம் மாயங்களில் எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லே."

மாமாவுக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. அவர், "அப்படியானால் உன் வெள்ளைக்கார வைத்தியர்கள், எல்லாம் தெரிந்த மேதாவிகள் என்று உனக்கு எண்ணமோ? இந்தா, ஒரு தரம் இதை உபயோகித்துப் பார்! உனக்குத் தெரியாத ஒன்றை மட்டம் என்று எண்ணிவிடாதே!" என்றார்.

சென் அந்தச் சருகை டாக்டர் ஷ்மிட்டிடம் காட்டினார். அவர் அதை எங்கோ ஒரு மூலை அறையில் போட்டு மூடிவிட்டார்; சென் அப்புறம் அதைப்பற்றியே மறந்து விடுவார் என்று ஷ்மிட் எண்ணித்தான் அப்படிச் செய்தார். சென்னும் மறந்துதான் போய்விட்டார். ஆனால் நாலைந்து வாரங் கழித்து அவரும் ஷ்மிட்டும் வைத்திய மாணவர்களுக்கு ஒரு பரிசோதனை நடத்திக் காட்டிக்கொண் டிருந்தார்கள்: அப்போது ஒரு நாய்க்கு மயக்கமருந்து கொடுத்திருந்தார்கள். என்ன காரணத்தாலோ திடீரென்று அது மிகவும் மெதுவாக மூச்சு விட ஆரம்பித்தது; மெல்ல மெல்ல அதுவும் நின்று விடும்போல் ஆகிவிட்டது. உடனே உணர்ச்சி ஊட்டும் மருந்துகளை அதன் உடலில் 'இஞ்செக்ட்' செய்தார்கள். அப்படியும் அதன் நாடி பலவீனமாகி வந்தது.

"இனிமேல் ஒன்றும் நடக்காது போல் இருக்கிறது" என்று சொல்லிவிட்டார் ஷ்மிட்.

"அப்படித்தான் எனக்கும் படுகிறது. இருந்தாலும் என் மாமா கொடுத்த மருந்தை உபயோகித்துத்தான் பார்க்கலாமே! அதைப் பரீட்சிக்க இதுதான் ஏற்ற சமயம்" என்றார் சென்.

இப்படிச் சொல்லிவிட்டு, சென் உடனே அந்த இலையை எடுத்து வந்து நீரில் கரைத்து, செத்துக்கொண்டிருக்கும் அந்த நாயின் உடலில் அதை 'இஞ்செக்ட்' செய்தார். நாய் சரியாக மூச்சுவிடத் தொடங்கியது.

சென்னும் டாக்டர் ஷ்மிட்டும் கண்கொட்டாமல் இந்த அதிசயத்தைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். முதலில் தங்கள் கண்ணையே கூட அவர்களால் நம்ப முடியவில்லை. பிறகு பல மாதம் இப்படிப் பரிசோதித்துப் பார்த்தார்கள். சீனர்கள் வெகு காலமாக உபயோகித்து வரும் இந்த இலை உண்மையிலேயே ஆஸ்த்மா, குறைந்த ரத்த அழுத்தம், அதிர்ச்சி, ரத்தப் போக்கு இப்படிப் பல நோய்களுக்குக் கை கண்ட மருந்து என்று தெரிந்துகொண்டார்கள். இதுதான் எஃபிட்ரின் என்ற பெயரில் உலகம் முழுவதும் இப்போது பிரசித்தி பெற்று விளங்குகிறது.

கண்டிப்பு

வாத்தியார்: பையா, நீயா இந்த வகுப்புக்கு வாத்தியார்?

பையன்: இல்லை, ஸார்.

வாத்தியார்: பின்னே ஏன் இப்படி வீணே சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறாய்?

ஹரிஜனங்கள் ஒரு நாள் பெருமாளைத் தொழ அனுமதி தந்தார் ஸ்ரீ ராமாநுஜர். அந்தத் திருநாள் இது.

வைர முடி சேவை

பு. தி. கிருஷ்ணையங்கார்

சென்ற மார்ச் 15 - இல் மேலக்கோட்டையில் வைர முடி விழா நடந்தது. இந்த ஸ்தலத்தின் புகழ் இந்தியாவில் எல்லாப் பாகத்திலும் பரவியிருக்கிறது. இந்த வைபவத்தைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்து கூடுகிறார்கள்.

இந்த க்ஷேத்திரத்தைப்பற்றிய புராணக் கதை ஒன்று இருக்கிறது. பாண்டவபுரம் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பதினெட்டு மைல் தூரத்தில் வடக்கில் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது. சமுத்திர மட்டத்துக்கு 3,600 அடி உயரம் உள்ள மலையும் காடுமான பிரதேசத்தில் (மூலவர்) நாராயண மூர்த்தி அமர்ந்திருக்கிறார். இவர் சுயம்புவாய் அநாதி காலந்தொட்டு இங்கே பூஜிக்கப் பெற்று வருவதாகப் புராணம் சொல்லுகிறது. பிரம்மா முதலிய தேவர்கள் இந்த மூர்த்தியைப் பூஜித்தார்களாம். ஆனால் காலக்கிரமத்தில் இந்த மூர்த்தியைப் புற்று மூடிவிட்டது. ஸ்ரீ ராமாநுஜாசாரியர் பால் அபிஷேகம் செய்து புற்றைக் கரைத்து ஜீர்ணோத்தாரணம் செய்த பின் இங்கே ஜன நடமாட்டம் அதிகமாயிற்று. பக்தர்கள் பிரத்தியட்சமாக ஸ்ரீமந் நாராயணனைத் தரிசித்தது போல் மகிழ்ந்தார்கள். ஜன சந்தடியற்ற அடர்ந்த காட்டுப் பிரதேசம் அழிந்தது; நகரம் அமைந்தது.

பிற்காலத்தில் டில்லியில் முஸல்மான்களின் படையெடுப்புக்குப் பயந்து, சிலர் செல்வராய மூர்த்தி என்னும் விக்கிரகத்தைச் சாமர்த்தியமாக இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். வரும்பொழுது இந்த மூர்த்திக்குப் பந்தோபஸ்தாக வழி முழுதும் தங்க இடங் கொடுத்தவர்கள் ஹரிஜனங்கள். அவர்களுடைய பக்தியைப் புகழ்ந்து வருஷத்தில் மூன்று நாட்கள் அவர்களுக்குத் தரிசனம் செய்விக்கும் ஏற்பாடாயிற்று. இது இன்றைக்கும் நடைபெற்று வருகிறது. 'அங்க மணி' என்னும் திருவிழா ஒன்று நடக்கிறது. அன்று ஹரிஜனங்கள் ஸ்வாமியைச் சூழ்ந்து ஊரின் முக்கியமான தெருக்களில் தடையின்றி, உயர் வகுப்பினருடன் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு கலந்துகொள்வார்கள். இந்த நிகழ்ச்சி இந்தியாவிலேயே மைசூரைச் சார்ந்த மேலக்கோட்டையில் மட்டுமே நடைபெறுகிறது. இது நமக்குப் பெருமை தருவதுடன் ஆசாரியருடைய தாராள மனப்போக்கையும் காட்டுகிறது.

உற்சவ விக்கிரகத்தைப்பற்றிப் புராணத்தில் ஒரு செய்தியைக்

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்), பங்களூர்.

காணலாம். இந்த விக்கிரகமும் மிகப் பழமையானதே. சூரிய வமிசத்தில் வந்த ரகு குலத்தார் தம் குல தேவதையாக வைத்து அர்ச்சித்து வந்த விக்கிரகமே இப்பொழுது வைர முடி தரித்துப் பெரும் போக்கில் உற்சவம் ஏற்கும் செல்வராயர். ஸ்ரீ ராமனுடைய மகன் குசனுக்குக் கனக மாலினி என்று ஒரு பெண் இருந்தாளாம். அவளை யது வம்சத்தில் கொடுத்துக் கல்யாணம் செய்தார்கள். அவள் கல்யாணத்துக்குப் பிறகு கணவன் வீட்டுக்குப் புறப்படும்போது வருத்தத்துடன் இருந்தாள். இதைக் கண்ட தந்தை மேலும் யானை, குதிரை, நவரத்தினங்கள் முதலியவற்றைக் கொடுத்தார். அப்பொழுதும் அவளுடைய வாட்டம் நீங்கவில்லை. மிகவும் வற்புறுத்திக் கேட்டபின் அவர் பூஜையில் வைத்திருக்கும் விக்கிரகம் வேண்டுமென்று அவள் கேட்டு வாங்கிக்கொண்டாள். இப்படி இந்த விக்கிரகம் யது வம்சத்தாரிடம் போய்ச் சேர்ந்தது.

பலராமர், தீர்த்த யாத்திரை காரணமாக மேலக்கோட்டை மலைமேல் நாராயணரைத் தரிசித்தார். அப்பொழுது இங்கே மூலவராகிய நாராயணரும் தம் குடும்பத்தில் அமர்ந்திருக்கும் செல்வராயரும் ஒரே அச்சாக அவர் கண்ணுக்குத் தோன்றினார்களாம். ஆகவே, தம் குலதெய்வமான அந்த விக்கிரகத்தைக் கொண்டு வந்து யது வம்சத்திலிருந்து சிலரையும் இங்கே குடியேற்றினார். அதனால் இந்த மலைக்கு யதுகிரி, யாதவாத்ரி என்ற பெயர்கள் வந்தன. யது வம்சத்தைச் சேர்ந்த மைசூர் உடையார்களுக்கு இந்தப் பெருமான்மேல் அதிக பக்தி உண்டு.

வைர முடி என்பது வெகு நேர்த்தியாய் இழைத்த ஒரு கிரீடம். கண்ணைப் பறிக்கும் வைர வரிசைகளாலும் அபரஞ்சிப் பொன்னாலும் ஒளிரும் அதன் விலை, மதிப்புக்கு மீறியது. இது அநிருத்தனுடைய கிரீடமாம். பிரகலாதனுடைய மகன் விரோசனன் இதைக் கவர்ந்துவிட்டானாம். கருடன் துப்பறிந்து இதை மீட்டுக்கொண்டு வந்து கிருஷ்ணனிடம் ஒப்பித்துவிட்டுச் சென்றானாம்; கிருஷ்ணன், 'இதுவோ உத்தமர்களாகிய அரசர்கள் தரிக்க வேண்டிய கிரீடம்; நானோ ஆயன்; எனக்கு எதற்கு இது? இதை நம் குல தெய்வமாகிய செல்வராயருக்குச் சமர்ப்பித்துவிடு' என்று கட்டளையிட்டானாம். இதைக் கருடனே யதுகிரி நாதருக்குச் சமர்ப்பிக்கும் போது பெரிய அளவில் இருந்த அந்தக் கிரீடம் அந்த விக்கிரகத்துக்குச் சரியாக அடங்கிவிட்டதாம். அதுமுதல் இது செல்வராயருடைய சொத்தாகிவிட்டது.

இன்றும் முடி தரிக்கும் விழாவின்போது இதைப் பார்க்கலாம். மங்கள ஆரத்தி முடிந்ததும் இதை எடுத்து 'ஸீல்' வைத்துவிடுவார்கள். அடுத்த ஆண்டு உற்சவத்தின் போதுதான் மறுபடியும் இதைக் காணலாம். இதை யாரும் கையால் தொடுவதில்லை, கருடன் கையாலேயே 'ஸீல்' உடைக்கச் செய்து பகவானுக்கு அணிவிக்கிறார்கள்.

ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகம் குறிப்பிட்ட அன்றே இந்த உற்சவம் தொடங்கியது. இந்தக் கிரீடத்தை அணிந்த பகவானைத் தரிசித்தால் கிரகதோஷங்கள் நீங்கிச் சர்வ மங்களங்களும் உண்

டாகும் என்று ரிஷிகள் சொல்லி யிருக்கிறார்கள்.

மேலக் கோட்டையில் இரண்டு தேவஸ்தானங்கள் முக்கிய மானவை: ஒன்று, மலைமேல் பிரகலாதன் ஸ்தாபித்த நரசிம்ம மூர்த்தி கோயில்; மற்றொன்று, நாராயணமூர்த்தி கோயில். புனித மான 'கல்யாணி' என்ற புஷ்கரணி ஒன்று இருக்கிறது. ரிஷிகள் தவம் செய்த பல புண்ணிய தீர்த்தக் கரைகள் உள்ளன. தநுஷ்கோடி என்பது ஒன்று. ராமன் விட்ட அம்பின் முனையால் தோன்றிய நீர்நிலை இது என்று சொல்கிறார்கள். அழகிய மஞ்சள் குளம் அல்லது அக்கா தங்கை குளம், கோபால ராயனுடைய திட்டி வாசல் இவை எல்லாம் பார்க்க வேண்டியவை.

ஐயோ பாவம்

ஒரு கோடீசுவரரின் மகன் அயலூர் போய்விட்டு வந்தார். அவரை ஸ்டேஷனுக்குப் போய்ச் சந்தித்தான் வீட்டு வேலையாள். அவன் துக்கத்தோடிருந்தான்.

"என்னப்பா, ஏதாவது கெட்ட சேதியோ?" என்று கேட்டார் வாலிபப் பிரபு.

"ஆமாம், ஸார்: கிளி செத்துப் போச்சு" என்றான் வேலையாள்.

"எதனால் செத்துப்போச்சு?"

"குதிரை மாமிசத்தை மிதமிஞ்சித் தின்றதனால்."

"குதிரை மாமிசம் எங்கே கிடைத்தது அதற்கு?"

"நம் வீட்டு வண்டிக் குதிரையின் மாமிசந்தான். வீடு தீப் பிடிப்பதற்கு முதல் நாள் அது செத்துவிட்டது."

"வீடு தீப் பிடித்ததா? அடாடா! எப்போது?"

"சவக்கிரியை நடந்த அன்றிரவு."

"சவச் சடங்கா? யாருக்கு?"

"உங்கள் அம்மாவுக்கு, ஸார். உங்கள் அப்பா செத்துப் போன அதிர்ச்சியில் அம்மா செத்துப் போனாள்."

"என்னது? என் அப்பாவுங்கூடவா?"

"ஆமாம், ஸார். அவர் பணமெல்லாம் தொலைந்ததில் மனமுடைந்து செத்துப் போனார்."

"அட தெய்வமே!"

"ஆமாம், ஸார்; கிளி செத்துப் போச்சே! நாம் என்ன செய்வோம்!"

—'காப்பர்ஸ் வீக்லி'

அதிசய உலோகம்

★

இருபதாம் நூற்றண்டின் விந்தைப் பொருள் அலுமீனியம். அது வீட்டுக்கு வீடு வந்துவிட்டது; ஆயிரக்கணக்கான காரியங்களுக்குப் பயன்படுகிறது. அதன் ஆச்சரியமான இந்த வரலாற்றுக்கு ஆதாரம் 'காரோனெட்'டில் ருத் ஷேல்டன் நோல்ஸ் என்பவர் எழுதிய கட்டுரை.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் நகைக் கடை ஒன்றின் ஜன்னலண்டை ஏராளமான ஜனங்கள் கூடி விநோதமான உலோகம் ஒன்றை வேடிக்கை பார்த்தார்கள். கறுப்பு வெல்வெட்டில் வெள்ளிபோல் பளபளப்பான பிரமிட் கோபுரம் ஒன்று ஒளிந்துகொண்டிருந்தது. அதை வாஷிங்டன் நினைவுச்சின்னத்தின்மேல் வைக்க ஏற்பாடாகியிருந்தது. அலுமீனியம் என்ற அருமையான உலோகத்தால் ஆனது என்றுதான் அதைப் பார்த்துப்பார்த்து மக்கள் பரவசம் அடைந்தார்கள்.

"இதுவரை இவ்வளவு பெரிய கனமான அலுமீனியச் சாமானை யாருமே தயாரிக்கவில்லை. இதன் கனம் 100 அவுன்ஸாம்! இது திருப் பிடிக்காதாமே!" என்றெல்லாம் அங்கே இருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். கண்ணைப் பறிக்கும் அதன் அழகையும் பளபளப்பையும் பார்த்துப் பெண்கள் பெருமூச்சு விட்டார்கள். பிரான்ஸை ஆண்டு வந்த மூன்றும் நெப்போலியன், அந்தக் காலத்தில் மிகவும் கவுரவமான விருந்தாளிகள் யாராவது வந்தால், அவர்களுக்கு அலுமீனியத்தால் ஆன ஸ்பூன் முதலியவைகளைக் கொடுத்து உபசரிக்கும்படியும் மற்றச் சாதாரண விருந்தாளிகளுக்கு வெறும் வெள்ளி, தங்க ஸ்பூன்களைக் கொடுத்து உபசரிக்கும்படியும் உத்தரவிட்டாராம். அலுமீனியம் கிடைப்பது அவ்வளவு அருமையாக இருந்ததே இதற்குக் காரணம்!

நகைக் கடையில் கெம்பு, நீலக் கல் முதலியவற்றுக்கு நடுவில்

இந்த அலுமீனியக் கோபுரமும் பிரமாதமாகவே ஜொலித்தது. அலுமீனியம் அப்பட்டமான ஓர் உலோகம்; கெம்பு முதலிய கற்கள், அலுமீனியமும் பிற தாதுப் பொருள்களும் சேர்ந்து உண்டானவை. ஆகவே, நகைக் கடையில் அவைகளோடு இந்த அலுமீனியக் கோபுரமும் காட்சி அளித்தது பொருத்தமாகவே இருந்தது. ஆனல், 'நம் புழைக் கடைத் தோட்டத்திலிருந்து ஒரு மண்வெட்டி நிறையக் களிமண் எடுத்து, அதிகச் செலவாகிறதே என்று பாராமல் ரசாயன முறைப்படி அதைச் சுத்தம் செய்தால் ஒரு ராத்தல் அலுமீனியம் கிடைக்கும்' என்ற விஷயம் அப்போது அநேகமாக யாருக்குமே தெரியாது.

இதே சமயத்தில் ஓஹியோவில் உலோகங்களைப் பிரிக்கக்கூடிய ரசாயன முறையைப்பற்றி வாலிப விஞ்ஞானி ஒருவர் ஆராய்ந்துகொண்டிருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவர் அந்த முறையைக் கண்டுபிடித்துவிட்டார். அப்புறந்தான் அலுமீனியம் அதிக அளவில் கிடைக்க ஆரம்பித்தது. அலுமீனியத்துக்குள்ள ஒரு விசேஷ குணம் என்னவென்றல், அது மிகவும் லேசாக இருப்பதுதான். அலுமீனியம் கிடைத்ததால்தான் நிலம், நீர், ஆகாயம் இந்த மார்க்கங்களில் நாம் வெகு விரைவாகச் சாமான்களை அனுப்ப முடிகிறது. 'யுனைடெட் ஸ்டேட்ஸ்' என்ற பெரிய கப்பல் மிகவும் வேகமாகப் போவதற்குக் காரணம் முழுக்க முழுக்க அலுமீனியத்தாலேயே அதைக் கட்டியிருப்பதுதான். இவ்வளவு பெரிய அளவில் இதுவரை அலுமீனியத்தை உபயோகித்ததே இல்லை. அதுமட்டும் இராவிட்டால் பெரிய பெரிய ராணுவ விமானங்களையும் சரி, பிரயாணி விமானங்களையும் சரி கட்டியிருக்கவே முடியாது.

அலுமீனியச் சாமான் மிகவும் லேசாக இருப்பதால், இப்போதெல்லாம் அமெரிக்கப் பெண்களுக்கு மற்ற உலோகத்தால் செய்த கனமான சமையல் பாத்திரங்களைத் தூக்க வேண்டும் என்ற கவலை விட்டது! ஏன், குழந்தையைக் குளிப்பாட்டும் தொட்டி, தோட்டத்தில் உபயோகிக்கும் சாமான்கள்கூட அலுமீனியத்தால் ஆனவைதான். அலுமீனியத்தைக் கொண்டு பிரம்மாண்டமான கெரோஸினுயில் டாங்கு முதல் சீசா மூடி இப்படிப் பல சில்லறைச் சாமான்கள்வரை எதை வேண்டுமானலும் எளிதில் தயாரிக்கிறார்கள்.

இப்போதெல்லாம் வெளிச் சுவர், கூரை, படிக்கட்டு இதற்கெல்லாங்கூட அலுமீனியமே உபயோகிக்கிறார்கள். பிட்ஸ்பர்க்கில் இருக்கும் அமெரிக்க அலுமீனியம் கம்பெனியின் ஆபீஸ் 30 மாடி கொண்ட கட்டிடம். முழுவதும் அலுமீனியத்தாலேயே இதைக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே, நாளடைவில் இந்த மாதிரி மாடிக் கட்டிடங்களைச் சர்வசகஜமாக எங்கும் காணலாம்.

அலுமீனியம் சூரிய வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் நன்றாகப் பிரதிபலிக்கும்; இதனல் கட்டிடங்களுக்குள் வெப்பம் இராது. தென் துருவப் பிரதேசத்தில் அட்மிரல் பிர்டு என்பவர் தங்கியபோது தம் குடிசைக்குள் சூரிய வெளிச்சமும் உஷ்ணமும் பரவுவதற்காக

அலுமினியத் தகட்டை வெளியே வேலிமாதிரி அமைத்துக்கொண்டாராம்.

அலுமினியத்தில் ஈரம் கசியாது. அதில் எந்தப் பொருளை வைத்தாலும் கெட்டுப் போகாது. ஆகவே, உணவுப் பண்டங்களை அதில் பத்திரப்படுத்தி எங்கே வேண்டுமானாலும் அனுப்பலாம்; பிரிக்கும் போது பண்டம் அப்படியே புத்தம் புதிதாக இருக்கும். சமீபத்தில் அலுமினியம் தகடு விற்கும் வியாபாரி ஒருவர் வெளிநாட்டுக்குப் போயிருந்தார். மாதிரிக்கு அந்த அலுமினியம் தகட்டில் இரண்டு ஆண்டுகளாகப் பத்திரப்படுத்தி வைத்த சில சிகரெட் கட்டுக்களையும் எடுத்துக்கொண்டு போனார். அந்த வெளிநாட்டுச் சுங்க அதிகாரி அதிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தார். கமகமவென்று புது மணம் வீசியது. வியாபாரி என்ன சொல்லியும் அதிகாரிக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. 'இவை மாதிரிக்காக உள்ள சிகரெட்டுகள் அல்ல; வியாபாரத்துக்காகத் தயாரித்துள்ள புதிய சிகரெட்டுகளே' என்று எண்ணிச் சுங்கவரி கட்டித்தான் ஆகவேண்டுமென்று சொல்லிவிட்டார். தயாரித்த அன்று இருந்த மாதிரியே அவ்வளவு புத்தம் புதிதாக இருந்ததாம் அந்தச் சிகரெட்டு!

மண்ணில் 1/12 பகுதி அலுமினியம் இருக்கிறது; இது பல தொழில்களுக்குப் பயன்படுகிறது. இதைக் கண்டு பிடித்து 57 ஆண்டுகள்தான் ஆகின்றன என்றால் யாரும் நம்பவேகூட மாட்டார்கள். இரும்பு கலக்காத உலோகங்களுக்குள் இதுதான் இன்று அதிக அளவில் உற்பத்தியாகிறது.

தங்கம் வெள்ளி இவைகளைப் போல் அலுமினியம் அப்பட்டமாகக் கிடைப்பதில்லை.

பொதுவாகக் கல்லிலும் களிமண்ணிலும் அலுமினியம் கிடைக்கும் என்றாலும், பிற தாதுக்களோடு அது கலந்து கிடப்பதால் ரசாயன முறையில்தான் அதைப் பிரித்தெடுக்க முடியும்.

1845 - இல் டேனிஷ் ப்ரொஃபஸர் ஒருவர் ரசாயன ரீதியில் தாமே ஆராய்ச்சிச் சாலையில் அலுமினியம் தயாரித்து விட்டார். இன்னும் சில ஆண்டுகள் கழித்து ஒரு ஜெர்மன் விஞ்ஞானி குண்டூசியின் தலையளவுக்குச் சில அலுமினியத் துண்டுகளைத் தயாரித்தார்; இதிலிருந்து அலுமினியத்தின் அற்புத குண விசேஷங்களை எல்லாம் அவர் கண்டறிந்தார்.

பிறகு பிரெஞ்சு விஞ்ஞானி ஒருவர் ஆராய்ச்சிச்சாலையிலேயே பெரிய அளவில் அலுமினியம் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். அப்போது மூன்றாம் நெப்போலியன் பிரெஞ்சு மன்னராக இருந்தார். அவர், 'இந்தமாதிரி லேசான உலோகம் கிடைத்தால் ராணுவத்தாருக்கு லேசாகக் கவசம் முதலியவற்றை உற்பத்தி செய்து பிரான்ஸைப் பலப்படுத்தலாம்' என்று எண்ணி விஞ்ஞானியின் பரிசோதனைகளுக்கு ஆதரவாக இருந்தார். இதனால் அலுமினியம் எளிதில் கிடைக்க வழி ஏற்பட்டது. அதுவரை ஒரு ராத்தல் அலுமினியத்தின் மதிப்பு 545 டாலராக இருந்தது, 1859-க்கெல்லாம் 17 டாலராக இறங்கி விட்டது. அப்படியும் அதிக அளவில் அதைப் பயன்படுத்தவோ அதைக் கொண்டு உருப்படியாக

ஏதாவது செய்யவோ ஏராளமாகப் பணம் செலவழிக்க வேண்டியிருந்தது. அப்படியும் 1859-இல் உலகத்தில் மொத்தம் இரண்டு டன் அலுமீனியந்தான் உற்பத்தியாயிற்று! இதற்குப் பின் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஒரே சமயத்தில், இரண்டு பேர் எளிதில் ரசாயன முறையில் அலுமீனியம் கிடைக்கும் வழி என்ன என்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். பால் ஹெரோல்ட் என்ற பிரெஞ்சு விஞ்ஞானியும், சார்லஸ் மார்ட்டின் ஹால் என்ற அமெரிக்க விஞ்ஞானியும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். ஒருவரைப்பற்றி ஒருவர் கேள்விப்பட்டதுகூட இல்லை. அப்படியிருந்தும் 1886-இல் இரண்டுபேரும் ஒரே ரீதியில் அலுமீனியத்தை எளிதில் தயாரிக்க முடியும் என்று பரிசோதனை மூலம் கண்டறிந்தார்கள். ஹால் அமெரிக்காவில் 'பேடெண்டு' வாங்கிக்கொண்டு, அலுமீனியம் தொழில் வளர்ச்சிக்குரிய முயற்சிகளைச் செய்துவந்தார். அதே மாதிரி ஹெரோல்ட் ஐரோப்பாவில் 'பேடெண்ட்' வாங்கி இந்தத் தொழில் வளர முயற்சி எடுத்துக் கொண்டார். இன்னும் ஓர் அதிசயம் என்ன தெரியுமா? இந்த இரண்டுபேருமே நல்ல புகழும் செல்வாக்கும் சொத்தும் சேர்த்துக்கொண்டு ஒரே ஆண்டில் (1914-இல்) காலமானார்கள்!

பிட்ஸ்பர்க் என்ற ஊரில் ஹால் இந்தத் தொழிலைத் தொடங்கிய போது ஒரு நாளைக்கு இரண்டு பாத்திரத்திலிருந்து 50 ராத்தல் அலுமீனியம் உற்பத்தியானாலே பிரமாதம் என்று சொல்லும் நிலைமை இருந்தது. ஆனால் இன்று பார்க்கவேண்டும்: அதே முறையைக் கடைப்பிடித்து வரிசை வரிசையாக அடுக்கிய பாத்திரங்களில் வெகு சுலபமாக 5 லட்சம் ராத்தல் அலுமீனியம் நாள்தோறும் உற்பத்தி செய்கிறார்கள். 1952-இல் உலகத்தில் உள்ள எல்லா அலுமீனியம் யந்திரசாலைகளிலும் 20 லட்சம் டன் அலுமீனிய 'மொத்தை' (pig) உற்பத்தியாயிற்று; அப்போது ஒரு ராத்தலின் விலை 1/5 டாலர்.

சர்க்கரைபோல் காணும் அலுமீனா என்ற பொடியையும் இப்படித்தான் யந்திர மூலம் தயாரிக்கிறார்கள். இது அலுமீனியம் மிகுந்த பாக்ஸைட் என்ற தாதுப் பொருளிலிருந்து கிடைக்கிறது. முதல் முதலாகப் பாக்ஸ் என்ற பிரெஞ்சு நகரத்தில் 1821-இல் இது கிடைத்ததால் இந்தப் பெயர் வந்தது. பிரான்ஸ், பிரிட்டிஷ் கயானா, டச்சு கயானா, டால்மேஷியா, ருஷியா, மேற்கு ஹங்கேரி, ஜமைகா ஆகிய இடங்களிலும், ஐக்கிய அமெரிக்காவில் அர்க்கன்ஸாஸ், ஜார்ஜியா, மிஸ்ஸிஸ்ஸிபி, டென்னஸ்ஸீ, அலாபாமா இந்த ராஜ்யங்களிலும் பாக்ஸைட் ஏராளமாகக் கிடைக்கிறது.

அமெரிக்காவில் தென் அர்க்கன்ஸாஸ் மலைச் சாரலில் அலுமீனியம் உற்பத்தி செய்யும் பிரம்மாண்டமான பல யந்திரசாலைகள் உண்டு. பெரிய பெரிய வாணலிகள், சாமான் வைக்கும் தொட்டிகள் இவைகளுக்கிடையே ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும்போது பார்த்தால், ஈ, எறும்பு மாதிரிதான் தோன்றுவார்கள். மனிதர்கள் இருப்பதாகவே தெரியாது. அர்க்

கன்ஸாஸில் பாக்ஸைட் ஏராள மாக இருந்தும் அதில் அலுமீனி யம் குறைவாக இருப்பதால், அதோடு கலக்கத் தென் அமெரிக் காவிலிருந்தும் ஜமைகாவிலிருந் தும் அதிக அளவில் அலுமீனியம் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு வருகிறார்கள். ஐக்கிய அமெரிக்காவில் இப்படி வெளி நாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியிருப்பதால் மட்டரக பாக்ஸைட்டைச் சுத்தப்படுத்தும் போது கூடியவரை சிக்கனமாகவே செலவழித்து அதிக அளவு அலு மீனியம் எடுக்க வேண்டி ஆராய்ச்சிகள் செய்து வருகிறார் கள்.

இந்தத் தொழிலில் அலுமீனியம் அடங்கிய தாதுப் பொருள் எவ் வளவு அவசியமோ அதேபோல் ஹால் - ஹெரால்ட் முறையில் சுத்த அலுமீனியம் தயாரிக்க மின் சார சக்தியும் மிகவும் அவசிய மானது. சுத்த அலுமீனியத்தைப் பிரித்தெடுக்கும் ஒரு யந்திரத் துக்கு நாள் ஒன்றுக்கு ஸின்ஸின் னெட்டிபோன்ற ஒரு பெரிய நகரத்துக்குச் செலவாகும் அளவு மின்சாரசக்திவேண்டியிருக்கிறது என்றால் பாருங்கள்! நீர் விசையி னால் மின்சார உற்பத்தி செய்யும் முறை அதே சமயம் அபிவிருத்தி அடைந்து மின்சாரம் குறைந்த செலவில் கிடைத்ததால் அலுமீனி யத் தொழிலும் அதோடு வளர்ந்தது. அதோடு இன் னொன்றும் சொல்லியாக வேண்டும்: அலுமீனியம் உற்பத்தி செய்தவர்கள் மிகவும் முன் யோசனையோடு எங்கும் அலுமீனி யச் சாமான் பரவுவதற்கு வேண் டிய முயற்சியெல்லாம் எடுத்துக் கொண்டார்கள். இந்தச் சாமானை விற்க முன்வந்தவர்களும் இந்தத் தொழில் வளர்ச்சி பெற்றதற்கு முக்கிய காரணம் என்று சொல்ல வேண்டும்.

ஹால் என்ற விஞ்ஞானிக்கு அநேகம் பேர் பண ஒத்தாசை செய்தார்கள். இப்படி ஏற்பட்டது தான் அமெரிக்க அலுமீனியம் கம்பெனி. முதல்முதல் இந்தக் கம் பெனியார் அலுமீனிய 'மொத்தை' உற்பத்தி செய்தபோது, சாமான் தயாரிக்கும் வியாபாரிகள் அதை அவ்வளவாகச் சட்டை செய்ய வில்லை; இப்படிச் செய்ய அலுமீனி யம் நன்றாகப் பயன்படும் என்று சொல்லி அவர்களைத் தூண்டுவதற் குள் போதும் போதும் என்றாகி விட்டது. கம்பெனியாரே முதலில் ஒரு டீ-கெட்டில் தயார் செய்து அந்த வியாபாரிகளுக்குக் காட்டி னார்கள்.

இதைப் பார்த்ததும் அந்த வியாபாரிகளுக்கு ஒரு விதத்தில் திருப்தி ஏற்பட்டது. இந்த மாதிரி டீ-கெட்டில்களுக்கு ஏராளமாக 'ஆர்டர்' கொடுத்தார்கள். இருந் தாலும் அலுமீனிய மொத்தையை வாங்கித் தாங்களே கெட்டில்கள் செய்ய முன் வரவில்லை. ஆகவே, அலுமீனியம் உற்பத்தி செய்யும் கம்பெனியாரே இந்த மாதிரி கெட்டில்களைத் தயாரித்து வந்தார்கள். அதனால் இந்தத் தொழில் அபிவிருத்தி அடைந்தது. அவர்களே இன்னும் பலவகை அலுமீனியம் சாமான்களைச் செய்ய வும் முன் வந்தார்கள்.

1941-இல் ரெய்னல்ட்ஸ் மெட் டல் கம்பெனியும் இந்தத் துறை யில் ஈடுபட்டது. அதுவரை அமெரிக்க அலுமீனியம் கம்பெனி ஒன்று மட்டுமே இப்படி ஏராள

மாகத் தயாரித்து வந்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின் கெய்ஸர் அலுமீனியம் கம்பெனியை நிறுவினார்கள். இப்போது மொத்தத்தில் அமெரிக்கக் கம்பெனி (அல்கோலா) 50 சத விகிதமும், ரெய்னல்ட்ஸ் கம்பெனி 30 சதவிகிதமும், கெய்ஸர் கம்பெனி 20 சத விகிதமும் உற்பத்தி செய்து வருகின்றன.

உள்ளூர் உற்பத்திப் போட்டி காரணமாகவும், அதிகமான அலுமீனியம் சாமான் தயாரிப்பதாலும் பலவகையில் அலுமீனியம் பயன்பட்டு வருகிறது. மூன்றும் நெப்போலியன் அந்தக் காலத்தில் எண்ணியதுபோல், லேசான கவசம் மட்டுமென்றி ராணுவ உடுப்பு, தொப்பி முதலியவை செய்வதற்கும் பிற ராணுவக் காரியங்களுக்கும் அது மிகவும் அவசியமாக வேண்டியிருக்கிறது. எரோப்ளேன், படகு, சாதாரணக் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் இப்படிப் பல சாதனங்கள் செய்ய அது முக்கியமாகப் பயன்படுகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜெர்மானியர் தோற்றதற்குத் துண்டு அலுமீனியம் தகடும் ஒரு காரணம் என்றால் விநோதமாக இல்லையா? அமெரிக்காவில் ஹார்வர்டிலுள்ள ஆராய்ச்சிச்சாலையில், '2 அவுன்ஸ் எடையுள்ள அலுமீனியம் தகடுகளை ஆகாயத்தில் பறக்கவிட்டால், ரேடார் கருவி மூலம் கவனிக்கும் போது ஏதோ குண்டு போடும் விமானம் நெருங்கி வருவதுபோல் அந்தக் கருவியில் தெரிகிறது' என்று கண்டு பிடித்தார்கள். நேச நாட்டினர் யுத்தம் முடியும் சமயத்தில் ஜெர்மனியின்மேல் இந்த மாதிரி பல கோடிக்கணக்கான அலுமீனியத் தகடுகளை வீசினார்கள். எரோப்ளேன் எதுவும் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் இந்த அலுமீனியத் துண்டுகளையெல்லாம் குண்டு விமானங்கள் என்று மயங்கி ஜெர்மனியையே விமான மூலம் எதிரிகள் முற்றுகையிட்டதாக எண்ணிப் பயந்து நிலை குலைந்து போனார்களாம்.

நேரு ஜெயிலுக்குப் போகவேண்டுமா?

'தி அட்லாண்டிக்' என்ற பிரபல பத்திரிகை இன்றைய இந்தியாபற்றிச் சமீபத்தில் விசேஷ அநுபந்தம் வெளியிட்டிருக்கிறது. ஹார்வி ப்ரீட் என்பவர்தான் இந்தியாவுக்கு வந்து அதற்கு விஷயங்கள் சேகரித்தார். அநுபந்தத்தின் முகவுரையில் அவர் கூறுவது இது:

"இந்த அநுபந்தத்துக்கு ஏதாவது கட்டுரை எழுதிக் கௌரவிக்க முடியுமா?" என்று பண்டித நேருவைக் கேட்டேன்.

"என்னை ஜெயிலுக்குப் போகச் சொல்கிறீரா?" என்று அவர் பதிலளித்தார்.

"இல்லவே யில்லை! ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று நான் விசாரித்தேன்.

"எழுத எனக்கு அவகாசம் கிடைப்பதெல்லாம் ஒரே ஒரு சமயந்தான் - நான் ஜெயிலில் இருக்கிற சமயம்" என்று விளக்கினார் நேரு.

அமிர்தம் தோன்றிய கதை

''பகவானுடைய சரிதத்தைக் கேட்கக் கேட்கத் தெவிட்டவேயில்லை; மேலும் மேலும் அவருடைய திருவிளையாடல்களைப்பற்றிக் கேட்கவேண்டுமென்று ஆவல் ஏற்படுகிறது. பாற்கடலைத் தேவர்கள் எப்படிக் கடைந்தார்கள்? பகவான் அவர்களுக்கு எப்படி உதவினார்? இதையெல்லாம் தாங்கள் சொல்லவேண்டும்'' என்று பரீட்சித்து மன்னன் சுக முனிவரைக் கேட்டுக் கொண்டான்.

அவர் சொல்லலானார்: ''அசுரருக்கும் தேவருக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்து வந்தது. அசுரர் பல கொடிய பாணங்களைக் கொண்டு தேவர்களை வீழ்த்தி வந்தார்கள். அதோடு துர்வாச முனிவரின் சாபம் காரணமாகத் தேவர்கள் தம் செல்வத்தையெல்லாம் இழந்து துன்புற்றார்கள். அசுரரின் செல்வாக்கு நீடிக்கவே உலகத்தில் தரும காரியம் எதுவும் நடைபெறவில்லை. ருத்திரன், இந்திரன் முதலிய தேவர்கள் இதைக் கண்டு வருந்தினார்கள். பிறகு பிரம்மாவிடம் சென்று முறையிட்டார்கள். அப்போது அவர், 'நானும் நீங்களும் மற்றப் பிராணிகளும் பரமாத்மாவின் அம்சத்திலிருந்து உண்டானவர்கள். இனி அவரைச் சரணடைவோம்' என்று கூறி, அவர்களைப் பாற்கடலுக்கு அழைத்துச் சென்றார். எல்லாரும் பகவானைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அப்போது அவர் அவர்கள் எதிரே தோன்றினார். அவரிடமிருந்து வீசும் திவ்விய ஒளியினால் அவர்கள் கண்கள் மங்கின; தம்மைச் சுற்றி என்ன இருக்கிறது என்று தெரியாமல் பிரமித்து நின்றார்கள். பிரம்மாவும் சிவனும்மட்டும் பகவானைப் பணிந்து துதித்தார்கள்.

''அப்போது அவர், 'நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். உங்களுக்கு நன்மை உண்டாகும். முதலில் அசுரர்களோடு சமாதானம் செய்துகொள்ளுங்கள். நீங்கள் எலி பாம்புபோல் பகை



கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

யோடு வாழ்ந்தாலும் உங்கள் காரியம் நிறைவேறுவதற்காக ஒற்றுமையுடன் இருக்க வேண்டியது அவசியம். ரோஷப்பட்டால் ஒரு பலனும் கிட்டாது. அசுரர்களின் உதவியைக் கொண்டு, பாற்கடலில் மரம், செடி, கொடி, மருந்து மூலிகைகள் இவைகளையெல்லாம் போட்டு மந்தர மலையை மத்தாகச் செய்து, வாசுகியைக் கயிறாக்கிக் கடையுங்கள். அதிலிருந்து அமிர்தம் உண்டாகும். அதை நீங்கள்மட்டும் சாப்பிடுங்கள். அப்புறம் கிழத்தன்மையும் சரி, சாவும் சரி, உங்களுக்கு நிச்சயமாக ஏற்படாது. கடையும்போது காலகூட விஷமும் வெளியாகும். அதைக் கண்டு பயப்படாதீர்கள். நல்ல பொருள்கள் அநேகம் கிடைக்கும். இருந்தாலும் அவைகளின்மேல் ஆசை கொள்ள வேண்டாம்' என்று சொல்லி மறைந்தார்.

‘‘பிரம்மா முதலிய தேவர்கள் அவரை வணங்கிவிட்டுத் தம் இருப்பிடம் சென்றார்கள். அசுர மன்னன், தேவர்கள் அதுமுதல் போர் முரசு கொட்டாமல் இருப்பதைக் கண்டு தன் படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டு, கவலை இல்லாமல் உலகத்தை ஆண்டு வந்தான். ஒரு நாள் தேவேந்திரன் அசுர சக்கரவர்த்தியான பலியிடம் வந்தான். பலி, உலகம் அனைத்தையும் வென்று வெற்றிமாலை சூடி அசுரர்கள் சூழச் சபையில் அமர்ந்திருந்தான். தேவேந்திரன் பகவான் சொன்னதை மனத்தில் கொண்டு இனிய வார்த்தைகள் பேசலானான். ‘நமக்குள் பகை வேண்டாம். இனி ஒற்றுமையாக வாழ்வோம். பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுப்போம்’ என்றெல்லாம் சொன்னான். பகவானுடைய மாயையினால் கட்டுண்ட அசுரர் அதை ஆமோதித்தார்கள். உடனே இரண்டு சாராரும் சேர்ந்து அமிர்தம் எடுப்பதற்கு வேண்டிய முறையைப்பற்றி யோசிக்கலானார்கள். பிறகு மந்தர மலையைப் பறித்தெடுத்துத் தோளில் சுமந்துகொண்டு பாற்

கடலை நோக்கிப் புறப்பட்டார்கள். வழி நடுவில் பாரம் தாங்க முடியாமல் மலையைக் கீழே போட்டுவிட்டார்கள். அப்போது பல தேவர்களும் அசுரர்களும் அதன்கீழ் நசுங்கிப் போய்விட்டார்கள்.

“இதை அறிந்த பகவான் அங்கே தோன்றித் தம் கடைக்கண் நோக்கினால் தேவர்கள் பிழைத்தெழுந்திருக்கும்படி செய்தார். பிறகு மலையை ஒரு கையால் கருடனின்மேல் ஏற்றி வைத்துக்கொண்டார்; தேவாசுரர்களுடன் பாற்கடலுக்கு வந்தார். கருடன் மந்தரமலையைப் பாற்கடலில் போட்டுவிட்டுப் பகவானிடம் விடை பெற்றுச் சென்றான்.

“அப்பால் அசுரரும் தேவரும் நாகராஜனான வாசுகியை வேண்டிக்கொண்டு அவனையே மலையைச் சுற்றிக் கயிறுபோல் அமைத்துக் கடலைக் கடைய ஆரம்பித்தார்கள். முதலில் பகவான் வாசுகியின் தலையைப் பிடித்துக்கொண்டார். பிறகு தேவர்கள் பிடித்துக் கொண்டார்கள். அசுரர்கள் வாலைப் பிடிக்கவேண்டியதாயிற்று. அவர்களுக்கு இது சரி என்று படவில்லை. ஆகவே, ‘நாங்கள் சிறந்த குலத்தவர். நன்றாகப் படித்தவர்கள். அதோடு பிறப்பிலும் செயலிலுங்கூடச் சிறந்து விளங்குகிறோம். பாம்பின் வாலை ஒருபோதும் தொடமாட்டோம்’ என்று சொல்லிச் சும்மா இருந்தார்கள். இதைக் கண்டு பகவான் புன்னகை செய்து, தலைப்பக்கத்தை விட்டுத் தேவர்களோடு வால் பக்கத்தைப் பிடித்துக்கொண்டார். அசுரர்கள் தலையைப் பிடித்துக் கொண்டார்கள். இரண்டு சாராரும் முழுப் பலத்துடன் சிரமப்பட்டுக் கடலைக் கடையலானார்கள்.

“அப்போது மலையின் அடிப்பாகத்தில் ஊன்றி நிற்க ஏதும் இல்லாததால் அது மூழ்கத் தொடங்கியது. தேவாசுரர்கள் என்ன முயன்றும் அதைத் தூக்க முடியவில்லை. இப்படி என்ன செய்வதென்று தெரியாமல் அவர்கள் தவிக்கும்போது பகவான் ஆமை வடிவம் எடுத்துக் கடலில் குதித்தார். மலையின் அடியில் போய் அதைத் தம் முதுகில் தாங்கிக்கொண்டார். கடல் நடுவில் தோன்றிய தீவுபோல் அசையாமல் இருந்தார். மலை அவர் முதுகில் நிலைத்து நின்றது. தேவாசுரர்கள் மகிழ்ச்சியுற்றார்கள். அவரைப் போற்றினார்கள். பிறகு எல்லாரும் முழுப் பலத்தோடு கடலைக் கடைந்தார்கள். கடலில் இருந்த முதலை, திமிங்கிலம் முதலிய பிராணிகள் கலக்கமுற்றன.

“வாசுகி பாடு மிகவும் கஷ்டமாக இருந்தது; அவன் பெருமூச்சு விடலானான். விஷம் கலந்த அந்தக் காற்றுப் பட்டதும் அசுரர்கள் பலர் பொசுங்கிவிட்டனர். தேவர்களின் மேலும் அந்தக் காற்றுப் பட்டாலும் பகவானுடைய ஆணையால் மழை பொழியவே சிரமமின்றி இருந்தார்கள்.

“இப்படி இரண்டு சாராரும் வெகு காலம் கடைந்தும் அமிர்தம் வராததால் பகவானே முழுப் பலத்துடன் கடைந்தார். கடலே கலங்கியது. உடனே அதிலிருந்து ஹாலாஹலம் என்ற கொடிய விஷம் தோன்றியது. அதன் ஜ்வாலை நாலு திசையிலும் மேலும் கீழும் பரவியது. இதைக் கண்டு இந்திரன் முதலிய தேவர்களும் பிறரும் திகைத்தார்கள். அப்

போது மந்தர மலையிலேயே பார்வதியுடன் தவம் செய்துகொண்டிருந்தார், சிவபெருமான். எல்லாரும் அவரைச் சரண் அடைந்து போற்றினார்கள்.

"சிவபெருமான் கருணை கூர்ந்து பார்வதியிடம் சொல்லலானார்: 'பவானி, இந்தக் காலகூட விஷம் கிளம்பியதால் மக்கள் படும் பாட்டைப் பார்! இவர்களுக்கு அபயம் அளிக்கவேண்டும். சாதுக்கள் தம் உயிரைக் கொடுத்து மற்றவர்களைக் காப்பார்கள். நான் இவர்களிடம் கருணை கூர்ந்தால் ஸ்ரீமந் நாராயணர் மகிழ்ச்சி அடைவார். அதனால் எனக்குத் திருப்தி ஏற்படும். ஆகவே, இதோ இந்த விஷத்தை நான் சாப்பிடுகிறேன். என் மக்கள் சுகமாக இருக்கட்டும்' என்று சொல்லி அந்த விஷத்தை உண்ணலானார். அந்த விஷம் தன் இயல்பை அவரிடமும் காட்டாமற் போகவில்லை. அவருடைய கழுத்தை நீலமாக்கிவிட்டது. அதுவும் அவருக்கு அணியாகவே ஆயிற்று. எல்லாரும் இந்த அருஞ் செயலைப் புகழ்ந்தார்கள். அவர் கையிலிருந்து நழுவிய அந்த விஷத் துளிகளே தேள், பாம்பு, விஷச் செடி கொடி மரங்களாகத் தோன்றின.

"மறுபடியும் கடலைத் தேவாசுரர்கள் கடைந்தபோது காமதேநு தோன்றியது. யாகத்தில் பால் வேண்டியிருக்குமே என்று முனிவர்கள் அதை எடுத்துக் கொண்டார்கள். பிறகு சந்திரனைப்போல் வெண்மையான உச்சைச்ரவஸ் என்னும் குதிரை தோன்றியது. அதைப் பலிச் சக்கரவர்த்தி எடுத்துக்கொண்டான். இந்திரனுக்கும் அதன்மேல் ஆசைதான்; என்றாலும், பகவான், 'எதன்மேலும் ஆசைப்படாதே' என்று சொல்லியிருந்ததால் சும்மா இருந்துவிட்டான். பிறகு பிரமாண்டமாக விளங்கும் ஐராவதம் என்ற யானை தோன்றியது. அதற்குப் பின் கௌஸ்துபம், பதுமராக மணி இவை தோன்றின. அதைத் தம் மார்பில் அணிந்து கொள்வதற்காகப் பகவான் எடுத்துக் கொண்டார். பிறகு பாரிஜாதமும் கற்பக மரமும் அப்ஸரஸுகளும் தோன்றினார்கள்.

"அப்பால் மின்னல் கொடி போல் திசைகள் ஒளிர, பகவானைத் தியானித்தபடி லட்சுமி தோன்றினாள். அவளுடைய அழகு, பெருந்தன்மை, இள வயது இவைகளைக் கண்டு தேவர், அசுரர், மனிதர் எல்லாரும் மயங்கினார்கள். தேவேந்திரன் அவளுக்கு ரத்தினம் இழைத்த ஆசனம் அளித்தான். நதிக்குரிய தேவதைகள் தங்கக் குடங்களில் நீர் கொண்டு வந்தன. திக்கஜங்கள் துதிக்கையால் அந்தக் குடங்களை ஏந்தி அந்த நீரை அவளுக்கு அபிஷேகம் செய்தன. கடல் அரசன் வெண் பட்டாடை அளித்தான்.

வருணன் வைஜயந்தி என்னும் மலர்மாலையை அளித்தான். சரசுவதி ஆரம் ஒன்றையும், பிரம்மா தாமரையையும், நாகர்கள் குண்டலத்தையும் அளித்தார்கள். கந்தர்வர்கள் பாடினார்கள். நடிகைகள் ஆடினார்கள். மேகங்கள் இன்னிசை முழங்கின. தங்கக் கொடி போல் அசைந்து நடந்து பகவானிடம் வந்தாள் லட்சுமி. உலகில் ஒருவரிடம் ஒரு குணம் இருந்தால் இன்னொன்று இல்லாதிருக்கும். ஆகவே, லட்சுமி அனைவரிடமும் குறையையே

கண்டு வெறுப்புற்றவளாய் அனந்த கல்யாண குணம் நிரம்பிய பகவானையே வரிக்கத் தீர்மானித்தாள். அவர் தோளில் மணம் கமழும் மாலையை அணிவித்தாள். தனக்கு ஏற்ற இருப்பிடம் எனக் கருதி அவர் மார்பையே ஆசையோடு உற்றுப் பார்த்தாள்; பகவானும் அவள் விருப்பத்தை உணர்ந்து அவளைத் தம் மார்பகத்தில் வைத்துக்கொண்டார்.

"மகிழ்வுடன் லட்சுமி நோக்கினாள்; பிரம்மா முதலான தேவர்கள் அதைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஆனால் அசுரர்கள் லட்சுமி தங்களை மணக்காமல் போகவே ஒளியிழந்து சோர்வுற்றார்கள்.

"பிறகு கடலிலிருந்து செந்தாமரை போல் அழகிய கண்களுடன் கன்னிப் பருவத்தில் வாருணி தேவதை தோன்றினாள். பகவானுடைய அருளால் அசுரர்கள் அவளை ஏற்றார்கள்.

"மீண்டும் கடலைக் கடைந்தபோது அற்புதமாக விளங்கும் ஒரு மகா புருஷன் தோன்றினான். அவன்தான் மகா விஷ்ணுவின் அம்சமான தன்வந்தரி; ஆயுர்வேதத்தை வளர்த்தவன். வளையல் அணிந்த அவன் கையில் அமிர்த கலசம் இருந்தது.

"அதைக் கண்டதும் அசுரர்கள் ஆவலோடு ஓடி வந்து பலாத்காரமாக அந்தக் கலசத்தைத் தன்வந்தரியிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள். தேவர்கள் வருத்தமுற்றுச் சோர்ந்து போனார்கள். பகவானைச் சரண் புகுந்தார்கள். அவர், 'நீங்கள் கவலைப்படாதீர்கள்' என்று சொல்லி மறைந்தார்.

"இதற்குள் அசுரர்களுக்கிடையே யார் முதலில் அமிர்தத்தைப் பருகுவது என்று சச்சரவு ஏற்பட்டுவிட்டது. ஆகவே, அதில் ஒரு சாரார், 'தேவர்களுக்கும் கொடுக்க வேண்டும்' என்று சாக்குச் சொல்லி ஒரு விதமாகச் சமாதானம் செய்து மறு பக்கமாக அமிர்த கலசத்தை எடுத்துப் போனார்கள்.

"அப்போது பகவான் மோகினி வடிவம் தாங்கி அசுரர்கள் மயங்கும்படி புன்னகை பூத்து, கடைக்கண் பார்வை வீசி அவர்கள் எதிரில் நின்றார். அவர்கள், மோகவசப்பட்டு, 'நீ யார்? இந்த மாதிரி கட்டழகியை நாங்கள் கண்டதே இல்லையே! உன்னைப் பார்த்தாலே மகிழ்ச்சி உண்டாகிறது. எங்களுக்குள் இந்த அமிர்தத்துக்காகச் சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. நீ இதைச் சமமாகப் பங்கிட்டுத் தருகிறாயா?' என்றார்கள்.

"மாயப் பெண்ணாக வந்த பகவான் குறுநகையுடன், 'நீங்களோ காசியப முனிவரின் சந்ததியார். இப்படி ஒரு விலைமாதின்மேல் மோகங் கொள்ளலாமா?' என்றார்.

"அசுரர்கள் தங்கள் விருப்பப்படி மோகினி நடப்பாள் என்று எண்ணிச் சிரித்துக்கொண்டே அமிர்த கலசத்தைப் பகவானிடம் கொடுத்தார்கள். பகவான் அதை வாங்கிக்கொண்டு அசுரர்களை நோக்கி, 'அப்படியானால் நான் என்ன செய்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றார்.

"அசுரர்கள் முன் போலவே பல்லை இளித்து, 'அப்படியே ஆகட்டும்' என்றார்கள்.

"இதற்குள் தேவர்கள் உபவாசம் இருந்து, ஓமம் செய்து, சுத்தமான மனத்தோடு அமிர்தம் பருகக் கிழக்கு நோக்கி அமர்ந்

தார்கள். பகவான் அசுரர்களை இன்னொரு பக்கம் அமர்த்தினர். தேவர்கள் தூரத்தில் இருந்தாலும் முதலில் அமிர்தத்தை அவர்களுக்கே பரிமாறினர். அப்போது தேவர்கள் வரிசையில் ராகு என்ற அசுரன் புகுந்து அமிர்தத்தைப் பருகலானுன். இதை அவன் அருகில் இருந்த சூரிய சந்திரர்கள் பகவானிடம் சொல்லவே, அவர் சக்கராயுதத்தால் அவன் கழுத்தைத் துண்டித்தார். அமிர்தம் அவன் வாயில் இருந்ததால் அவன் தலைமட்டும் உயிரோடு இருந்தது; உடல் கீழே விழுந்தது. அந்தத் தலையைப் பிரம்மா கிரகமாக்கிவிட்டார். அதுதான் சூரிய சந்திரர்களை அவ்வப்போது துன்புறுத்தி வருகிறது. தேவர்கள் அமிர்தம் பருகி முடிந்ததும் அசுரர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பகவான் பெண் உருவத்தை விட்டுச் சுயரூபம் கொண்டு மறைந்தார்.

"தங்களுக்கு அமிர்தம் கிடைக்காததால் அசுரர்கள் கோபமுற்றுத் தேவர்களோடு போர் புரியலானுர்கள். அமிர்தம் பருகியதால் புத்துயிர் பெற்ற தேவர்களும் பின் வாங்காமல் இருந்தார்கள். முதலில் அசுரர்களை வெல்வது சிரமம் என்று தோன்றினுலும், பின்னல் பகவானுடைய அருளால் அவர்களுக்கு வெற்றி கிட்டியது.

சிநேகித தர்மம்

லாகூரில் லாலா லஜபதி ராயின் வீட்டில் காந்திஜி ஒரு சமயம் தங்கினர். ஒத்துழையாமை இயக்க ஏற்பாட்டைப் பாஞ்சாலச் சிங்கம் இன்னும் முற்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. வேறு சில பாஞ்சாலத் தலைவர்கள் காந்திஜியிடம் வந்தார்கள். "லாலாஜி கிடக்கிருர். நாங்கள் தனிப்பட்டு உங்கள் தலைமைக்குட்பட்டு இயக்கத்தில் ஈடுபடுகிறோம்" என்ருர்கள்.

காந்திஜி இந்த யோசனையை நிராகரித்துவிட்டார். "பஞ்சாப் லாலாஜியின் மாகாணம். லாலாஜியின் தலைமைக்குட்பட்டவர்கள் கட்டுப்பாடு குலைவதற்கு நான் இடங்கொடுக்க மாட்டேன். எனக்கும் லாலாஜிக்கும் அபிப்பிராய வேற்றுமை ஏற்படும்போது, அவருடைய அபிப்பிராயப்படியே நீங்கள் நடக்க வேண்டும்" என்ருர்.

இந்தச் சம்பாஷணை நடக்கும்போது, அந்த அறையில் லாலாஜி இல்லை; அடுத்த அறையில் இருந்தார். அவர் காதில் இந்தப் பேச்சு விழுந்தது. இதைக் கேட்டு அவர் பெரிதும் மனமுருகி விட்டார். இருவருக்கும் ஆயுள் பரியந்தம் அருத நட்பு ஏற்படுவதற்கு இதுவே அஸ்திவாரமாயிற்று.

தம் வாழ்நாள் முழுவதும் பிற தோழர் அத்தனை பேர் விஷயத்திலும் இதே சிநேகித தர்மத்தைத்தான் காந்திஜி அநுஷ்டித்தார்.

—ப்யாரேலால் நய்யார்

சீதை சிறையிருந்தது அசோக வனம்; 'மாளவிகாக்னி மித்ர' நாடகத்தில் வருவது அசோக மரம்.

அசோகம் பூ

என். வி. ஆப்டே

ஆதி காலத்திலிருந்தே மலர் தரும் மரங்களைப்பற்றிக் கவிதைகளில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அதுவும் சமஸ்கிருதக் கவிதைகளில் அசோகம் பூ, மகிழம் பூ இவை மலர்வதைப்பற்றி அற்புதமான வர்ணனைகள் வருகின்றன.

பிரபுக்களுக்கு அசோக மரம் என்றால் வெகு பிரீதி. உத்தியான வனங்களில் எல்லாம் அசோக மரம் நட்டிருப்பார்கள். அசோக மரம் பூப்பதையே முக்கிய நிகழ்ச்சியாகக் கொண்டு காளிதாசன் ஒரு நாடகம் எழுதியிருக்கிறான். அதில் வரும் விஷயம் இதுதான்.

* * *

கோடை வந்துவிட்டது. அப்படியிருந்தும் அசோக மரம் பூக்கவில்லை.

ஆகவே, அது பூப்பதற்காக ஒரு சடங்கு நடத்துவதென்று ஏற்பாடாயிற்று. பட்டமகிஷி அதைத் துவக்கி வைக்கப்போவதாக முதலில் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அவளுக்கு ஜுரம் வந்துவிடவே, நர்த்தகி ஒருத்தியை அழைத்து வருகிறார்கள்.

அந்தப் பெண் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பு பூசியிருக்கிறாள். அடிமரத்தை எட்டி உதைக்கிறாள்.

சில நாளைக்கெல்லாம் அந்த அசோக மரத்தில் மொட்டுக்கள் தெரிகின்றன. இந்தச் சடங்கைப் பற்றிய விரிவான வர்ணனையை அந்த நாடகத்தில் காணலாம். இப்படிக் காளிதாசனுடைய நூல்களில் 23 இடங்களில் அசோக மரத்தைப்பற்றியும் அதன் மலரைப் பற்றியும் விவரித்திருக்கிறது. இந்த நாடகம் ஒன்றிலேயே 13 இடத்தில் அசோகத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. காளிதாசன் எழுதிய முதல் நாடகம் இது.

* * *

அசோக மலர் செந்நிறமாக இருக்கும். இது பூத்துக் குலுங்கும்போது மஞ்சள் கலந்த சிவப்பு முதல் நீலம் கலந்த சிவப்பு வரையில் பல நிறவேற்றுமைகளைக் காணலாம். நாளுக்கு நாள் இந்த மலரின் நிறம் மாறிக்கொண்டே வரும். இந்த மலரின் காம்புகூடச் சிவப்பாகத்தான் இருக்கும். இந்த மாதிரி ஒரு காம்பில் கொத்துக் கொத்தாக இது பூத்து விளங்குவது கண் கொள்ளாக் காட்சியாகும். இந்தப் பூங்கொத்தும் அடிமுதல் நுனிவரையில் சிவப்பாகவே இருக்கும். கடற்கரையில் காணும் பவளத்தோடு இதை ஒப்பிடுகிறான் காளிதாசன். மிகவும் பொருத்தமான உவமைதான்.

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 9-5-'54,) கல்கத்தா.

ஒவ்வொரு மலரும் இரண்டு அங்குல நீளம் இருக்கும்.

* * *

பூத்துக் குலுங்கும் அசோக மரத்தின் அழகு வேறெந்த மரத்துக்குமே வராது. இதனால்தான் அந்தக் காலத்தில் பிரபுக்கள் இதை வளர்த்தார்கள்; இது பூப்பதைப் பார்க்க ஆவல் கொண்டார்கள்.

அசோக மரத்தின் போக்கே விநோதம். அது இப்போதுதான் பூக்கும் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆகவே, அசோகம் பூத்து விளங்க வேண்டும் என்று உல்லாசப் பேர்வழிகள் இப்படி ஒரு வழியைக் கையாண்டு பார்த்தார்கள்: செம்பஞ்சு பூசி ஒரு பெண் அடிமரத்தை உதைத்தால் அதற்கு மானம் வந்து பூக்கும் என்று கற்பனை செய்துகொண்டார்கள்!



அசோகம் பூவின் பகுதிகள்: 1. மகரந்தக் கேசரங்கள்; 2. சூலறை; 3, 4 புல்லி அல்லது புல்லிதழ்; 5. வெடிக்கும் விதைப்பை.

* * *

பூனாவில் இருந்தபோது ஒரு சமயம் அசோக மரம் ஒன்றைக் கவனித்திருக்கிறேன். அது ஒரு தடவை ஜூன் மாதத்திலும் இன்னொரு தடவை பிப்ரவரி மாதத்திலும் பூத்தது! இப்படி வேறு எந்த மரமும் பூப்பதாகத் தெரியவில்லை. இதன் போக்கே விநோதம் என்றாலும், இதை உதைத்தால் மானம் வந்து பூக்கும் என்பது வெறும் கட்டுக்கதை என்றுதான் சொல்ல வேண்டும்.

அழகி ஒருத்தி எட்டி உதைக்காமலேயேகூட அசோக மரம் பூக்கிறது என்று காளிதாசன் ஒரு காவியத்தில் குறிப்பிட்டிருக்கிறான்.

அதில் இமயமலைச் சாரலில் வசந்தகாலம் வருகிற வர்ணனையைக் காணலாம். சிவபெருமான் அங்கே தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். பார்வதி அவர் மனத்தைக் கொள்ளை கொள்ள வருகிறாள். அப்போது அங்கிருந்த அசோக மரம் சட்டென்று பூத்தது என்று வர்ணிக்கிறான் கவி. அழகி ஒருத்தி வந்து உதைக்க வேண்டுமென்று அது காத்திருக்கவில்லை!

அசோக மலர் நீளமாய்க் குழாய் போல் இருக்கும். அதன் மேல் பாகத்தில் ஒரு பிளவு உண்டு. அங்கே சூலறை ஒன்று இருக்கிறது. அதுவே காயாகிப் பழமாகிறது.

* * *

அந்தப் பிளவுக்கு அருகில் பத்து மகரந்தக் கேசரங்களும்

நாலு புல்லிதழ்களும் இருக்கும். சூலறை, சூல்தண்டு, சூல்முடி இப்படி மூன்று பகுதிகளை இதில் காணலாம். சூல்தண்டு மகரந்தக் கேசரங்களின் தாள் போலவே நீண்டு இருக்கும். சூலறை முதலில் சற்றே நீல நிறமாக இருந்து பிறகு ஊதாவாக மாறும். விதைப் பை அல்லது பழத்தை விண்டால் ஒரே ஒரு விதைதான் இருக்கும்.

இதிலிருந்துதான் அசோகங் கன்று உற்பத்தியாகிறது. ஆயினும் அநேகம் அசோக விதைகள் முளை விடுவதேயில்லை. அப்படி இரண்டொன்று முளை விட்டாலும் மூன்று ஆண்டுகளுக்குள் அநேகமாக இருந்த இடம் தெரியாமல் பட்டுப் போய்விடும்.

இதனுல்தான் இதைத் தோட்டத்தில் நட்டு வளர்ப்பதென்றுல் கூட மிகவும் பிரயாசைப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, வர வர இது அரிதாகி வருகிறது. ஆனுல் காடுகளில் மட்டும் இது செழித்து வளர்வதைக் காணலாம்.

* * *

கவிகள் வர்ணிக்கும் இந்த அசோக மரத்தைத் தவிர இன்னெரு வித அசோக மரமும் உண்டு. அதற்கு மற்றெரு பெயர் ஆசுபலம். இந்தக் காலத்தில் அசல் அசோக மரத்தைவிட இந்த ஆசுபலத்தையே சர்வசகஜமாகப் பார்க்கிறோம்.

இரண்டுமே எப்போதும் பச்சைப் பசேல் என்றிருக்கும். ஆனுல் சிவப்பு அசோகத்தின் இலைகள் கரும் பச்சையாக இருக்கும்; ஆசுபலத்தின் இலைகள் லேசான பச்சை நிறமாக இருக்கும்.

ஆசுபலத்தின் இலைகள் மொத்தத்தில் மா இலை போல் இருந்தாலும் இதன் விளிம்புகள் அலை போல் வளைந்து வளைந்து இருக்கும்.

சிவப்பு அசோக மரத்தின் இலைகள் இணைந்து இணைந்து மா இலை அளவுக்கு இருக்கும். இப்படி இணைந்த ஒவ்வோர் இலையிலும் இரட்டைப் படையான சிற்றிலைகள் - சுமார் பத்து - இருக்கும். ஒரு காம்பில் இணைந்தாற் போல் மொத்தமாகப் பல சிற்றிலைகள் காட்சியளித்தாலும் அதை ஒரே இலை என்றுதான் கொள்ள வேண்டும்.

ஆசுபல மரம் கோடையில் மலரும். இருந்தாலும் இந்த மலரை நாம் காண்பதே அரிது. இலை போலவே இதன் மலரும் லேசான பசுமை நிறமாக இருக்கும்; சின்னஞ் சிறிதாயிருக்கும். அதனுல்தான் இது கண்ணில் படுவதில்லை. இதன் பழமும் சின்னதே. மரத்தடியில் விழுந்து கிடக்கும் விதையிலிருந்துதான் முளை விடுகிறது. சிவப்பு அசோகத்தைவிட இது எளிதில் பலிதமாகும்.

* * *

இந்தியாவில் பல இடங்களில் ஆசுபலத்தை வளர்க்கிறுர்கள். காடுகளில் இதைக் காணமுடியாது. இலங்கையிலிருந்து வந்தது தான் இது. அங்கே சிவப்பு அசோகம், ஆசுபலம் இரண்டுமே சகஜமாக வளருகின்றன.

ராமாயணத்தில் இலங்கேசுவரனை ராவணன் சீதையை அசோக வனத்தில் சிறை வைத்திருந்தான் என்று வருகிறதே, அதன் வர்ணனையைக் கவனித்தால் அது சிவப்பு அசோகம் என்றுதான் தெரிகிறது.

எங்கே போனாலும் பெண் மனம் ஒரே விதந்தான்; பழக்கங்களே வேறு.

ஐரோப்பியப் பெண்கள்

சாருசீலா

சில மாதங்களுக்கு முன்பு நான் ஸ்விட்ஜர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பெண்களோடு நெருங்கிப் பழகினேன். இத்தாலியப் பெண்மணி நம் நாட்டுப் பெண்ணைப்போலவே இருக்கிறாள். ஸ்விஸ் பெண்ணும் அப்படித்தான். இரண்டு பேருடைய சுபாவத்தையும் சேர்த்து வைத்தால், இந்தியப் பெண்ணின் முழுச் சித்திரமாகி விடும்.

ஸ்விஸ் பெண்களுக்கு வீட்டு வேலைகள் செய்வதில் மிகுந்த ஆசை. கண்ணாடிச் சாமான்களைத் துடைப்பதும், தரையைப் பளபளவென்று அலம்புவதும், துணிகளை மடித்து வைப்பதுமாக அவர்களுக்கு எப்போதும் வீட்டு வேலையில்தான் கவனம். நம்மைப் போலவே அவர்களுக்கும் பிறருடைய செய்தியை அறிவதிலே ஆவல், மற்றப் பெண்களின் உடையையும் நகைகளையும் ஆராய்வதிலே குதூகலம், தர்ம சிந்தனை ஆகிய இயல்புகள் உண்டு. ஸெயின்ட் பீட்டர்ஸ் சர்ச்சில் பிரார்த்தனை செலுத்துவதும், மெழுகுவர்த்திகள் ஏற்றி வைப்பதும், குழந்தைகளைத் தெய்வ தரிசனத்துக்கு அழைத்து வருவதும் அவர்களுடைய அன்றாட வேலை.

நான் தனியாக ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்து வெளி நாட்டுக்கு வந்ததைக் கண்டு அந்தப் பெண்கள் ஆச்சரியப்பட்டார்கள். இத்தாலிய விமான ஓட்டி ஒருவன் என்னோடு பேசினான். அவனுக்குச் சில நாளைக்கு முன்புதான் மணமாகியிருந்தது. "இனிமேல் நான் விமானம் ஓட்டும் தொழிலிலே இருக்கக் கூடாது என்று என் மனைவி தடுக்கிறாள்" என்று அவன் என்னிடம் சொன்னான். இதைக் கேட்டதும் எனக்கு வேடிக்கையாக இருந்தது. எந்த நாட்டுக்குப் போனாலும் பெண்களின் இயல்பு ஒரே மாதிரிதான் இருக்கிறது என்று எனக்குத் தோன்றிற்று.

நமக்கு முற்றும் மாறான பெண்மணியை இங்கிலாந்திலே பார்க்கலாம். ஆங்கிலப் பெண் தைரியசாலி; யாரோடும் பேச மாட்டாள்; எந்த வம்புக்கும் வர மாட்டாள்; நம்முடைய வேலையை நன்றாகச் செய்தால் எல்லாம் நல்லதுதான் என்பது அவள் எண்ணம். சுறுசுறுப்பாக, கச்சிதமாக, விரைவாக, மனசோடு வேலை செய்வது ஆங்கிலப் பெண்ணின் தனிக் குணம். அழுத்தமாக மூடிய மென்மையான உதடுகளைக் கொண்டே அவளுடைய உறுதியையும் பேசாமடந்தைத்தனத்தை

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி: மே '54), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா.

யும் தெரிந்துகொள்ளலாம். பிரெஞ்சுப் பெண்களும் ஸ்விஸ் பெண்களும் எல்லாரோடும் அன்பு கொண்டாடுவார்கள்; ஆங்கிலப் பெண்கள் கூடிய மட்டும் விலகியே இருப்பார்கள். ஆனால் ஒன்று: குழந்தை வளர்ப்பு, வீட்டு அன்பு, உழைப்பு ஆகிய பொதுவான பெண் இயல்புகள் உலகமெங்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன.

"போருக்கு முன்னும் பின்பும் அந்த நாட்டுப் பெண்களிடம் ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா?" என்று என்னை ஒருவர் கேட்டார். போருக்கு முன்பு அந்தப் பெண்கள் எப்படி இருந்தார்கள் என்பதை நான் நேரில் பார்த்ததில்லை. புத்தகங்களிலும் படங்களிலும் நான் படித்ததையும் பார்த்ததையும் மனத்தில் வைத்துக்கொண்டு அவர்களை நேரில் போய்க் கண்டபோது நான் நினைத்ததெல்லாம் முற்றும் தவறு என்று தெரிந்தது. உதாரணமாக, நான் பிரான்ஸுக்குப் போகுமுன்பு, அந்த நாட்டுப் பெண்கள் மிக உல்லாச ஆடையணிந்து, மோகனமான கூந்தல் அலங்காரங்கள் செய்துகொண்டு, கமகமவென்று ஸெண்டும் அத்தரும் பூசித் திரிவார்கள் என்று எண்ணியிருந்தேன். நான் நேரில் கண்ட காட்சி இதற்கு முற்றும் வேறாக இருந்தது. இப்பொழுதும் பாரிஸ் நைட் கிளப்புகளில் அப்படிச் சில பெண்கள் இருக்கலாம்; ஆனால் நான் பெரும்பாலும் பார்த்த பிரெஞ்சுப் பெண்கள் சாதுவாக, கௌரவமுள்ளவர்களாக, உழைப்பாளிகளாக, எளியவர்களாக இருந்தார்கள். இன்றை நிலைமை அவர்களைக் கெட்டிக்காரர்களாக்கியிருக்கிறது. அவர்களுடைய முகத்தில் கம்பீரமான ஒரு நடுநிலைமை நிலவுகிறது. ஐரோப்பிப் பெண்கள் எல்லாருக்குமே இதைப் பொதுவாகச் சொல்லலாம்.

நம் நாட்டில் இருப்பது போலவே அங்கும் நடுத்தர வகுப்பார் இருக்கிறார்கள். ஆயினும் இவர்களுக்கும் அவர்களுக்கும் அஜகஜாந்தரம் என்று சொல்ல வேண்டும். அங்கே குழந்தைகள், கிழவர்கள் உட்பட ஆண் பெண்கள் எல்லாருமே வேலை செய்கிறார்கள். இங்கே நடுத்தரக் குடும்பத்துப் பெண்கள் பணம் சம்பாதிப்பதில்லை. அந்த நாடுகளில் ஒவ்வொருத்தியும் ஆவலோடு ஏதாவது ஒரு வேலை செய்து பணம் சம்பாதிக்கிறாள். ஒரு ஸ்விஸ் கிழவியை நான் சந்தித்தேன். அவளுக்கு வயது தொண்ணூற்றைந்து. அவள் சின்னஞ் சிறு புத்தகங்களும் படங்களும் விற்று ஜீவிக்கிறாள். அவளுடைய உழைப்பைக் கண்டு எனக்கு அதிசயமாகத்தான் இருந்தது.

இங்கிலாந்தில் தபால்காரர்கள் கிறிஸ்துமஸுக்கு விடுமுறை எடுத்துக்கொள்வார்கள். அப்போது பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் தபால் பட்டுவாடா செய்து பணம் சம்பாதிக்கிறார்கள். நம்மைப்போலவே அந்த நாட்டு மக்களுக்கும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பணம் போதாமை, கிராக்கி விலை, இடமும் உணவுப் பண்டமும் கிடைக்காத சிரமம் - இப்படி எத்தனையோ இடையூறுகளை அவர்கள் எதிர்க்க வேண்டியிருக்கிறது. இங்கிலாந்தில் இன்று வேண்டிய அளவு ரொட்டி கிடைப்பதில்லை;

ஐரோப்பாவில் எங்கே போனலும் ஒரு கப் டீ ஒன்றரை அல்லது இரண்டு ரூபாய்க்குக் குறைந்து கிடைப்பதில்லை.

அங்குள்ள பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சம்பாதிக்கிருர்கள். நம் நாட்டைப்போல அவர்களை யாரும் வீட்டுக்குள் எதிர்ப்பதில்லை; வெளியிலும் பரிகாசம் செய்வதில்லை. சம்பாதிக்கும் பெண்களுக்கு ஆண்களும் கூடிய மட்டும் உதவுகிருர்கள். பாத்திரம் அலம்புவது, குழந்தைகளைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது, மேஜையைச் சுத்தம் செய்வது - இவைபோன்ற வேலைகளை ஆண்கள் ஆனந்தமாகச் செய்கிருர்கள். சாப்பாட்டு விஷயத்திலும் நம் ஊரைப்போல இல்லை. காலையில் வீட்டில் பலகாரம் செய்தால், பகற் சாப்பாட்டுக்கு ஆணும் பெண்ணும் ஹோட்டலுக்குப் போகிருர்கள். தவிர, அவர்களுக்குச் சமையலும் சுலபம். ரொட்டி, ஸூப், பழம், 'டின்'களில் சேமித்த உணவுப் பண்டம் இப்படிப் பல பொருள்களை அவர்கள் கடைகளிலேயே வாங்கிக்கொள்கிருர்கள்.

நம் நாட்டைப்போல அல்லாமல் அங்குள்ள பெண்களுக்குப் பல துறைகளில் வேலை கிடைக்கிறது. ஹோட்டல், பஸ், டிராம்களிலும் கடைகளிலும் அவர்கள் வேலை செய்கிருர்கள். வேலைக்குப்போகும் பெண்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள, 'சிறுவர் இல்லங்கள்' இருக்கின்றன. ஆகையால், அந்தப் பெண்கள் கவலையின்றி வேலை செய்கிருர்கள். கடைகளில் பண்டம் விற்கும் பெண்கள் எப்போதும் துறுதுறுப்பாகவும் சிரித்த முகத்தோடும் இருக்கிருர்கள். நாம் ஒரு பொருளை வாங்காவிட்டாலும் கூட அவர்கள் முகத்தைச் சிடுத்துக்கொள்வதில்லை. அவர்களுக்குத் துளியும் சோம்பல் கிடையாது; யாரோடும் மரியாதையாக நடந்து கொள்கிருர்கள். அவர்களுடைய இந்தக் குணங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

குடும்ப வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், இத்தாலியிலும் ஸ்விட்ஜர்லாந்திலும் ஆணதான் வீட்டுக்குத் தலைவன். பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் மட்டும் ஆணும் பெண்ணும் குடும்பத்தில் சமமாகவே பழகுகிருர்கள். ஒருவருக்கு மற்றவர் உதவி செய்கிருர்கள். காதலுக்குப் பிறகு மணம் என்பது இவர்களுக்குச் சர்வ சகஜம். ஆனல் நாம் நினைப்பது போல இவர்களுடைய ஒழுக்கம் கெட்டுப்போயிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆணும் பெண்ணும் எப்போதும் தொழில் செய்வதில் கடுமையாக முனைந்திருப்பதனல், கட்டுப்பாடு இல்லாமல் காதல் லீலைகள் புரிய இவர்களுக்கு ஓய்வோ சந்தர்ப்பமோ பெரும்பாலும் கிடைப்பதில்லை. நன்மையோடு எங்கும் தீமை இருப்பதுபோல, அங்கும் சில சமயம் விவாக ரத்து, மணமாகாமல் குழந்தை பெறுவது முதலிய நிகழ்ச்சிகள் நடப்பது உண்மை தான்.

ஐரோப்பியப் பெண்கள் கர்ப்பத் தடைக்கு ஆதரவு அளிப்பதாகத் தோற்றவில்லை. போரில் மக்கள் மாண்டமையால், குடும்பத்தைக் குறைப்பதைவிட வளர்ப்பதையே அவர்கள் பெருமையாகக் கருது கிருர்கள். வருங் காலத்தில் புகழ்

பெற்று விளங்கக்கூடிய விஞ்ஞானி களையும் கவிகளையும் கலைஞர்களை யும் நாம் கர்ப்பத் தடையினல் வரவொட்டாமல் தடுப்பது சரி யன்று என்பது அவர்களுடைய கொள்கை. கல்யாண வயதுள்ள ஒவ்வொரு பெண்ணும் தனக்கு ஏற்ற ஒருவனைத் தேர்ந்தெடுத்து மணந்துகொள்ளவே ஆசைப்படு கிருள். கல்வியும் பணமும் பெறு வதைவிட இன்று அவர்கள் இல் வாழ்க்கையை நடத்துவதில் அதிக ஆவல் கொண்டிருக்கிருர் கள். ஆண்களைவிடப் பெண்களின் எண்ணிக்கை ஐரோப்பாவில் குறைவு. ஆகையால், அவர் களுடைய இந்த ஆவல் நியாயந் தான் என்று தோன்றுகிறது. ஆணேடு போராடுவதைவிட அவ னுக்கு உதவி செய்யும் குணமே இந்தப் பெண்களிடம் இருக்கிறது. இன்னும் கேட்டால் சில சமயம் இவர்கள் ஆணுக்கு அடங்கியும் நடந்துகொள்ளுகிருர்கள்.

நம் நாடு அமைதியான முறை யில் விடுதலை பெற்றிருப்பதனல், ஐரோப்பியப் பெண்கள் எல்லா ருமே நம்மிடம் மதிப்பும் அன்பும் வைத்திருக்கிருர்கள். உலக மெங்குமே இன்று பெண்கள் சகோ தரிகளாகப் பழகும் மனப்பான்மை வளர்ந்துவருகிறது. நம்மிடம் அவர்கள் அன்பு கொண்டாடு வதற்கு இதுவும் ஒரு காரணம். அவர்களைப்பற்றி நாம் அதிக மாகத் தெரிந்துகொள்ள ஆசைப் படுவதுபோலவே அவர்களும் நம் மைப்பற்றி அறிய ஆவலாக இருக் கிருர்கள். ஆனல் நாம் என்ன தான் உலகம் முழுவதும் சுற்றி வந்தாலுங்கூட நம் வீட்டிலே இருக்கும் சுகம் எங்குமில்லை என் பதுதான் நான் கண்டறிந்த உண்மை.

சரியான பதில்

அலெக்ஸாண்டர் மோஸ் என்ற பிரபல பிரெஞ்சு நாவ லாசிரியரை, தலைக்கனம் கொண்ட ஆசாமி ஒருவர் சந்தித் தார். ஆசிரியரை மட்டந் தட்ட எண்ணி, "மிஸ்டர் மோஸ், உங்கள் மூதாதையரைத் தெரியுமோ? அவர்கள் ஜாதி மட்டமாமே!" என்ருர் ஆசாமி.

மோஸ் அமைதியாக, "ஆமாம்" என்ருர்.

"உங்கள் தகப்பனர்?"

"காட்டு ஜாதியினர்."

"தாத்தா?"

"நீக்ரோ."

"தாத்தாவுக்குத் தாத்தா?"

மோஸ் பொறுமை இழந்துவிட்டார். "அவர் ஒரு வாலில்லாக் குரங்கு. ஆனல், ஒன்று: என் வம்சம் ஆரம்பித்த இடத்தில் உங்கள் வம்சம் முடிந்துவிட்டது. அது தெரியுமோ உங்களுக்கு?" என்ருர்.

—'ஃப்ரீ இந்தியா'

எத்தனையோ காட்சிகள் இயற்கையிலே ஒளிர்கின்றன. அத்தனையிலுந்தான் எத்தனை அழகு!

அழகின் பல வடிவம்

மதன் கோஷ்

அழகு எப்படி இருக்கும் தெரியுமா? எந்த வடிவத்தில் வந்து அது நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும், யாராவது சொல்வீர்களா?

வானத்தில் கருமேகம் கவிந்து இருண்டிருக்கிறது. இங்கு மங்கும் மின்னல் வெட்டுகிறது. புயல் கிளம்புகிறது. மண்ணை வாரி இறைத்துக்கொண்டு குளிர்ந்த காற்று வீசுகிறது. கூட்டை இழந்து தவிக்கும் காக்கைகள் மொட்டைப் பனை மரங்களின் உச்சியில் பரபரப்போடு உட்கார்ந்திருக்கின்றன.

அண்டை வீட்டுக் கிழவி முற்றத்தில் உலரவைத்த மாம்பழச் சாற்றையும் ஊறுகாயையும் அவசரம் அவசரமாக எடுத்துப் போகப் பார்க்கிறாள். மாட்டைத் தேடிக்கொண்டு ஒருத்தி கவலையோடு வயல் வெளியை நோக்கிப் போகிறாள். ஜன்னல் கதவுகள் படபடவென்று அடித்துக்கொள்கின்றன. எங்கும் இயற்கையன்னை வெறிபிடித்துச் சிரிக்கும் ஓசை!

தான்தோன்றிப் போக்கிரித்தனங்கொண்ட அழகின் வடிவத்தைப் பார்த்தீர்களா?

செப்புத்தகடு போன்ற வானத்தில் உச்சி வேளைச் சூரியன் நெருப்பை வாரி இறைக்கிறான். தொலைவில் வயல் வெளிகளில் கானல்நீர் தெரிகிறது; ஆயினும் எங்கும் ஒரு துளிநீர் கண்ணில் படவில்லை. சோர்ந்துபோய் வழிப்போக்கன் பாட்டையில் சென்றுகொண்டிருக்கிறான். ஓர் ஈ, காக்கையைக் காணவில்லை. கோடையின் வெப்பக்காற்று உடல் கொதிக்கும்படி வீசுகிறது.

அழகின் உக்கிர வடிவத்தைப் பார்த்தீர்களா?

நீலக் கடலின் நீர் அடிவானத்தைத் தொடுகிறது. இரண்டும் ஒன்றை ஒன்று அணையும் அந்த இடத்தில் சமநிலையையே காண்கிறோம்; அங்கே அலை இல்லை; குமுறல் இல்லை; பரமசாந்தி திகழ்கிறது. ஆனால் இக்கரையில் நமக்கு அருகில் அலைமேல் அலை வந்து வெண்ணுரையைக் கொப்புளித்துச் சிதறுகிற காட்சி.

சட்டென்று சூறாவளி கிளம்புகிறது. அதனால் அலைகள் கொந்தளித்து எழுகின்றன. தொலைவில் கடலும் வானமும் தொடும் காட்சி மெல்ல மெல்ல மங்கி வருகிறது. கடல் முழுதுமே பயங்கரமாகச் சீறி எழுகிறது. இதைக் காணும்போது மனித உள்ளத்தில் அச்சம் மூள்கிறது. மூச்சை அடக்கியபடி மகாசக்தியை அவன் தியானிக்கிறான்.

காப்பிரைட்: பாரதவர்ஷ (வங்காளி; மே '54), கல்கத்தா.

இயற்கை அழகின் பயங்கர வடிவைப் பார்த்தீர்களா?

மலைகளின் உச்சி அடிவானத்தில் எங்கோ மங்கி மறைந்துவிட்டது. மேகம் கூடி அங்கங்கே சில இடங்களில் மழை பொழிகிறது! சில இடங்களில் காற்றில் சிக்கி மேகம் ஒடுங்கிக் கிடக்கிறது. மலையிலிருந்து மழைநீர் வழிந்து, நில மடந்தையின் பசுமையான மார்பகத்தை நனைத்து இருகரைகளையும் செழிக்க வைக்கும் தெள்ளிய ஆறுய்ச் செல்கிறது.

மறுபடி மலை யுச்சி தெரிகிறது. பெரிதும் சிறிதுமான பசுமரங்கள் கண்ணுக்கினிய காட்சியளிக்கின்றன. எங்கும் அமைதி நிலவுகிறது.

அழகின் அமைதி நிரம்பிய அடக்கமான வடிவைப் பார்த்தீர்களா?

வானத்தில் இப்போது மேகம் இல்லை. ஆயினும் வெயில் அப்படி உறைக்கவில்லை; உடம்புக்கும் இதமாகவே இருக்கிறது; மனத்தில் ஒருவிதத் தண்மையும் நிம்மதியும் ஏற்படுகின்றன. பறவைகளின் இன்னிசை கேட்கிறது. எங்கும் கொத்துக் கொத்தாக மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. மென்மையாகத் தவழ்ந்துவரும் காற்றில் அவைகளின் மணமும் கலந்து வருகிறது. இரவு நிலவு பொழியும்போது எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது!

காதலர் உள்ளத்திலும் அந்த இனிமை பிரதிபலிக்கிறது. உள்ளூற மகிழ்ந்து குலாவுகிறார்கள்..... இளவேனில் வந்துவிட்டது....!

அழகின் இனிய வடிவைப் பார்த்தீர்களா?

அறிவே துணை

யேமன் ராஜ்யத்துக்கு முஆது என்பவரைக் கவர்னராக நபிகள் நாயகம் நியமித்தார். அப்போது, "எந்தச் சட்டத்தைக் கொண்டு உம் கீழ் உள்ள மக்களை நிர்வகிப்பீர்?" என்று அவரை நாயகம் கேட்டார்.

"திருமறையின் சட்டத்தைக் கொண்டு" என்று முஆது பதிலளித்தார்.

"ஆனால் திருமறையிலிருந்து உமக்குச் சரியான வழி துலங்கவில்லையானல், என்ன செய்வீர்?" என்று நபிமணி மீண்டும் கேட்டார்.

"நபி பிரானின் வாழ்க்கை முறையைப் பின்பற்றி நடந்துகொள்வேன்" என்ற பதில் கிடைத்தது.

"அதிலும் முன்மாதிரியான ஒரு தீர்ப்பை நீர் காணவிட்டால்?"

"என் சொந்த அறிவின்படி நடந்துகொள்வேன்."

இந்தப் பதிலைக் கேட்டதும் நபிமணியின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது. "தம் தூதரின் பிரதிநிதிக்கு நல்வழி காட்டும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என்று துதித்தார்.

—அல். பாரூக், 'மணிவிளக்கு,' மதராஸ்—1.

சிறுகதை

நந்தி

[மஞ்சேரி எஸ். ஈச்வரன்]

சென்னை நகரில் பசும் பால் வாங்கும்போது, ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழும் வேதனைதான் இந்தக் கதையின் விதை. 'அநாமி' என்ற புனைபெயருடன் நேர்த்தியான 'ஸ்வதந்த்ரா' மலரில் இதை எழுதியிருக்கிறார் பிரபல எழுத்தாளர் ஈச்வரன். இதில் உள்ள வனப்பு மிக்க படங்கள் இரண்டும் ஓவியர் எச். வி. ராம்கோபால் வரைந்தவை.

தும்பினால் மரமுளையில் அதைக் கட்டியிருந்தது. தன் இனத்திலே மிகச் சிறந்த ஒன்றாக விளங்கிய அது, கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. ஆரோக்கியமான தவிடும் பருத்திக் கொட்டையும் தின்ற ஈரப்பசை அதன் மூக்கிலே படர்ந்திருந்தது. கடலலையில் கொழித்தெழும் நுரை போலும், தானே கொடுக்கும் பால் போலும் வெள்ளை வெளேர் என்று அது துலங்கியது. அதன் வலது விலா எலும்புகளுக்குச் சிறிது தள்ளிச் சின்னஞ்சிறு மச்சம் ஒன்று இருந்தது. பிராணி சாஸ்திரம் தெரிந்தவர்களின் கருத்துப்படி இது ஒரு சுப லட்சணமாகும். அதன் சின்னஞ் சிறு கொம்புகள் கூம்பி வளைந்திருந்தன. மடி தாராளமாயிருந்தது. காதுகள் சிவந்து பட்டுப்போல் மிருதுவாயிருந்தன. கருநீலக் கண்கள் விசாலமாயிருந்தன. வால் நீண்டு கறுத்த மயிர் அடர்ந்திருந்தது. அது மகா சாந்தமாயிருந்தது; பத்தினிப் பெண்ணைக்கூடத் தோற்கடிக்கும் அவ்வளவு சாந்தம்! காமதேநு என்ற பெயர்தான் அதற்கு எவ்வளவு பொருத்தமானது! தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது வெளிவந்ததல்லவா காமதேநு? வீட்டினர் அனைவரும், ஆண் பெண் குழந்தை அடங்கலும், அதைக் காமதேநு என்றே அழைத்தார்கள்.

மெதுவாக வாலை முதுகின் இருபுறமும் சுழற்றி ஈக்களை விரட்டிக்கொண்டும் பக்கத்திலே தரையில் சுருண்டு படுத்திருந்த கன்றின் உடலைக் குனிந்து நக்கிச் சுத்தம் செய்துகொண்டும் நின்றது காமதேநு. அதன் கழுத்தில் கட்டியிருந்த பிரகாசமான பித்தளைச் சங்கிலியில் கோத்திருந்த சின்னஞ் சிறு மணி, அது குனியும் போதெல்லாம் கணகண என்று சப்தித்தது. இந்தக் கன்று அதன் முதல் ஈற்று. சிறிது நேரம் கன்றை நக்கியபின், அதை விட்டுவிட்டு, மூக்கைச் சுறுசுறுப்புடன் அசைத்து, கீழே கிடந்த புல்லில் ஒரு வாய் கவ்வி, மென்று அசை போடத் தொடங்கியது.

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: ஆண்டு மலர் '53), சென்னை.

கன்று காளைக் கன்று; ஒன்பது மாதக் கன்று. பழுப்பு உடலிலே வெள்ளையும் கறுப்பும் கலந்து மிக அழகாயிருந்தது. வீட்டாருக்கு நந்தியாக அது விளங்கியது. முன்னங்கால்களின் மீது தலையை வைத்து, உடலைச் சுருட்டிக் கொண்டு, பாதிக்கண் மூடியபடி நந்தி படுத்திருந்தது. தாயின் நாக்குத் தன் உடலைத் தடவக் கிடைத்த இன்பப் போதையிலே வெகு சுகமாக அது உறங்கிக் கொண்டிருந்தது. நந்தி வெகு விரைவாக வளர்ந்துவிட்டது. அதன் தலையிலே ரோமம் அடர்ந்திருந்தது. அதற்கிடையிலே தழைகளின் நடுவே எட்டிப் பார்க்கும் பூ மொட்டுக்கள் போன்ற இரு சிறு கொம்புகள் தென்பட்டன. ஒரு சமயம் அதன் தாயின் குளம்பை ஏதோ சிறு நோய் பீடித்தது. அப்போது அதைப் பரீட்சித்துப் பார்க்க மிருக வைத்தியர் ஒருவர் வந்தார். வந்தவர் நந்தியை வெகுநேரம் உற்றுப் பார்த்தார். அதன் தலையை, தம் கைகள் என்னவோ ஒருவிதமாய் நடுங்கியபடி தடவினர். அப்படியே விலாவைத் தடவினர்; முதுகைத் தடவினர்; இடையையும் தடவினர்—அப்பாடா! அப்போதுதான் என்ன குறுகுறப்பாயிருந்தது நந்திக்கு! அது எப்படித்தான் தன் வாலை விறைத்துக் கொண்டது! வைத்தியருக்கும் வீட்டு எஜமானருக்கும் நடந்த சம்பாஷணையை நந்தி கேட்டது. அவர்கள் வெகு சரளமாய்ப் பேசியதிலிருந்து, இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்று அதற்குத் தெரிந்தது.

"அருமையான ஜாதி இது—இந்தக் கன்று." (வைத்தியர் சொன்னது இது.)

"உம்." (எஜமான் பதில்.)

"நல்ல பொலி காளையாக இருக்கும். உங்களுக்கு ஆட்சேபமில்லையானால் நான் வாங்கிக்கொள்ளுகிறேன்."

"பார்க்கலாம்; இதற்குள்ளே என்ன வந்தது?"

"இனவிருத்தி வேலைக்கு என்கிறீர்களா?"

வைத்தியர் கலகல என்று சிரித்தார். எஜமான் புன்முறுவல் செய்தார்.

இந்தச் சம்பாஷணை ஞாபகத்துக்கு வந்தவுடனே, நந்தி புரண்டு, தலையை நிமிர்த்தியது. அதன் கண்ணெதிரே தோன்றியது ஓர் உருவம்: கிழக் கண்ணன்தான் அது. அவன் குனிந்து, குழாயிலிருந்து இரண்டு வாளி நிறையத் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தான். நந்தியையும் அதன் தாயையும் வழக்கம்போல மாலையில் குளிப்பாட்டிவிடத்தான் அந்தத் தண்ணீர். நந்தி காதை நெரித்துக் கொண்டு, மறுபடியும் பார்த்தது. தங்களைக் கவனித்துக்கொள்ளும் மற்றொரு வேலையாளையும் கண்டது. தமாஷாகத் தலையை அசைத்துக்கொண்டு எழுந்தது. கண்ணனிருந்த பக்கம் நோக்கி நடக்க முயன்றது. ஆனால், அதை ஏதோ பின்புறம் இழுத்தது. தாயின் முளையிலே தானும் பிணைப்புண்டிருப்பது அப்போதுதான் அதற்கு ஞாபகம் வந்தது. அதன் உள்ளத்திலே சிறிது கோபம் குமுறி எழுந்தது. தன் ஆண்மைக்கும் சுதந்தரத்துக்கும் இப்படி ஒரு தடை என்றால் பின்னே கோபம் வராதா? தும்பை இழுத்து இழுத்

துப் பார்த்தது; ஆனல் என்னவோ அறுக்கவில்லை.

"என்ன சங்கதி?" என்று விசாரித்தது தாய்.

"ஒன்றும் இல்லை. கண்ணனோடு கொஞ்சம் விளையாட எண்ணினேன்."

"விளையாட்டா?"

"ஆமாம்; கொஞ்சம் தமாஷாக இவனைப் போட்டுப் புரட்டியிழுக்க ஆசையாயிருக்கிறது. இந்தக் கிழப்பாவிக்கு அதனலே கொஞ்சம் புத்தி வரும்."

"பாவியா?"

"உம்!" என்று நந்தி மெல்லச் சிரித்துக்கொண்டே, "அது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டது.

"எது?"

"நீங்கள் பசுத் தாய்மார்கள் இருக்கிறீர்களே, உங்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. அடுத்த வீட்டுக் கன்றுக்குட்டி சுதா இருக்கிறனே, அவன் சில நாளைக்குமுன் அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தான்: இந்தக் கண்ணன் பெரிய அயோக்கியனும்; ஈர இரக்கமே இல்லாதவனும். அநேகம் கன்றுக்குட்டிகளை இவன் கொன்றிருக்கிறனும். ஆனல், அவற்றின் தாய்மார்களான பசுக்களை மட்டும் பால் கறந்துவிடுகிறனும்."

"எப்படி?"

"கன்றின் தோலிலே வைக்கோல் அடைத்துவிடுகிறன். நான்கு மூங்கில் குச்சிகளைக் கால்போல் செருகிவிடுகிறன். உன் மாதிரி அப்பாவிப் பசுக்களின்முன் வைத்துவிடுகிறன். பசுக்கள் அதை மோந்து பார்த்து, வாலைக் குழைத்து, நீர் விட்டு, மடி சுரந்துவிடுகின்றன. ஒரு சொட்டு விடாமல் அந்தப் பாலைக் கறந்து, 'மில்க் பார்' என்ற கடைக்குக் கொண்டு போய்விடுகிறர்கள். கன்றுக்கு ஒரு சொட்டுப் பாலும் விடுவதில்லை."

"மில்க்பாரா? அதென்ன?"

"அதுவா? அது அமெரிக்காக்காரர்கள் கொண்டுவந்த எத்தனையோ சங்கதிகளில் ஒன்று. 'மில்க்பார்' என்ற இடத்தில், பாலையும் பாலிலிருந்து எடுத்த வேறு பண்டங்களையும் விற்பார்கள். அங்கே பாலைக் கிளாஸில் ஊற்றி, வைக்கோல் தட்டை மூலம் ஜனங்கள் உறிஞ்சிக் குடிக்கிறர்கள்."

"பாலைக் குடித்தபின் வைக்கோலையும் தின்றுவிடுவார்களோ?" என்று கேட்டது காமதேநு.

"நல்ல வேளையாக இன்னும் அதைத் தின்ன ஜனங்கள் ஆரம்பிக்கவில்லை. கொஞ்சகாலம் போனல் அதையும் தின்ன ஆரம்பித்து விடுவார்கள். இல்லையென்று யார் கண்டார்? கண்ணன் தன் வயசில் எத்தனையோ தோல் கன்றுக்குட்டிகளை மரக்கிளைகளில் மாட்டியிருக்கிறனும். நச்சுக்கொடிகளைக் கந்தையில் கட்டி மாட்டுவதுமாதிரிதானும் இதுவும் இவனுக்கு."

சிறிது நேரம் பேச்சில்லை. தான் நந்தியை ஈன்ற காலம் காமதேநுவுக்கு ஞாபகம் வந்தது. நந்தி பிறந்தபின் நச்சுக்கொடி வெளிவருவதற்கு முன்பு மீண்டும் அதேபோல் பெரும் வேதனை அநுபவிக்கவேண்டியிருந்தது. ஆனல், அப்போது காமதேநுவின் எஜமானக இருந்தவன் ஒரு குடியானவன். அவன் மிக நல்லவன். நச்சுக் கொடியை ஆழக் குழிவெட்டி

அவன் புதைத்துவிட்டான்; போவோர் வருவோரெல்லாம் அந்தக் கோரத்தைக் கண்டு கண் புதைக்கும்படி மரக்கிளைகளில் கட்டிவைக்கவில்லை.

“என்ன யோசனை பண்ணுகிறாய், அம்மா?”

“உனக்குத் தெரியாதது ஒன்றில்லை, நந்தி.”

“நான் சுதந்தர இந்தியாவில் பிறந்தவன் இல்லையா, அம்மா? வயசானவர்களும் கிழவர்களும் என்ன நினைத்தாலும் சரிதான், என் தலைமுறைக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. என்னை அகம்பாவம் பிடித்தவன் என்றா நினைக்கிறாய்?” இப்படிச் சொல்லிய நந்தி, வெல்வெட்போல் மிருதுவாய் மடிப்புவிழுந்த தாயின் கழுத்திலே அன்போடு தலையை மோதி உராய்ந்தது.

“உன்னைக் கண்டு எனக்குப் பெருமை பூரிக்கிறது, நந்தி. ஆனால், கண்ணனை விட்டுவிடு. அவன் போனால் போகிறான்.”

“அவன் பொல்லாதவன்; சூழ்ச்சிக்காரன், அம்மா. அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும். நம் எஜமானைவிட அன்பான வேறொருத்தர், நல்ல மனிதர் இந்த உலகத்திலேயே யாரும் இல்லை. நீ கறக்கிற பால் போதாதென்று, அவர் மனத்தையே இவன் கெடுக்கப் பார்க்கிறான். காலையிலும் மாலையிலுமாக நாள் ஒன்றுக்கு நீ ஐந்து படி பால் சுரக்கிறாய். மூன்று படியை எஜமான் கறந்துகொள்கிறார்; மீதியை எனக்கு விட்டுவிடுகிறார். இது கண்ணனுக்குப் பிடிக்கவில்லை; காபி ஓட்டலுக்குப் பால் ஸப்ளை செய்வதிலேயே இவன் கண்ணாயிருக்கிறான். அந்த இரும்பு வால் பசு இருக்கிறதே - அதுதான் பம்புக் குழாய் - அது இவனுக்குப் பெரிய தோழன். ஆனால், எஜமானிடம் இவனுக்குப் பயம். திருட முடியவில்லை. திருடினால் அடுத்த நிமிஷமே இவனுக்குக் கல்தா கொடுத்து விடுவார். இவன் என்னைப் பார்க்கிறபோதெல்லாம், இவன் கண்ணிலே கொலைபாதகத்தனம் தாண்டவமாடக் காண்கிறேன். நிஜமாகவே இவன் ரொம்பப் பொல்லாதவன், அம்மா. இவனுக்குப் புத்தி கற்பிக்கத்தான் வேண்டும்.”



அப்போது மெல்லிய குரலில் ‘அம்மா’ என்று கத்தி, மெல்லத் தலையைச் சாய்த்தது காமதேனு. கண்ணன் வருகிறான் என்பதைத்தான் இப்படி அது நந்திக்குக் கவனப்படுத்தியது. இரண்டு கைகளிலும் இரண்டு வாளிகளைத் தூக்கியபடி, இவைகளுக்கு அருகே அவன் வந்துகொண்டிருந்



தான். இவைகளின் வலது பக்கம் சில கஜ தூரத்துக்கு அப்பால் ஸிமெண்ட் போட்டிருந்த ஓர் இடத்தில் வாளிகளை வைத்தான். அங்கேயே இவைகளைக் குளிப்பாட்டுவது வழக்கம். அதற்கருகில் ஓர் அடி ஆழத்தில் ஜலதாரை இருக்கிறது. குளிப்பாட்டிய தண்ணீர் அதில் ஓடிவிடும். கண்ணன் வந்து முதலில் நந்தியைக் குளிப்பாட்டுவதற்காக அதன் தும்பைப் பிடித்து முளையிலிருந்து அவிழ்த்தான். நந்தி அசையமாட்டேன் என்று வெகு உறுதியாக நின்றது. இந்தக் கிறுக்குத்தனத்தைக் கண்டு கண்ணனுக்கு எரிச்சல் வந்தது. தன் முழங்கையால் நந்தியின் தொந்தியில் 'கும்' என்று ஒரு முட்டு முட்டினான். உடனே அந்தச் சிறுவிலங்கு தலையைச் சிறிது தாழ்த்தி வலது முன்னங் காற்குளம்பைத் தரையிலே தேய்த்தது; பிறகு இடது முன்னங் காலைத் தூக்கி முன்புறமாகத் துள்ளிப் பாய்ந்து பின்பு பின் வாங்கி, கண்ணனின் ஆசனத்தைப் பார்த்துப் பலமாய் முட்டி, அவனைக் கீழே தள்ளி உருட்டியது. நந்தியின் நாசித் துவாரங்கள் அகன்று 'உஸ்' என்று சீறும் மூச்சுக் காற்றுக் கிளம்பியது. அதன் உடல் நரம்புகளெல்லாம் புடைத்து நின்றன. அதன் ரத்தத்திலே நூறு பிசாசுகள் கூடி நர்த்தன மாடுவது போலக் கொதித்தது. இத்தனைக்கும் கண்ணன் தும்பை விடவில்லை. பிடித்தது பிடித்தபடியே

இந்த மூர்க்க விலங்கை அடக்க முயன்ருன். ஆனல், இதன் பலத்தை அவனல் சமாளிக்க முடியவில்லை. கண்ணனை நந்தி கீழே போட்டுப் புரட்டியது. கல்லும் புல்லும் அவன் மார்பு, புஜம், முகம், விரல், கால் எங்கும் குத்திச் சிராய்த்தது; துணி கிழிந்து, ரத்தமும் சேறும் தோய்ந்து, அவன் மார்பிலிருந்து அகன்று கீழே விழுந்தது. கடகட வென்று அவன் உருண்டான். வலியோ தாங்கவில்லை. அப்படியும் அவன் பிடித்த பிடியை விடவில்லை. தன் முழுப்பலத்தோடும் தும்பைக் கொஞ்சங் கொஞ்சமாக இழுத்து, நந்தியின் பிடரியைக் கைப்பற்ற முயன்ருன். ஆனல், அவன் முயற்சி பலிக்கவில்லை.

காமதேநு சிறிது நேரம் மௌனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தது. இனி இது விளையாட்டல்ல; தன் மகனின் செயல் மிஞ்சிப் போய் விட்டது. மெல்ல வருத்தத்தோடு குரல் கொடுத்தது. பிறகு காளை போல், 'அம்மா' என்று உரக்கக் கத்தியது. அது நந்தியின் காதில் விழுந்தது. அதே சமயம் அதன் தும்பைப்பற்றிய கிழவனின் பிடியும் தளர்ந்தது. இரண்டுமே அபாய எச்சரிக்கைகள்: ஒன்று, உரக்க வந்தது; மற்றது மௌனமாய் வந்தது. மூர்க்க வெறி பிடித்திருந்த அச்சமயத்திலும், நந்திக்கு இரண்டும் புரிந்தன. அது சட்டென்று அமைதியுற்று நின்றது.

எஜமான் வந்தபோது, கண்ணனை நகரத்து ஆஸ்பத்திரியில் கண்டார். முடக்குவாதம் வந்துவிடாதிருப்பதற்காக அவனுக்கு 'இஞ்செக்ஷன்' போட்டார்கள். அவனுக்கிருந்த 'இசிவு வலி'யில் அது ஏதோ எறும்பு கடித்தது போல் இருந்ததேதவிர, வேறென்றும் தெரியவில்லை. கண்ணனுக்குப் பிரக்ஞை வந்தபோது, பக்கத்தில் எஜமான் நிற்பதைக் கண்டான். அவருடைய அன்பு மொழிகளும் ஆறுதல் வார்த்தைகளும் அவனை மறுபடியும் உறக்க மயக்கத்தில் ஆழ்த்தின. இதெல்லாம் ஏதோ கெட்ட கனவுபோல் அவனுக்குத் தோன்றியது. நிஜமாகவே எஜமான்தான் அவன் படுக்கை அருகே நிற்கிருரா? காளைக்கன்று அவனை முட்டிப் புரட்டியபோது, அவர் ஊரிலே இல்லை. இப்போது இதோ வந்திருக்கிருர்...

ஆஸ்பத்திரிக்கு அவன் வந்து ஐந்து நாளாயிற்று. காயங்கள் சீப் பிடிக்கவில்லை. சுத்தமாக இருந்தன; ஆறி வந்தன. அவைகளுக்குப் பிளாஸ்டர் போட்டிருந்தார்கள். அவனை ஆஸ்பத்திரியிலிருந்து விடுவித்துவிட்டார்கள். ஆனல், வலது கண்ணுக்குக் கீழே கன்னத்து எலும்பு பெயர்ந்து ஆழமான காயம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதற்குக் கட்டுக் கட்டிக்கொள்வதற்காக இன்னும் ஒரு வாரகாலம் தினந்தோறும் அவன் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும் என்று ஸர்ஜன் சொன்னர். கண்ணன் ஆஸ்பத்திரியில் கிடந்தபோது, அவனுடைய எஜமான் அவனிடம் அன்பாய் நடந்துகொண்டார். அவனுக்கு அது தெரியுமோ? நன்ருய்த் தெரியும். ஆனல், இனிமேல் காயம் எப்படிப் போனலும் அவனுக்குக் கவலையில்லை. அது எவ்வளவு நாளில் ஆறுமோ? அதைப்பற்றி அவனுக்கு அக்கறையில்லை. வாழ்க்கையே அவனுக்கு வெறுத்துப் போய்விட்டது. திடீரென்று

அவன் மனத்தில் ஓர் ஒளி உதயமாயிற்று. பசுக்களுக்கு அவன் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை. கன்றுகளைப் பட்டினி போட்டுக் கொன்ருன். அவைகளுக்கு அவற்றின் தாய்ப் பாலை விடாமல் கறந்தான். மகா பாவி அவன்! தெய்வம் கருணை காட்ட அவன் தகுதியற்றவன். தன்னை மறந்து ஒரு மயக்கத்தில் அவன் ஆழ்ந்தான்...

இதற்கு முன் ஒருபோதும் இந்த மாதிரி அவன் நடந்து கொண்டதில்லை. நகரத்துக்கு வந்து, அதன் கொடிய பழக்கங்களைக் கற்றுத்தான் அவன் இப்படி ஆகிவிட்டான்.

கிராமத்திலே மாடு மேய்க்கும் ஆயனாக இருந்த காலம் அவனுக்கு ஞாபகம் வந்தது. செங்கல்பட்டுக் கிராமம் அவன் பிறந்த ஊர். அதன் பசும்புல் வெளியான மேய்ச்சல் தரை அவன் கண்முன் விரிந்தது. அதில் அங்கங்கே புள்ளி வைத்தாற்போல் பசுக்களும் கன்றுகளும் மேய்ந்துகொண்டிருந்தன. முழங்கால் அளவு புல் வளர்ந்து, கடலைபோல் ஆடிக்கொண்டிருந்தது. சாந்தமான பெண்களைப் போலப் பசுக்கள் மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்க, அவைகளின் கழுத்து மணிகள் 'கிண், கிண்' என்று மெதுவாக ஒலித்தன. கன்றுகள் துள்ளிக் குதித்தோட, அவற்றின் மணிகள் 'கணீர், கணீர்' என்று ஒலித்தன. பரபரப்புடன் தாயின் காலிடுக்கில் புகுந்து மடியை முட்டியபடி கன்றுகள் வர, எல்லாம் வீடு நோக்கித் திரும்பின. குன்றுகளுக்குப் பின்னே சூரியன் மறைந்துகொண்டிருந்தான். பசுக்களை அவற்றின் செல்லப் பெயரால் கண்ணன் கூவியழைத்து ஏதோ சொன்ஞன். அவைகளும் அவன் பேச்சைப் புரிந்துகொண்டது போலத் திரும்பிப் பார்த்து, மெல்ல, 'அம்மா' என்று குரல் தந்தன. கண்ணன் அவைகளுக்கு நடுவே ஆனந்தமாயிருந்தான்; மகிழ்ச்சியோடு அவைகளிடம் பேசினன்; அந்தி மயங்கிய சிற்றொளியில் அவைகளை வீட்டுக்கு ஓட்டிச் சென்ருன். மாடுகள் ஒவ்வொன்ருகப் பிரிந்து தம் தம் வீட்டுக்குச் சென்றன. கண்ணனுக்குச் சொந்தமானவை மூன்று அழகான பசுக்கள். மிகவும் சுத்தமாயிருந்த தங்கள் கொட்டிலுக்குள் அவை புகுந்தன. வைக்கோலும் தவிடும் பருத்திக் கொட்டையும் பிண்ணாக்கும் பருப்புப் பொட்டுகளும் அங்கே மணத்தன. சற்று நேரத்தில் கண்ணன் குந்தி உட்கார்ந்து அவைகளில் ஒன்றைப் பால் கறந்தான். காம்பு காம்பாய்த் தடவிப் பிடித்திழுத்து அவன் கறந்தான். சுரந்த பால் தாரை தாரையாய்ச் செவிக்கினிய கீதம்போல் ஒலி செய்துகொண்டு பாத்திரத்தின் அடிவரைக்கும் பாய்ந்து சுர் என்று நுரைத்து விளிம்புவரைக்கும் பொங்கியது...

இந்தச் சமயத்தில் அவன் முதுகிலே கதகதவென்று மூச்சுக் காற்ருன்று படுவதையும், பஞ்சு போன்ற ரோம உடம்பு ஒன்று தீண்டுவதையும் கண்ணன் உணர்ந்தான். புன்சிரிப்புடன் பால் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு அவன் திரும்பினன். தாயின் மடியருகே போவதற்கு முன் நந்தி தான் இப்படி வந்து, அவன் கன்னத்தை இங்கிதமாய் நக்கிக் கொடுக்கத் தொடங்கியது; அவனுடைய வலது கண்ணுக்குக் கீழே

கன்னத்தை மிக்க அன்போடு நக்கியது. அதில் பூசியிருந்த பிளாஸ்டர் துண்டு கீழே விழுந்தது. அங்கே காயம் பட்ட சுவடே தெரியாமல், ஆறிப் போய்ச் சதை வளர்ந்திருந்தது. கண்ணனுக்கு இனிச் சாக விருப்பமில்லை. கண்மணி நந்தி, அவன் புதுவாழ்வு வாழ அநுமதி கொடுத்துவிட்டது.

போரும் பீதியும்

யுத்தத்தைவிட யுத்த பயமே மனிதனைக் கொன்றுவிடும் போலிருக்கிறது.

ஜனாதிபதி ஆவதற்கு முன்பு ஐஸன்ஹோவர், ஒரு காலத்தில் கொலம்பியா யூனிவர்ஸிட்டியின் தலைவரானார்.

அப்புறம் அவரிடம் ஒரு ப்ரொஃபஸர் சென்று, "தளபதி அவர்களே, நீங்கள் இங்கே வருவதற்குமுன் நாங்கள் என்ன பயம் பயந்துகொண்டிருந்தோம், தெரியுமா?" என்று வெட்கத்தோடு சொன்னார்.

ஐஸன்ஹோவர் சிரித்துக்கொண்டே, "அப்படியா! இங்கே வருவதற்கு முன்பு உங்களைப்பற்றியெல்லாம் நான் என்ன பயம் பயந்துகொண்டிருந்தேன், தெரியுமோ? அதைக் கேட்டால் உங்களுக்கு வேடிக்கையாயிருக்கும்" என்றார்.

—ஏட்ரியன் ஆண்டெர்ஸன்

நல்ல வியாதி !

மகா அலெக்ஸாந்தர் என்ற சக்கரவர்த்திக்கு ஆண்டிகோனஸ்ஸைக்ளாப்ஸ் என்றொரு தளபதி இருந்தார். அவர் ஒரு நாள் தம் மகனுக்கு ஏதோ வியாதி என்று கேள்விப்பட்டு, அவனைப் பார்ப்பதற்காக அவன் இருந்த அறைக்குப் போனார். அறைக்குள்ளே அவர் நுழையப்போகிற சமயத்தில், அழகிய பெண்ணொருத்தி உள்ளேயிருந்து வெளியேறிச் சென்றாள்.

அறைக்குள்ளே போய் மகனைப் பார்த்தபோது, வியாதி எதுவுமின்றி அவன் மிக்க ஆரோக்கியமாயிருப்பதைத் தளபதி கண்டார்.

"அப்பா, என் காய்ச்சல் போய்விட்டது" என்றான் மகன்.

"ஆமாம்; ஆமாம். நான் உள்ளே வந்தபோது அது வெளியே போனதை நானே பார்த்தேன்" என்றார் தளபதி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

வரம் பெற்ற ஒட்டகம்

ஒரு காட்டில் ஒரு பெரிய ஒட்டகம் இருந்தது. அது மிகப் பழமையான குலத்தில் பிறந்தது; நல்ல அறிவுடையது. அது வெகு நாள் வரைக்கும் கடுமையான தவம் செய்தது. அதனுடைய தவத்தைக் கண்டு பிரம்மாவுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

அவர் அதனிடம் வந்து, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"பகவானே, உங்களுடைய அருளினால் என் கழுத்து நூறு யோஜன தூரம் நீண்டதாக இருக்க வேண்டும்" என்று ஒட்டகம் வரம் கேட்டது. பிரம்மா, "சரி" என்றார்.

கழுத்து இப்படி நீண்டதும் ஒட்டகத்துக்குச் சோம்பேறித்தனம் அதிகமாகிவிட்டது. அது இப்பொழுது இரை தேடுவதற்குக் காடுகளில் திரிவதில்லை. இருந்த இடத்திலிருந்தே கழுத்தை நீட்டி இரையைப் பற்றி இழுத்துக்கொள்ளும். சில சமயம் இரை தின்னாமலே நாளைக் கழித்துவிடும். தன் கழுத்தைச் சுமந்துகொண்டு நடப்பதுகூட அதற்குக் கஷ்டமாகிவிட்டது.

ஒரு நாள் அந்தக் காட்டில் பெருங் காற்று வீசியது. ஒட்டகம் தன் கழுத்தையும் தலையையும் ஒரு குகையில் வைத்துக் கொண்டது. சற்று நேரத்துக்கெல்லாம் இடிமுழக்கத்தோடு, உலகத்தையே முழுகச் செய்யும் பெரிய மழை வந்தது. ஒட்டகத்தின் உடல்தான் மழையில் நனைந்ததே தவிர, தலையும் கழுத்தும் குகைக்குள் சுமுக்கமாக இருந்தன.

அந்த மழையில் அகப்பட்டுக்கொண்ட ஒரு நரி தன் மனைவியுடன் எங்கெங்கோ அலைந்து திரிந்து இந்தக் குகைக்கு வந்து சேர்ந்தது. எத்தனையோ நாளாகப் பசியாக இருந்த நரிகள் அவை. களைப்பு வேறு. அதனால் குகைக்குள் நுழைந்ததுமே ஒட்டகத்தின் கழுத்தைக் கண்டு அவை ஆனந்தக் களிப்பு எய்தின. இப்படிப்பட்ட மாமிசத்துக்குத்தானே அவை காத்திருந்தன?

நரிகள் மெதுவாக ஒட்டகத்தின் கழுத்தைத் தின்ன ஆரம்பித்தன. தன் கழுத்துக்கு வந்த ஆபத்தை அப்போது தான் ஒட்டகம் தெரிந்துகொண்டது. அது மிகவும் வருத்தத்தோடு கழுத்தைச் சுருக்க முயன்றது. நூறு யோஜன தூரமுள்ள கழுத்தைச் சுருக்கிக்கொள்வது எளிதான காரியமா? அதற்கு மட்டான நேரமா பிடிக்கும்?

அதற்குள் நரிகள், கழுத்தைத் தின்றுவிட்டன. ஒட்டகத்தின் சோம்பல் அதன் உயிருக்கே உலை வைத்துவிட்டது.

—மகாபாரதம், சாந்தி பர்வம்.

June '54 Regd. No. M. 4975

மஞ்சரி

ஜய - ஆனி

ஊரும் உலகமும்		1
தமிழர் வளர்த்த சிங்களம்	ஸ்ரீலங்கா	3
காயத்திரி	ஆந்திர பத்திரிகா	7
விஞ்ஞானப் புதுமைகள்	பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸ்	10
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	ஃபில்மிண்டியா	13
டில்லி நிருபர்	சுடர்	16
வையகமே வானகம்	ரா. ஸ்ரீ. தேசிகன்	21
பழகி மணம் புரிவோர்	சக்தி	25
கார்ட்டூன் கதம்பம் (படம்)	சங்கர்ஸ் வீக்லி-ப்ளிட்ஸ்	29
உண்மையான பலம்	ஸர்வோதயம்	30
அணு விஞ்ஞானி சங்கடம்	டைம்	33
உலகம் மாற வழி (படம்)	தி ஆஃப்ரிகன் ஈகிள்	42
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	43
கரப்பான் பூச்சி	சௌபாக்கியம்	47
ஏழு பிரபல கைதிகள்		49
பாம்பும் பாட்டும்		53
சீன ஜாலம்		55
வைரமுடி சேவை	பிரஜாமத	57
அதிசய உலோகம்		63
அமிர்தம் தோன்றிய கதை		66
அசோகம் பூ	அமிர்த பஜார் பத்திரிகா	72
ஐரோப்பியப் பெண்கள்	ஸ்த்ரீ	75
அழகின் பல வடிவம்	பாரத வர்ஷ	79
நந்தி (சிறுகதை)	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	81
வரம் பெற்ற ஒட்டகம்		(3-ஆம் அட்டை)